334

# செங்குந்த மித்திரன்

ஆவணி Sept, 1932

5 8

JL
Y592 S4m211,N28
N32.5.8
158901

3 SEP 1932

# செங்குந்தமித்திரன்

தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கத்தின் மாத வெளியீடு

தொகுதி ௫ — பிரஜோற்பத்தி ஸு ஆவணி மீ — பகுதி அ

## உள்ளடக்கம்


| | |
|---|---|
| கடவுள் வாழ்த்து ... | 193 |
| பத்திரிகாசிரியர் முன்னுரை:—பக்கிரியா ? பரமஹம்ஸரா ? ... | 193 |
| குலாபிமானப் பகுதி:—நமது தலைவர்கள் ஊக்கமும், சமூகத் தூக்கமும் ... | 197 |
| இளைஞர் பக்கம்:—மாணவரது முதற்கடமை ... | 202 |
| சீர்திருத்தப் பகுதி :—சமூக சீர்திருத்தம் .... | 203 |
| வர்த்தமானம் ... | 205 |
| சிறுகதைப் பகுதி :—பாரிசவாய்வும் பறந்தோடியதே .... | 206 |
| விகடத் துணுக்குகள் .... | 208 |
| கக்ஷி பேதங்கள் (போட்டிப் பரிசு) .... | 209 |
| ஆன்றோர் அமுதமொழிகள் .... | 212 |
| சிறு குறும்பு .... | 213 |
| மதிப்புரை .... | 214 |
| காந்தியார் படலம் .... | 216 |
| கிளர்ச்சி .... | 217 |
| செங்குந்தர் கல்வி நிதி:—உபகாரச் சம்பள விளம்பரம் .... | 223 |


காரியாலயம் :—2/17, பவழக்காரத் தெரு, சென்னை

லண்டன் மகாநாட்டிக்குப் புறப்பட்ட காந்தியடிகளார்



"எண்ணிய எண்ணியாங் கெய்துப எண்ணியார்
திண்ணிய ராகப் பெறின்"

(திருக்குறள்)


# செங்குந்தமித்திரன்

தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கத்தின் மாத வெளியீடு

ஆசிரியர் :—ம. சண்முகசுந்தர முதலியார், எம். ஏ., எல். டி.

தொகுதி—ரு] பிரஜோற்பத்தி வருஷம், ஆவணி மாதம் [பகுதி—அ


SEP 1937

கடவுள் வாழ்த்து

வானாகி மண்ணாகி வளியாகி ஒளியாகி
ஊனாகி உயிராகி உண்மையுமாய் இன்மையுமாய்க்
கோனாகி யானெனதென்(று) அவரவரைக் கூத்தாட்டு
வானாகி நின்றாயை என்சொல்லி வாழ்த்துகேனே. (திருவாசகம்)

## பத்திரிகாசிரியர் முன்னுரை

### பக்கிரியா? பரமஹம்ஸரா?

எலும்பு கூடு போன்று இளைத்த தேகத்தையும், மொட்டைத் தலையையும், பற்களிழந்த வாயையும், நான்கு முழத்துக்கும் குறைந்த துண்டையும் கண்ட சர்ச்சில் கோஷ்டியினர் சிலர் நமது மகாத்மாவை இன்னும் பக்கிரி யென்றே மதிக்கின்றனர். ஆனால் சரியான கண்களும் மனமும் உடையோர் அவரிடம் காண்பது மிக மிகப் பெரியதோர் உயர்வே. கூண்டு சாதாரணமானதே; கலகலத்ததே. அதனுள் வசிக்கும் ரம்மியமான பறவையைக் காண்பதே உயர்ந்த அறிவு பெற்றவரது கடமை. காந்தியடிகளார் வெளித்தோற்றத்திற்கொரு சாதாரண கிழவனைப் போலவே—"பக்கிரி"யைப் போலவே-தோன்றுகிறார். ஆனால் அவரது கூட்டுக்குள் உலவுவது ஒரு சிறந்த ஆத்மா, பரிசுத்தமான ஆவி.

காந்தியார் ஒரு அவதார புருஷர் என்று சாதிப்பதற்குச் சான்றுகளும் வேண்டுமா? இந்த எலும்பு மனிதர், இந்த 62 பிராயமுடைய வயோதிகர் சாதித்த காரியங்கள் கொஞ்சமா? சாதாரணமானவையா? உலகத்தில் செயற்கரிய செய்து உத்தமப் பெரியாராய் ஒளிருபவர் இவரன்றோ? கண்டமென்று கணக்கிடக் கூடிய அவ்வளவு பெரிய இந்தியாதேச முழுமையும் ஒரு பெருந் தேசிய உணர்ச்சியைக் கிளப்பிவிட்டார். இந்தியாவின் எந்த மூலையிலும் கதராடையின் காட்சி திகழச் செய்தார்; வந்தேமாதர கோஷம் ஒலிக்கச் செய்தார்; தேசத் தொண்டும், பக்தியும், தியாகமும் ஓங்கி வளரச் செய்தார். தூங்கிக்கிடந்த இந்திய மக்களைத் தட்டியெழுப்பினார்; அவர்களது தாழ்ந்த நிலையை, அடிமை வாழ்வை தெளிவுபட எடுத்துக் காட்டினார். இந்திய மக்கள் விழித்தெழுந்தனர். சுதந்திர வேட்கை அவர்களது உள்ளங்களிலே நிரம்பிவிட்டது. "என்று சுதந்திரம் என்னும் தெளிந்த ஆறு கரைபுரண்டு ஓடிவரும்? என்று மனமார வாரிப் பருகுவோம்? என்று எங்களது அடக்கமுடியாத சுதந்தரத் தாகம் தணியும்?" என்று அவர்கள் இப்பொழுது எதிர்பார்த்திருக்கின்றனர். அதற்காக உழைக்கின்றனர். எல்லாச் சுய நலங்களையும் தியாகம் செய்து, தேசபக்தி என்னும் கவசம் பூண்டு, சுதந்தரத் தேவியைக் காத்து நின்று அவளடி பணிதற்காகவே சலியா துழைக்கின்றனர்.

பரதகண்ட முழுவதையும் அடிகளார் தமது கரத்திலேயே அகஸ்தியர்போல அடக்கி விட்டார். அக்கண்டம் அவரையே நோக்கி நிற்கின்றது; அவரது ஆணையையே எதிர்பார்த்து நிற்கின்றது; அவரது கட்டளையைச் சிரமேற்றாங்கிப் பூர்த்தி செய்வதிலேயே இன்பத்தைக் காண முற்படுகிறது. "பெயராற்றுப் பகல் நித்திரையில் வீண் கனவு கண்டு கொண்டிருந்த இந்தியா திடீரென்று விழித்துக் கொண்டதே. இழந்த சுதந்தரத்தை மீட்கப் பார்க்கிறதே. அயலார் பிடியினின்றும் விலகிச்

கொள்ளப் பாடுபடுகிறதே'' என்று அந்நிய நாட்டார் ஆச்சரியமும், அச்சமும் அடைந்துள்ளனர்.

தூய்மையற்ற மனமுடையவர்க்கும், மாசுற்ற கண்ணுடையவர்க்கும் பக்கிரியாகத் தோன்றுபவர் உலகத்தின் எல்லாப் பாகங்களிலும் உள்ள உயர்ந்தோரது உள்ளங்களையெல்லாம் கொள்ளை கொண்டுவிட்டார். அவரைப் பெற்றெடுத்த நமது இந்தியத்தாய் மட்டுமா அவரைப் புகழ்கின்றாள்? உலகமே புகழுகிறது. அமெரிக்கர்கள் அவரது வரவை ஆவலுடன் எதிர்பார்த்து அதற்காக எத்தனை கோடி பொன் வேண்டுமானாலும் செலவு செய்யத் தயாராயிருக்கிறார்கள். ரஷ்ஷியா, ஜெர்மனி முதலிய தேசங்களின் அறிஞர்கள் அவரது புகழைப் பாடி இன்புறுகிறார்கள். எந்த ஐரோப்பிய நாடுதான்-எந்த அயல் நாடுதான்-அவரைப் புகழவில்லை? அவரது தரிசனத்தைக் காணப் பல்லாயிரக் கணக்கான மக்கள் அமுதத்தை நாடித் தவங்கிடப்பவர்போல் காத்திருக்கின்றனர். அவரது வாயினின்றும் ஒழுகும் அருள்மொழிகள் தம்மைக் கடந்து செல்லாவண்ணம் அவற்றைக் கிரகித்துக்கொள்ளப் பல செவிகள் ஜாக்கிரதையாகக் காத்துக்கொண்டிருக்கின்றன. ஏன்? அவர் எந்தத் தேசத்தின் அரசாட்சியை வெறுக்கிறாரோ, அந்தத் தேசத்து மக்களும் அவரது உயர்வினை உணராமலில்லை. அரசாங்கத்தின் எத்துணைப் பெரிய உத்தியோகஸ்தராயினும் சரி, அவரைத் திருப்தி செய்யவே முயலுகின்றனர். அவர் மனத்தைக் கோணச்செய்தால் இந்திய மக்களனைவரது மனமும் கோணுமே, உலகமும் வசைபாடுமே என அஞ்சுகின்றனர். வட்டமேஜை மகாநாட்டுக்குத் தாம் செல்வதற்கு முன் தமது கோரிக்கைகள் ஈடேற்றப்படவேண்டுமெனத் தீர்மானித்திருந்தார். அதைச் சாதித்தார். அடிகளாரில்லாத மகாநாடு மணமகனற்ற திருமணமாய் முடியுமே என்று எண்ணி, அவர் எப்பொழுது புறப்படுவாரோ எனக் காத்திருந்த பிரிட்டிஷாரும் அவரைத் திருப்தி செய்ய இணங்கினர். புறப்பட்டாரோ இல்லையோ, உடனே எல்லாம் சித்தமாயின. கப்பல் தயார், ''பாஸ்போர்ட்'' தயார்—எல்லாம் தயார். துரைத்தனத்தினிடம் பிரியா அன்பு பூண்டு, அதன் நலத்துக்காகவே பூஜை செய்யும் தாஸருக்குக் கூடப் பாஸ்போர்ட் கிடைப்பதென்றால் பகீரதப் பிரயத்தனந்தான். ஆனால் துரைத்தனத்தை வெறுப்பவர், அதை மாற்றுவதற்காகக் கிளர்ச்சி ஏற்படுத்தியவர், இங்கிலாந்துக்குப் புறப்பட்டார். உடனே, பாஸ்போர்ட் அவர் கைக்கு வந்துவிட்டது. வேறு என்ன சான்று வேண்டும்? காந்தியார் சாதாரண மனிதரா?

இந்தியாவிற் [illegible] புறப்படுவதாக வெளியிட்டார். உடனே மேல்நாட்டுப் பத்திரிகைகள் அவருக்கு வாழ்த்துப் பாட ஆரம்பித்துவிட்டன. அவரைச் சரியாக வரவேற்றுத் தக்கபடி உபசரிக்கவேண்டுமென உரத்து [illegible] றைந்தது ஒரு பத்திரிகை. ''என் மாளிகையில் தங்கட்டும் நான் விடுதி தருகிறேன்'' எனப் பல பிரபுக்கள் அவருக்கு விடுதி தயாரிக்கப் போட்டி போட்டனர். ஆனால் ஆடம்பரமற்றதும், மேல் நாட்டுப் பேய் வழக்கங்கள் அணுகாததும், எளிய மக்களது சூழலையுடையதுமான ''கிங்ஸ்லி ஹால்'' என்னும் இடத்திலேயே தங்க அவர் தீர்மானித்தார். அம்மாளிகை அவரிடம் உண்மை பக்தி பூண்ட மிஸ் முரியல் லீஸ்டர் என்னும் பரோபகார சிந்தை வாய்ந்த அம்மையாருக்குச் சொந்தமானது.

இங்ஙனம் நமது மகாத்மாவினது புகழொளி உலகெங்கும் தன் கிரணங்களைப் பரப்பியுள்ளது. ஏதோ சில குதர்க்க வாதிகள், உண்மையறியா மாக்கள் தவிர (அத்தகையோர் பேச்சும் அவரது புகழ்ச்சி யோசையில் அமிழ்ந்தே கிடக்கின்றது.) ஏனையோரெல்லாம் காந்தியடிகளாரது சக்தியைப் போற்றவே செய்கின்றனர். ஒரு ஜாதியினரா, ஒரு மதத்தினரா, ஒரு நிலையிலுள்ளவரா அவருடைய சீரைப் பாடுகின்றனர்? பிராமணர், பிராமணரல்லாதார்; உயர்ந்த ஜாதியார், தாழ்ந்த ஜாதியார்; ஹிந்துக்கள், மகம்மதியர், கிறிஸ்தவர்; ஆண்மக்கள், பெண்மக்கள்; சிறுவர்கள், வாலிபர்கள், வயோதிகர்கள்; குபேரர்கள், பிச்சைக்காரர்கள்; அறிஞர்கள், சாஸ்திர நிபுணர்கள், பாமரர்கள்;- அனைவரும் அவரது ஆற்றலை, அருங்குணங்களை அறிந்திருக்கின்றனர். அவரை அறியாதவர்தான் யார்? சிறு குழந்தைகளும் உற்சாகம் வந்த காலத்து, ''மகாத்மா காந்திக்கு ஜே'' என மழலை மொழிகளால் ஆரவாரிக்கின்றனவே. மாணவர்கள் அவரது உபதேசங்கள் எந்தப் பத்திரிகையில் எந்த மூலையிலிருக்குமோ எனத் தேடுகின்றனர். அறிஞர்களும் அவரது கொள்கைகளை, கட்டளைகளை நாடுகிறார்கள். அவரிடம் மக்களுக்குள்ள அபிமானத்துக்கு அறிகுறியான ஒரு சம்பவம் சமீபத்தில் நிகழ்ந்தது. அடிகளார் லண்டனுக்குப் புறப்படும் சமயத்தில் அவரைக் காண ஆயிரக்கணக்கான ஜனங்கள் நெருங்கியிருந்தனர். அச்சமயத்தில் ஒரு வயது முதிர்ந்த அம்மையார் எட்டிப் பார்த்து அவரது தரிசனத்தில் தமக்குள்ள அவாவை வெளியிட்டார். உடனே அவர் மகாத்மா அருகடைந்தார். அடைந்த நிமிஷமே அவரிருதயத்தில் அன்பு பொங்கி வழிந்தது. மகாத்மாவின் அடிகளில் வீழ்ந்து வணங்கி ஆனந்த பாஷ்பம் பெருக்கினார். அடிகளார் அவ்வம்மையாரை மெல்லத் தூக்கிவிட்டு ''அம்மையே, உமக்கென்ன வய''தென்றார். எண்பது எனப் பதில் வந்தது. ''ஆஹா, அவ்வளவு வயது வரை இருந்தால் யான் இன்னும் எவ்வளவு ஊழியம் செய்ய முடியும்'' என அவர் உருக்கமாக உரைத்தார்.

இத்தகைய சக்தி, இத்தகைய ஆற்றல், இவ்வாறு உலகப் புகழ்ச்சியை யெல்லாம் ஒருங்கே கட்டி வளைக்கும் வன்மைக்குக் காரணந்தான் என்ன? சாது லீக் என்னும் உத்தமரொருவர் காந்திஜி சித்திகளில் வல்லவர் என்றாராம். அவர் திடீரெனச் சிறையினின்றும் உருக்கரந்தார் என்பதைப் பற்றிக் கேட்ட சாதுலீக் ''அவருக்கு இது ஒரு பெருங் காரியமல்ல. இன்னும் பல அரிய செயல்களையும் அவர் எளிதில் சாதிக்க வல்லார்'' என மொழிந்தா



ராம். ஆனால் தம்மிடம் அத்தகைய சித்து வித்தைகளொன்றும் கிடையாதென மகாத்மாவே கூறியுள்ளார்.

பின்னை எதுதான் அவரது சக்திக்குக் காரணம்? சித்தர்கள்தாம் அருங் காரியங்களைச் சாதிப்பரோ? சரியான மனத்தூய்மை யோக சித்திகட்கும் மேலானதன்றோ? சரி, அவரது சக்தி எந்த அருங்குணத்திலுள்ளது? அறிவிலா? அன்பிலா? சாந்தத்திலா? பரிசுத்த வாழ்க்கையிலா? பரோபகார சிந்தையிலா? இக்கேள்விகள் ''கடவுள் எதிலுள்ளார்? மண்ணிலா? விண்ணிலா? அனலிலா? புனலிலா? மாருதந்தனிலேதானா?'' என்னும் கேள்விகளையே ஒக்கும். கடவுள் மண்ணிலுமுள்ளார், விண்ணிலுமுள்ளார், அனலிலே, புனலிலே, காற்றிலே, பெரியதிலே, சிறியதிலே, மலையிலே, அணுவிலே; எல்லாவற்றிலுமே நிறைந்துள்ளார். காந்தியடிகளாரது ஆன்ம சக்தி அவரது அறிவிலேயுமுள்ளது; அன்பிலேயுமுள்ளது; சாந்தத்திலேயுமுள்ளது; தூயமனத்திலேயுள்ளது; ஜீவ காருண்யத்திலேயுள்ளது; தியாக சிந்தையிலேயுள்ளது; பொதுநல உழைப்பிலேயுள்ளது. அவரிடம் ஒரு அருங்குணமோ, இரண்டோ மூன்றோ மட்டுமுள்ளனவா? சரியான மானிடனுக்கிருக்கவேண்டிய அருங்குணங்களெல்லாம் ஒருங்கே திரண்டு ஓருருவெடுத்தால்? அத்தகைய உரு உழைக்க ஆரம்பித்தால்? சொல்லவும் வேண்டுமோ? இதனாலேயே அவர் புருஷோத்தமராகத் திகழ்கின்றார்.

அடிகளாரது அரிய குணங்களை விவரிப்பது மிகையாகும். அறிஞர்களெல்லாம் அவரது கொள்கையை ஏற்றுப் போற்றுகின்றனர். இந்தியா முழுமையும் அவர் சொற்படி நடக்கின்றது. தேசாபிமானச் சிங்கங்களாகிய படேல்களும், பண்டித மாளவியாவும், பண்டித நேருவும் அவராணைப்படி நடக்கச் சித்தமாயுள்ளனர். இந்தியக் குபேரரான பண்டித மோதிலாலும் தமது மண்ணுலக வாழ்க்கைக் காலத்தில் அடிகளாருக் கொப்பவே நடந்தனர். இப்பொழுதும் அவரது தூய ஆத்மா அத்துறையிலேயே முனைந்து நிற்குமென்பதில் ஐயமில்லை. இந்தியர் மட்டுமல்ல, அயல் நாட்டாரெல்லாம் அவரது கொள்கைகள் மறுக்க முடியாதன என ஒத்துக்கொள்கின்றனர். எவ்வளவுதான் சுயநல நோக்கத்துடன் பிடிவாதம் செய்தாலும் கடைசியில் அவரால் எதிர்க்கப்படும் பிரிட்டிஷ் துரைத்தனமும் அவருக்கு இணங்கியே யாக வேண்டியிருக்கிறது. இவை யெல்லாம் அவரது ஒப்பற்ற அறிவினை, மூளை வன்மையினை விளக்கவில்லையா!

மகாத்மா அன்புரு என்பதை அவரது மொழிகளும் செயல்களும் நிலைநாட்டுகின்றன. மனிதரிடம் மட்டுமன்றி வாயில்லாப் பிராணிகளிடமும் அவர் காட்டும் கருணை அளவற்றது. அப்பிராணிகளும் அவருக்கு நல்வாழ்த்துக் கூறுமென்பதில் ஐயமில்லை. கப்பலிலும் ஒரு பூனை அவரது பாலுணவையும் படுக்கையையும் பங்கிட்டுக்கொள்கிறதாம். அவரது அன்புச் செயல்கள் அவர் புத்த அவதாரமோ என்னும் சந்தேகத்துக்கு இடந் தருகின்றன. இத்தகைய அன்பை அவர் பாரபக்ஷமின்றிச் செலுத்துகின்றார். ஜாதி, மதம், செல்வம், வறுமை, உயர்வு, தாழ்வு...எந்தப் பேதத்தையும் அவர் கவனிக்கிறாரில்லை. ''எல்லா ஜாதியாரையும் நேசிப்பது போலவே இந்தியக் கிறிஸ்துவர்களையும் காங்கிரஸ் பிரதிநிதியாகிய நான் நேசிக்கின்றேன்'' என அவர் உருக்கமாகக் கூறியுள்ளார். இந்து முஸ்லிம் போராட்டத்தை நிறுத்தி இரு தரத்தாரையும் ஒற்றுமைப்படுத்த அவர் செய்யும் முயற்சி சிறிதும் தளராதது. அம்முயற்சி பலன் தருமேயாயின் அவர் இணையிலா இன்ப மெய்துவார். ஆங்கிலேயர்களையாவது அவர் வெறுக்கிறார் என்கிறீர்களா? சிறிதுமில்லை. அவர்கள் ஆட்சிமுறையே, அவர்கள் இந்தியரை நடத்தும் விதமே அவருக்குப் பிடிக்கவில்லை. ''எனது அத்தியந்த நண்பர்களிற் சிலர் ஆங்கிலேயர்கள்'' என அவர் கூறியுள்ளார். ஆபிரிக்க சுதேசிகளது நன்மைக்காகவும் விடுதலைக்காகவும் அவர் பட்ட பாடும் ஏழை மக்களோடு பழக அவருக்குள்ள விருப்பமுமே அவரது கருணை ததும்பும் சிந்தையைக் காட்டும். ஆமதாபாத்தில் இருக்கும்பொழுது வாந்திபேதி கண்டு திக்கற்றுத் தெருவிற் கிடந்த தோட்டி ஒருவனுக்கு அவர் அருகிலிருந்து சுயநலங் கருதாது பல நாட்கள் செய்து வந்த சிஸ்ருஷை ஆச்சரியப்படத் தக்கதாயுள்ளது.

தியாகமோ, இதுவரை எங்கும் கண்டிராதது. தேசத்துக் குழைக்க முன்வந்தாரோ இல்லையோ, எல்லாப் பற்றுக்களையும் உதறிவிட்டார். அவரது திரண்ட செல்வமெல்லாம் தேசத்துக்கே அர்ப்பணம் செய்யப்பட்டது. செழிப்பான வரும்படி நின்றது. உடலுக்கு முழுப் போர்வையையும் விலக்கினார். ''இந்திய மக்களுள் ஆயிரக்கணக்கான பேர் ஆடையின்றி வாடுகின்றனர். நான் மட்டும் உடம்பு முழுமையும் போர்த்துக்கொள்வதா எனத்'' தாமே நெய்யும் சிறு துண்டு கட்டவாரம்பித்தார். செல்வம் நிறைந்த வாழ்க்கையையும் இராஜ போகங்களையும் அறவே நீக்கி, முரட்டுத் துண்டணிந்து நூல் நூற்க வாரம்பித்துவிட்டார். சிறைவாசமும் செய்தார். உழைப்பில் தமது உடல் நலனைச் சிறிதும் சட்டை செய்கிறாரில்லை. உடல் நலன் கெட்டால் ''உழைக்க முடியவில்லையே'' எனத் தான் வருந்துகிறார். எழுதிஎழுதி வலது கை விரல்கள் முரண்டிக்கொண்டன. ''சரி, இடது கையாலெழுதுவேன்'' என எழுதுகிறார். இவரது ஓயா உழைப்பைக் கண்டு பக்தர்களெல்லாம் ''ஐயோ, உடற் சுகத்துக்கு ஊறு நேருமோ?'' எனவும் அஞ்சுகின்றனர். ஆயினும் ''என் கடன் பணி செய்து கிடப்பதே'' என்பதுதான் அவரது உறுதிமொழியாக உள்ளது.

சாந்தத்தைப் பற்றிக் கூறவேண்டியதில்லை. ''காந்தியுகம் சாந்த யுகம்'' என எங்கும் பறை சாற்றப்படுகிறது. ''ஒரு கன்னத்தி லடித்தால் மறு கன்னத்தைத் திருப்பிக் காட்டு'' என்பதே அவரது உபதேசமாகும். அதற்கேற்பவே அவர் நடந்து காட்டுகிறார். அத்தாட்சி வேண்டுமா? ஒருகால் ஒரு ரெயில்வே ஸ்டேஷனில் அவர் வண்டிக்காகக்

காத்திருக்கையில் ஐரோப்பிய செல்வந்தரொருவர் தமது மூட்டைகளை வண்டியி லேற்றுவதற்குக் கூலியாளின்றித் தயங்கிக்கொண் டிருந்தார். வண்டியும் வந்துவிட்டது. உடனே அருகிலிருந்த ஒரு எளிய மனிதர் அம்மூட்டைகளை யெல்லாம் வண்டியிலேற்றினார். ஏற்றி முடிந்தது. ஐரோப்பியர் அம் மனிதரிடம் ஒருரூபாய் கொடுத்தார். அவர் அதை மறுத்தார். இரண்டு ரூபாய், மூன்று, எதுவும் வேண்டாவென மறுத்தார். உடனே கோபங்கொண்ட ஐரோப்பியர் அம்மனிதரது கன்னத்தில் பளீரென அறைந்துவிட்டுத் தமது முதல் வகுப்பு வண்டியி லேறிக்கொண்டார். வண்டி ஒரு ஸ்டேஷனை யடைந்தது. அங்கே பெருந்திரளான ஜனங்கள் "மகாத்மா காந்தி வருகிறார்" என்னும் ஆரவாரத்துடன் குழுமி யிருந்தனர். உதை கொடுத்த ஐரோப்பியரும் "யார் அத்துணைப் பெரியார்? பார்ப்போம்" எனக் கீழிறங்கினார். ஜனங்களெல்லாம் மூன்றும் வகுப்பிலிருந் திறங்கிய ஒருவரை உற்சாகத்துடன் வரவேற்றுச் சூழ்ந்துகொண்டனர். அம்மனிதர் யாரென் றெண்ணுகிறீர்? அவர்தாம் அந்த ஐரோப்பியருக்கு மூட்டை தூக்கிவிட்டுக் கூலியாகக் கன்னத்தி லறை வாங்கிக்கொண்டவர். ஐரோப்பியர் திடுக்கிட்டு மன்னிப்புக் கேட்டுக்கொண்டா ரெனச் சொல்லவும் வேண்டுமோ? இத்தகைய நிகழ்ச்சிகள் நமது மகாத்மாவின் வாழ்க்கையில் பல. மகாத்மா மிகப்பிரமாதமான காரியங்கள் பலவற்றுள் இணையற்ற வெற்றி பெற்றுள்ளார். இத்தகைய காரியங்களை அவர் போக்கிரித்தனத்தால் சாதித்தாரா? பழிக்கிடமான செய்கைகளால் சாதித்தாரா? தூக்கு மேடை யேறிச் சாதித்தாரா? சண்டையால் சாதித்தாரா? இல்லவே இல்லை. அவரது வெற்றிக்கெல்லாம் அடிப்படையாக நின்றது சாத்வீகமே. பகவத் சிங்கும் அவரது சகாக்களும் தூக்கில் உயிர் விட்டது பற்றி வீரமுள்ள காளையர் கொண்டுவந்து கொடுத்த கருப்பு மலரை அவர் புன்னகையுடன் வாங்கிக்கொண்டு "இதை ஞாபகச் சின்னமாக வைத்திருப்பேன். நீங்கள் நேரான வழியுணர்ந்து உங்கள் செயலுக்காக வருந்தும்பொழுது இதைத் திருப்பிக் கொடுப்பேன்" என என்ன சாந்தத்தோ டுரைத்தார்! என்னே அவரது பொறுமை! என்னே அவரது சாந்தம்! நியாயத்துக்காக அவர் செய்த எந்த வாத யுத்தத்திலும் பொறையே அவரது கவச மாயிற்று; சாத்வீகமே அவரது கேடய மாயிற்று; சத்தியமே அவரது வீர வாளாகி விளங்கிற்று.

காந்தியார் தமது வாழ்க்கையை நடத்தும் தூய்மையான விதம் ஒப்பற்றது. தூய்மையையே அவர் எல்லாவற்றிலும் கடைப்பிடிக்கிறார். அவரது மனம், வாக்கு, காயம் எல்லாம் தூய்மை யுருவானவை. தூய்மையாக எண்ணுகிறார், தூய்மையாகப் பேசுகிறார், தூய்மையாக நடக்கிறார். இம்மூன்றும் ஒன்றுபட் டிருத்தலோ மிகக்கடினம். ஆனால் அவ்வொற்றுமை அவரிடத்தில் சர்வ சாதாரணமா யுள்ளது. அவரது வாழ்க்கை நியமங்களும் இதனை வலியுறுத்துகின்றன. வட்ட மேஜை மகாநாட்டுக்குச் செல்லுகையில் கப்பலில் ஆகாரத்துக்காக அவர் ஆட்டுப் பாலைச் சுத்திகரித்து எடுத்துக் கொண்டு போயுள்ளார். தேகக் கட்டுடைய வாலிபர்களாலும் தாங்கமுடியாத தேக சிரமங்களையும் மூளை வேலையையும் அவர் தாங்குவதற்கு அவரது பரிசுத்தமான எளிய வாழ்க்கையே காரணமெனத் தோன்றுகிறது.

இவ்வாறு அவரது அரிய குணங்களைக் கணக்கிடவும் முடியாதென்றால் அவற்றைப் பற்றி விரிவாக எழுதுதல் சாத்தியமா? எந்தப் பத்திரிகைதான் இடந்தரும்? பல அருங்குணங்களும் பூரணமாய்ப் புஷ்பித்துள்ள ஜென்மம் பெற்று, ஒப்பற்ற அரிய செயல்கள் பல வாற்றி, உலகப் புகழ்ச்சியையும் வாழ்த்தையும் ஒருங்கே சம்பாதித்து, இன்னும் அவ்வழியிலே தம்மாலான நன்மைகளை உலகத்துக் களிக்கப் பெரும்பாடு பட்டுவரும் இவர் பரமஹம்ஸரா? அல்லது பக்கிரியேதானா?

பக்கிரியென்றாலும் சரி, பரமஹம்ஸரென்றாலும் சரி, அவருக் கெல்லாம் ஒன்றே. பக்கிரி என்று கூறப்படுவதைக் கேட்டாலே அவரது முகம் மலர்ச்சி பெறும். இப்புருஷோத்தமர் கோடிக் கணக்கான மங்கள வாழ்த்துடன் லண்டன் மகாநாட்டுக்குப் புறப்பட்டுவிட்டார். புறப்பட்டது சரியல்ல வென்போர் சொல்லட்டும். தமது சகாக்களையும் சிறந்த அறிஞர்களையும் அவர் திருப்தியே செய்துள்ளார். "நான் வேண்டியது அக்கிரமத்தைப் பறறிய விசாரணையே. விசாரணை சரியானதா யிருக்குமா வென்பதை யானறியேன். ஆனால் மக்களது கொள்கைகள், உணர்ச்சிகள் எடுபடவேண்டும், அவர்களது கோரிக்கைகள் ஈடேற வேண்டு மென்பதே என்னபிப்பிராயம். அது நிறைவேறிற்று. ஆகவே யான் போய் வருகிறேன்" என்னும் அவரது உத்தரம் உண்மையறியாது கதறியவர்களது வாயை மூடிவிட்டது.

மகாத்மா எங்கும் மகாத்மாவாகவே யுள்ளார். கடலில் தம்முடன் வந்தவர் கடற்பிணியால் (Sea Sickness) வருந்த, தாம் மட்டும் சுகமாகவும் சந்தோஷமாகவுமே பிரயாணம் செய்தார். கப்பலிலும் அவர் பூஜை முதலிய தமது வாழ்க்கையின் தினசரி நியமங்களை விட்டாரில்லை. வெளியான இடத்திலேயே படுத்தாராம். கடலும் கூட அவரது சக்தியை அறிந்து அவருக்கு நன்மை செய்தது போலும். மகாத்மாவுக்குப் பல வரவேற்புக்களும், பண முடிப்புக்களும் வழியிலும் இங்கிலாந்திலும் காத்துக்கொண் டிருந்தன. மகாத்மா திரும்பி வரும்பொழுது இந்தியாவின் சுய ராஜ்யத்தை மூட்டைகட்டிக் கப்பலி லேற்றிக் கொண்டு வந்துவிடுவா ரென எண்ணாவிடினும் அவர் தமது கோரிக்கைக ளெல்லாம் ஈடேறப் பெற்றுப் பூரண வெற்றியுடனும் தாம் புறப்படுகையில் சிரித்த "மோஹனச் சிரிப்பு"டனுமே திரும்பி வருமாறு அனுக்கிரஹிக்க இறைவனை இறைஞ்சுதல் நமது கடனாகின்றது. பரமாத்மன் மகாத்மாவுக்குத் தேக திடமும், ஒப்பற்ற நீண்ட ஆயுளும், அவரது கோரிக்கைகளில் வெற்றியும் தந்து அருள் புரிவானாக! சுபம்! சுபம்!! சுபம்!!!

---



(3)

# குலாபிமானப் பகுதி

## நமது தலைவர்கள் ஊக்கமும் சமூகத் தூக்கமும்

[திருவாளர். வை. ச. இராமலிங்க முதலியார் அவர்கள், கண்டாச்சிபுரம்]

ஆர்கலி சூழ்ந்த நீர்மலி யுலகில், அளப்பருஞ் சீர்த்திகொள் வளப்பெருங் காட்சியில், எந்நாட்டிலும் முன்னாடாய், நன்னாடெனச் சிறந்து விளங்குவதும், புண்ணிய பூமியெனப் பண்டைப் பெரியோர்களால் புகழ்ந்து கொண்டாடப் பெறுவதுமாகிய நம்மிந்திய தேசத்திலே, சாந்தம், ஒழுக்கம், தயாளம், அறம், வாய்மையாதி நற்குணங்களே திரண்டு ஒரு வடிவெடுத்து வந்தது என்று சொல்லக்கூடிய மேன்மையில் விளங்கும் மகாத்மா காந்திஜி, பண்டித மாளவியா முதலிய மாபெருந் தேசத் தலைவர்களின் முயற்சியின் பயனாய், இப்போது சில ஆண்டுகளாக, நம்மிந்திய மக்கள் ஒவ்வொருவருள்ளத்திலும் ஒரு நூதன கிளர்ச்சி யுண்டாயிருக்கிறது. பொதுவாக நம் பாரத தேச முழுமையிலுமே இந்த விழிப்பு நிலை ஏற்பட்டிருக்கிறது. நமது தேச விடுதலைக்காக (பிரிட்டிஷாதிபத்ய அடிமை வாழ்வினின்றும் நீங்கிச் சுகம் பெறுவதற்காக) பல தலைவர்களும் தேசத் தொண்டர்களும் தம் முயிரையும் பொருட்படுத்தாது, தேச சேவை செய்து வருகின்றனர். நமது நாட்டின் விடுதலையையும், க்ஷேம விருத்தியையுங் கோரி, சமீபத்தி லுயிர் துறந்த இராஜகுரு, சுகதேவர், பகவத்சிங் முதலிய வாலிப வீரர்களின் தியாகம் நம்மிந்து தேச சரித்திரத்தில் பொன் எழுத்துக்களால் பொறிக்கப்படுவதன்றி, என்றும் மறக்கப் பெறாததோர் சம்பவமுமாகும்.

நமதிந்தியத் தாய் நாட்டில் நிலவும் பல்வகைச் சமூகங்களும் தேச விடுதலைக்காகவும் தங்கள் தங்கள் ஜாதி முன்னேற்றத்திற்காகவும், மிகத் தீவிரமாக முன்னணியில் வேலை செய்யும் இந்த நெருக்கடியான சந்தர்ப்பத்திலே நமது செங்குந்த சமூக மொன்றுமட்டில் இன்னும் ஆழ்ந்த நித்திரையில் வாளா வுறங்கிக்கொண் டிருக்கிறது. என்னே! இவர்களின் அறியாமை! அசிரத்தை! என்னே இவர்களின் கல்வி யறிவு!! செங்குந்த குலச்சீரியர்களே! எழுமின்! எழுமின்!! விழிமின்! விழிமின்!! என்னே உங்கள் உறக்கம்! பார்ப்பன மக்களைப் பாருங்கள்! அவர்கள் கல்வி யறிவிலும், செல்வத்திலும், நவீன நாகரிகத்திலும், உத்தியோக முறையிலும் எவ்வளவோ தூரம் முன்னேற்ற மடைந்திருக்கின்றனர். இதற்குக் காரணம், அவர்கள் கல்வி யறிவும், ஒற்றுமையும், குலாபிமானமு மன்றோ? இது வல்லாமல், வேளாளர்கள், வைசியர்கள், ரெட்டிகள், வன்னியர்கள், தேவாங்கர், கருணீகர், சாலியர், நாடார்கள், மருத்துவர்கள், அருந்ததியர்கள் முதலிய சிறு தொகையினராயுள்ள சமூகத்தவர்களுங்கூட, இக்காலத்தில் மகாநாடு கூட்டியும், சபைக ளேற்படுத்தியும், பத்திரிகைகள் வெளிப்படுத்தியும், துண்டு பிரசுரங்கள் வழங்கியும், ஜாதி முன்னேற்றத்துக்காக ஒற்றுமையாய் வெகு தூரம் பாடுபட்டு வருவதை நீங்கள் உணரவில்லையா? உங்களிடத்தில் குலாபிமான மில்லையா? சாமி சகஜானந்தம் முதலிய தலைவர்கள் தங்கள் ஆதித் திராவிட ஜாதி முன்னேற்றத்துக்காகப் பல துறையிலும் புகுந்து அரும்பாடு படுகின்றனர். முடிவாகக் கூறுமிடத்து இந்தியாவிலுள்ள ஒவ்வொரு சமூகத்தினரும் விழிப்பு நிலையடைந்து, தங்கள் தங்கள் ஜாதி முன்னேற்றத்தைக் கோரிப் பாடுபடுகின்ற இந்த நேரத்தில், சுமார் ஆறு லக்ஷத்திற்கு மேற்பட்ட தொகையினராயுள்ள நமது சமூகத்தினர் மட்டும் இன்னும் பழைய கருப்பன்களாகவே வாளா துயின்றிருத்தல் தகுமோ? இது நங்குலப் பெருமைக்கும் மதிப்புக்கும் இழிவன்றோ? நமது பண்டைப் பெருமை யெல்லாம் பகற்கனவாய்ப் பறந்திடாதோ? சண்முகன் சகோதரரெனச் சாற்றவும் படுமோ? வீரர் வழித்தோன்றல்களென விள்ளவுந் தகுமோ?



இத்தகை இழிநிலையும், அறியாமையும், அசிரத்தையும், பேருறக்கமும், குலாபிமான மின்மையும், நம்மவர்களிடங் குடிகொண்டிருப்பதைக் கண்ணுற்று, கல்வி யறிவிலும், நாகரீகத்திலும், செல்வத்திலும், ஒழுக்கத்திலும், மேம்பட்ட நங்குலப் பிரமுகர்களாகிய, திருவாளர்கள் தி. நா. சபாபதி முதலியார், P. V. நடராஜ முதலியார், S. குழந்தைவேல் முதலியார், ம. சண்முகசுந்தர முதலியார், S. முருகைய முதலியார், மா. அ. கனகசபை முதலியார் முதலிய தலைவர்களும், காஞ்சீபுரம், மயிலாப்பூர், சென்னை, திருவல்லிக்கேணி, சைதாப்பேட்டை, திருவாரூர், மஞ்சட்கொல்லை, குடியேற்றம், புதுச்சேரி, தச்சூர் முதலிய பல விடங்களினின்றும் வந்த செங்குந்த பிரபுக்கள் பலருமாக வொருங்கு சேர்ந்து, சென்ற பிரபவ வருஷம் சித்திரை மாதம் 17-ந் தேதி (29-4-27) இல் சென்னைச் "சௌந்தரிய மஹா"லில் கூட்டங் கூடி யளவளாவி, பல விதத்திலும் பிற்பட்டு நிற்கும் நமது ஜாதி முன்னேற்றத்தைக் கருதி உழைப்பதற்காகத் "தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கம்" எனப் பெயரிய நமது தலைச்சங்கத்தைச் சென்னை

யில் ஸ்தாபகஞ் செய்தார்கள். 'செங்குந்த மித்திர'னென்னும் நமது அறிவுடைத் தோழனாகிய திங்கள் வெளியீட்டையும் தோற்றுவித்தார்கள். இவ்விஷயத்தில் மிகுந்த பேருக்கமெடுத்துச் சங்கத்தை ஸ்தாபித்தவர் நமது கருணை வள்ளலாராகிய திருவாரூர் நா. சபாபதி முதலியாரவர்களே யாவர். இவரே நம் மித்திரனையும் ஒரு வருஷம் தமது சொந்தச் செலவிலேயே நடத்தித்தந்த பேருபகாரியுமாவர். இவரை நாம் "சபாபதி வள்ளல்" "தென்னிந்திய செங்குந்த மகாசன சங்க ஸ்தாபகர்" என்று சிறப்பித்துக் கூறுவதன்றி யிவர்க்கு வேறென்ன கைம்மாறு செய்ய வல்லோம்? இவர் கைம்மாறு வேண்டாக் கடப்பாடுடையவர். நமது சங்கத்திற்கும், மித்திரன் காரியாலயத்திற்கும் தமது கட்டடத்தில் இடந் தந்து உபகரித்தவர், மதராஸ் பாளயகாட் கம்பெனியின் மானேஜராகிய, மஞ்சட்கொல்லை அரு. சி. அமிர்தலிங்க முதலியாரவர்களாவர். மித்திரன் போஷிப்பிற்குப் பொருளுதவி புரிந்த இவரது தயாள சிந்தையும் குலாபிமானமும் போற்றத் தகுந்தன. இரண்டாவதாண்டில் நமது மித்திரன் முன்னோங்கி வளர மாதம் மாதம் அச்சுச்செலவுக்காக, சைவத் திருவாளர்கள் மஞ்சட்கொல்லை அரு. சி. தியாகராய முதலியார், திருவாரூர் காயாரோகண முதலியார், செங்குந்த பிரபந்தத்திரட்டின் பதிப்பாசிரியராகிய ச. கலியாண சுந்தர முதலியார், மஞ்சட்கொல்லை. அரு. தியாகராஜ முதலியார், ச. இராமசாமி முதலியார், சொ. அ. அம்பலவாண முதலியார் முதலிய பல பிரபுக்களும் மாதமொருவராகப் பொருளுதவி புரிந்து மித்திரனைப் போஷித்து வந்தார்கள். நமது சந்தா நேயர்களின் சந்தா வசூல் தொகை யொன்றையே எதிர்பார்த்திருப்பின், நமது மித்திரன் போஷிப்பின்றி என்றோ இறந்து மறைந்திருப்பான். இவர்கள் வள்ளன்மைக்குச் செங்குந்த வுலகம் எவ்வளவோ நன்றி செலுத்தக் கடமைப்பட் டிருக்கிறது. எவ்வித இடைஞ்சல்களையும், இன்னல்களையும், பொருளின்மையையும், தேக சிரமத்தையும் பொருட்படுத்தாது, சமூகசேவை யொன்றினையே கருதி, நமது சங்கத்தையும், மித்திரனையும் செம்மையான முறையில் மிக்க திறமையுடன் ஒழுங்காய் நடத்தி வந்தவர் கிடைத்தற்கரிய மாணிக்கம் போன்ற நமது மாபெருந் தலைவராகிய ஆசிரியர் ம. சண்முகசுந்தர முதலியார், எம். ஏ., எல். டி., அவர்களாவர். இவரது குலாபிமானத்தாலும், தளராத பேருக்கத்தாலுமே நமது தலைச் சங்கமும் மித்திரனும் செவ்வனே நடைபெற்று வருகின்றன. இவர் நீடூழி வாழ இறைவன் இன்னருள் சுரப்பாராக. ஆரம்பத்தில் இருந்தே இவருடன் ஒத்துழைக்கவும், மித்திரனை நாடெங்கும் பரப்பவும், நம்குல முன்னேற்றத்தைப் பற்றிப் பிரசாரஞ் செய்யவும், தமது உடல், பொருள், ஆவி மூன்றினையுங் குலாபிமானத்துக்கே தத்தஞ் செய்து மிக்க ஆர்வமுடனுழைக்கவும்திருவாளர்கள் தி. அ. சண்முக முதலியார், பி. செ. மாணிக்கவாசக முதலியார், என்னுமிரண்டு வாலிபச் சிங்கங்கள் தோன்றி யரும்பாடு பட்டு வருகின்றன. நமது மித்திரனைப் பல விதத்திலும், கால, தேச, வர்த்தமானங்களுக்கேற்பச் செம்மையாய்ச் சித்திரித்து, அலங்கரித்துப் போஷிப்பதில் செவிலித் தாயா யமைந்தவர் நமது திரு. மா. அ. கனகசபை முதலியாரவர்களாவர். பிறகே நமது மித்திரனும், சங்கமும் வெளிப் பிரசித்தமாய் எங்கும் வியாபிக்கலாயின.

இந்த நிலையில் நமது குலமுன்னேற்றத்திற்கோரறிகுறியாகவும், நல்லதிர்ஷ்ட வசமாகவும், செங்கோட்டையா வென்னுஞ் செல்வநிதி யொன்று தேடாத் திரவியமாய் நமது சங்கத்திற்குக் கிடைத்தது. இவரை நமது செங்குந்த வுலகம் முழுதும் நன்கறியும். இவரே ஈரோட்டில் நமது தென்னிந்திய செங்குந்தர் முதலாவது மகாநாட்டை ஏராளமான பொருள் செலவிட்டு யாவரும் வியப்புறுமாறு, 'இதுவரையி லித்தகைய மகாநாட்டை எவரும் (எச் சமூகத்தினரும்) கூட்டினதில்லை' யென்று யாவரு மதிசயித்துச் சொல்லும்படியான அவ்வளவு மேன்மையாக மிக்க சிறப்புடன் நடத்தி வைத்தார்கள். இம்மகாநாட்டில் நமது வாலிப வீரராகிய, சிவகெங்கை, S. மீனாட்சிசுந்திர முதலியார், பி. ஏ., எல். டி., அவர்களும் ஈரோடு வ. மொட்டையப்ப முதலியாரவர்களும், தி. ரா. கந்தப்ப முதலியாரவர்களும் ஒத்துழைத்தார்கள். இந்த மேலான அரிய சந்தர்ப்பத்தில் தான், நமது குலத்தவர்களைப் பீடித்த அஞ்ஞான இருளொழியவும், மடமை, அறியாமை என்னு மயக்கம் நீங்கிக் கல்வி யறிவென்னும் வெளிச்சம் தோன்றவும், புதுவை ஆ. வே. முத்தைய முதலியார் என்னும் ஞான சூரியன் தனது காந்தம், பொறை, அறிவு, பரோபகாரம், குலாபிமானம் என்னும் பூரண கிரணங்களுடன் உதயமாயிற்று. இவர் புதுவை பிரஞ்சிலாகாவில் மேலான அரசாங்க வமைச்சர் பதவியை வகிப்பவர். இவரே நமது முதல் மகாநாட்டில் தலைமை வகித்தனர். மகாநாட்டையும் மிக்க செம்மையாய்த் திறமையுடன் நடத்தித் தந்தனர். அல்லாமல் நம்குல மக்களிடம் கீழ்த்தரக் கல்வி, உயர்தரக் கல்வி, என்னு மிரண்டினையும் பரப்பி, அறிவை விருத்தி செய்யவும், ஏழைச் செங்குந்த மாணவர்களுக்காக இலவசச் சம்பளம், உண்டி, முதலிய வுபகார மளிக்கவும், செங்குந்த இளைஞர்களின் கல்வி யறிவைப் பல விதத்திலும் விருத்தி செய்யவும் சாதகமாகச் "செங்குந்தர் கல்வி நிதி" யென்னும் ஒரு நிதியைத் திரட்ட மகாநாட்டிற் கலந்துபேசித் தீர்மானித்தபடி, "செங்குந்தர் கல்வி நிதிச் சீட்டென்னும்" ஒரு லாட்டரி சீட்டை யாரம்பித்து, அதனால் சுமார் ரூபாய் பதினாயிரத் (10,000) துக்கு மேல் மூலதனமுண்டாகும்படி செய்தனர். இவர் ஷை கல்விநிதிக்கு மாதா மாதம் நன்கொடையும் அனுப்பி வருகின்றார். மேற்கண்ட நிதியின் மூலதனத்தைத் திரட்ட நமது ஆசிரியர் ம. சண்முகசுந்தர முதலியார் அவர்களும், மேற்கூறிய விரண்டு வாலிபச் சிங்கங்களும், மித்திரன் செவிலித்தாயும் பட்டபாடு கடவுளே அறிவர். சுமார் 50, 60-க்கு மேற்பட்ட ஏழைச் செங்குந்த மாணவர்கள் ஷை நிதியின் வட்டி வருவாயில் உபகாரச் சம்பளம் இலவச உண்டி உடையாதியவை பெறுகின்றனர். சுமார் 15 மாணவர்களுக்கு மேல் உயர்தரக் கல்வி பயின்று பட்டதாரிக ளாயினர். நம்மவர்களுக்குச் சங்கத்தினு லேற்படும் பயனையும், அவசியத்தையும் சீர்தூக்கிப் பாருங்கள்.



தவிர சென்ற மே௴ 16—17உகளில் காஞ்சிபுரத்தில் நமது இரண்டாவது மகாநாடு கூடிற்று. இதில் நமது திருவாரூர் நா. சபாபதி வள்ளலாரவர்களே தலைமை வகித்தனர். வாலிப மகாநாட்டுக்கு நமது வாலிப வீரராகிய, சிவகெங்கை S. மீனாட்சிசுந்தர முதலியார் பி. ஏ., எல். டி., அவர்களே யக்கிராசனம் பூண்டனர். தொண்ட மண்டலத்தில் மிகச் சிறப்பு வாய்ந்த செல்வச் சீமானாகிய காஞ்சீபுரம் ம. த. சாமிநாத முதலியாரவர்களது பெரு முயற்சியாலும் தளரா வூக்கத்தாலுமே இம்மகாநாடு கூட்டப்பட்டது. இவர்களது குலாபிமானத்தையும் தயாள சிந்தையையும், அரிய குணத்தையு மிங்கெடுத்துக் கூறுதல் தற்புகழ்ச்சியாகும். முதல் மகாநாட்டில் கொடியுயர்த்திய பெரியாரிவரே. இவ் விரண்டாவது மகாநாட்டு விஷயமாக நமது பெரியாருடன் ஒத்துழைத்த திருவாளர்கள் சா. ரா. தங்கவேல் முதலியார், கங்காதரமுதலியார் முதலிய குலப் பிரமுகர்களின் குலாபிமானமும் இவண் பாராட்டற்குரியன.

இவ்விதம் நமது குல முன்னேற்றத்திற்காக நமது மாபெருந் தலைவர்களும், செல்வச் சீமான்களும், வாலிபச் சிங்கங்களும், செங்குந்த மாணவர்களும், உடல் நலம், பொருட் செலவு, ஆங்காங்கு நேரும் பலவித இடையூறுகள் யாவையும் பொருட்படுத்தாது குலாபிமானத்தால் யாதொரு பயனையுங் கருதாது தீரமுடனுழைக்கும் இந்நாளில், எண்ணிக்கையி லடங்கா எவ்வளவோ செங்குந்தர்கள் நம்மவர்களுக்காகச் சென்னையில் தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கம் என ஒரு சங்க மிருக்கின்றதென்றும், அதினின்றும் மாத வெளியீடாகச் செங்குந்த மித்திரன் என்னும் பத்திரிகை வெளிவருகின்றதென்றும் இன்னும் கொஞ்சங் கூடத் தெரிந்துகொள்ளாமலே இருக்கின்றனர். பல விடங்களில் "செங்குந்தமித்திரனா? சங்கமா? இதென்ன பங்கமா யிருக்கின்றதே! எங்களுக் கொன்றும் தெரிய வில்லையே!!" என்று சொல்லக்கூடிய பல செங்குந்தர்க ளிருக்கின்றார்கள். இதனை எண்ணுந்தோறும் நமது மனம் புண்படுகின்றது. ஒன்றிரண்டாய் இரண்டு மகாநாடுகள் கூட்டியும், சுமார் $4\frac{1}{2}$ வருஷ காலமாக "செங்குந்தமித்திர"னென்னும் நமது பத்திரிகை மாதந்தோறும் வெளியாய், நம்மவர்கள் வசிக்கும் பல விடங்களிலுஞ் சென்று, நல்லறிவுச் சுடர் கொளுத்திவந்தும், தலைச் சங்கத்தினின்று, பல தலைவர்களும் பிரசாரகர்களும் கிராமங் கிராமமாய்ச் சுற்றி நங்குல முன்னேற்ற விஷயமாய்ப் பல பிரசங்கங்களும், உபந்நியாசங்களும் செய்து நம் மக்களைத் தட்டி யெழுப்பி அவர்களுள்ளத்தில் ஒரு புத்துணர்ச்சியை யுண்டாக்கியிருந்தும், இன்னும் முக்காற்பங்கு பேற்பட்ட செங்குந்தர் இது விஷய மொன்றுமே தெரிந்து கொள்ளாம லிருக்கின்றார்க ளென்றால், இதைவிட வெட்ககரமான விஷயம் நம்மவர்களுக்கு வேறே என்ன விருக்கின்றது? என்னே இவர்களின் கல்வி யறிவு! மூட புத்தி!! இவர்களைப் பொது விஷயங்களில் தலையிட்டுக்கொள்ளாத சுயகாரியப் புலிகளென்றே நாம் கூறுதல் வேண்டும்.

சுமார் ஆறுலக்ஷம் செங்குந்தர்களுக்குமேம்பட்ட தொகையினரையுடைய, நமது சமூகத்தில் சற்றேறக் குறைய 4000 சந்தாதாரர்கள் தான் இருக்கிறார்க ளென்பதைக் கேள்வியுற நம்மனம் வெட்கமொரு புறமும் துக்கமொரு புறமுமாகக் கவலுறவில்லையா? இது நம்மவர்களின் புறக்கணிப்பையும், ஆதரிப் பின்மையையும் உள்ளங்கை நெல்லிக்கனி போலத் தெள்ளிதி னுணர்த்தவில்லையா? குறைந்தது பதினாயிரம் சந்தாதாரர்களாவது இருந்தாலன்றிப் பத்திரிகைத் தொழில் எவ்வாறு நடைபெறு மென்பதை நீங்கள் யோசித்துப் பாருங்கள். என்னே நம்மவர்களின் பிற்போக்கு! புறக்கணிப்பு!! இந்த அவமானத்தைப் போக்கவேண்டுமாயின் சற்றேறக்குறைய செல்வாக்குள்ள ஒவ்வொரு செங்குந்த குடும்பத்தினரும், நமது மித்திரனுக்குச் சந்தாதாரராகச் சேர முயலுதல் வேண்டும். "அவர்கள் வீட்டிற்கு மித்திரன் வருகிறதே, இவர்கள் வீட்டிற்கு மித்திரன் வருகிறதே, நாம் வாங்கி வாசித்துவிட்டால் போகிறது" என்று எண்ணக் கூடாது. இதனை யோர் செலவாகவுங் கருதக்கூடாது. நமது குலமுன்னேற்றத்திற்காக வுழைக்கும் மித்திரனுக்கு நாம் மாதம் இரண்டணா செலவு செய்யக்கூடாதா? இன்னும் கணக்கிட்டுப் பாருங்கள். ஒரு நாளுக்குத் தம்பிடிகூட ஆகவில்லை; 30 நாட்களுக்கு 24 பைதானாகிறது, அதாவது ஒரு நாளுக்கு $\frac{4}{5}$ பையே ஆகிறது. இந்தச் சொற்பத் தொகைக்கு எவ்வளவு வேலை? ஒரு பத்திரிகை தயாரிப்பதென்றால் இலேசாயுள்ளதா? நாமென்னவோ ஒரு விநாடியில் வேண்டாமென்று மறுத்து விடுகிறோம்; ஒரு நிமிஷத்தில் கோபாக்கினி பறக்கும் கடிதத்தை எழுதித் தீர்த்துவிடுகிறோம். வியாஸங்களைச் சேகரிப்பதிலும், அவற்றைத் திருத்துவதிலும், அவற்றை அச்சிடுவதிலும், கட்டுக் கட்டுவதிலும், தபாலாபீசுக்குக் கொண்டுபோவதிலும் உள்ள கஷ்டம் அனுபவிப்பவருக்கன்றோ தெரியும்? நம் வீட்டில் ஒரு விருந்தாளி வரின் அவருக்காக நாலணாவோ, எட்டணாவோசெலவு செய்யவில்லையா? இரண்டணா பெறுமானமுள்ள புத்தக ரூபமாய் வரும் மித்திரனைப் பெற்றுக்கொண்டு தானே, நாம் அவனுக்காக இரண்டணா செலவு செய்கிறோம்? இதிலென்ன நஷ்டமிருக்கிறது? மித்திரனில் எவ்வளவோ அரிய பெரிய விஷயங்களும், வியாசங்களும், நீதிகளும், ஆராய்ச்சிகளும், நவீன விஷயங்களும், நமது குலப் பெரியோர்களின் வரலாறுகளும், கிளர்ச்சிகளும், தேச வர்த்தமானங்களும், பஞ்சாங்கமுங்கூட அடங்கி யிருக்கின்றனவென்பதை நாம் சரிவர உணர்வோமானால், அதற்குக் கொடுக்கும் சந்தாத் தொகை பெரிதல்ல என்று எண்ணும்படி நேரும். எல்

லாம் கூடி, அவர்கள் நம்மிடம் எதிர்பார்க்குந் தொகை ரூபா ஒன்றரை (1—8—0) தான். இந்தத் தொகையும் நமக்காக உழைத்துழைத்திளைக்கும் தலைவர்களது பெட்டிகளிலா குவிகின்றது? நிரும்பவும் உபகாரச் சம்பளமாகவோ, நமது அறிவை வளர்ப்பதற்கு ஆகும் செலவாகவோ (பிரசாரம் முதலிய செலவுகள்) நமக்கே வருகின்றது. இந்தச் சொற்பத் தொகைக்குப் பயந்து பத்திரிகையை வேண்டாமென்று நிறுத்துதல் மிகவும் வெட்கக் கேடான விஷயமென்பதை அன்பர்களுக்கு ஞாபகமூட்டுகின்றேன்.

இப்போதிருக்கும் இந்த நாலாயிரம் சந்தாதாரர்களிற் கூடக் "கொள்ளென்றால் வாய்திறக்கிறது, கடிவாள மென்றால் வாய் மூடிக்கொள்ளுகிறது." என்ற கொள்கையினை யுடையோர் பலராயிருக்கின்றார்கள். பத்திரிகை படிக்கவோ இஷ்டம்; பணங் கொடுக்கவோ கஷ்டம். இன்னும் பலர் 'பத்திரிகையே வேண்டாம் நிறுத்தி விடுங்கள்' என்று வாய் கூசாமல் சொல்லுகின்றனர். சிலர் "உங்களை யார் பத்திரிகை அனுப்பச் சொன்னது? பணங் கொடுக்க முடியாது" என்று உதாசினமாகக் கூறுகின்றனர். சிலர் சண்டை போடவும் முன் வருகின்றனர். இவர்களைக் குலாபிமான மில்லாப் பலா மூடர்களென்றே அறிவாளிகள் கருத நேரிடும். படித்தவர்கள் என்று பேர் வாய்ந்த செல்வாக்குடைய ஒரு சிலர்கள் கூட "எங்களுக்குப் படிப்பதற்கு நேரமில்லையே! எங்கள் வேலை எங்களுக்குச் சரியாயிருக்கின்றதே! எங்களுக்கேன் வீணாய்ப் பத்திரிகை?" என்கின்றனர். இவர்கள் கூற்றை நாம் என்னென்று கழறுவது! இன்னுஞ் சிலர் "வேலையற்ற வீணர்களல்லவா பத்திரிகை படிக்கிறது! நாமேன் வாசிக்க வேண்டும்." என்று சொல்கின்றனர். பலர் "தை மாதம் வாருங்கள், சித்திரை மாதம் வாருங்கள். அப்போது கொடுத்துவிடுகிறோம்" என்று கெடுவிடுகின்றனர். சிலர் "நீங்கள் போங்கள் நாங்கள் அனுப்பி விடுகிறோம்" என்று முகமன் கூறி யனுப்பிவிடுகின்றனர். இத்தகையோரிடத்தி லெல்லாம் உண்மைக் குலாபிமானம் இருக்கின்றதென்று கருத இடமிருக்கின்றதா? இவ்வித அறியாமை, நம்மவர்களிடங் குடிகொண்டிருக்குமானால், 'நம் சமூகம் எந்தக் காலத்தில் மற்றைய சமூகங்களைப் போல முன்னேற்ற மடையும்? இதற்குக் காரணம் நம்மவர்களுக்குக் குலாபிமானமும், பூரண படிப்பு மில்லாத் தன்மையே யாகும்.

இதற்காகத் தான் நமது தலைச் சங்கத்தில் உயர்தரக் கல்வியை யபிவிருத்தி செய்யும் பொருட்டு, ஏழைச் செங்குந்த மாணவர்களுக்கு இலவசச் சம்பளம், உண்டி, உடை முதலிய போதிய உதவியைச் செய்ய மூலதனமாகக் கல்விநிதி யென்னும் ஒரு நிதியைத் திரட்டித் தக்க பாதுகாப்புடன் வைத்திருக்கின்றார்கள். இதில் நம் வகுப்பு ஏழை மாணவர்கள் யாவருக்கும் இலவசச் சம்பளம், உண்டி, உடை முதலியன பெறுதற் குரிமை யுண்டு. சமீபத்தில் கச்சியில் நடந்த நமது இரண்டாவது மகாநாட்டில்கூட இந்நிதிக்குப் பணம் வசூலிக்கப்பட்டது. நன்கொடையாகச் சுமார் ரூபா (4500) நாலாயிரத் தைந்நூருக்குக் கையொப்பம் வாங்கப்பட்டதாகத் தெரிகிறது. பல விதத்திலும் இந்நிதியைப் பெருக்க நம்மவர்கள் முன்வர வேண்டும். விவாகம், சீமந்தம், கர்ணபூஷணம் முதலிய சுபசடங்குகளில் நன்கொடை வழங்குதல், உண்டி வசூலித்தல், மகமை ஏற்படுத்துதல், ஊர்ப் பொதுப் பணத்தில் பாக மீதல் முதலிய வழிகளா லிந்நிதியைப் பெருக்கலாம். இதற்கு நன்கொடை யளிக்க விருப்ப முள்ளவர்கள் சந்தா வசூலுக்காகவும், பிரசாரஞ் செய்வதற்காகவும் தங்களூருக்கு வரும் தலைச்சங்கப் பிரதிநிதிகளிடம் தங்களுக்கு இஷ்டமான பணத்தைச் செலுத்தி, அவரிடமிருக்கும் "கல்விநிதி நன்கொடைச் சீட்டு" என்ற புஸ்தகத்தில் பதிவு செய்து ரசீது பெற்றுக்கொள்ளலாம். வேண்டுமானால் நேரே நமது சென்னை தலைச்சங்கத்திற்கும் அனுப்பலாம். ஒன்றரை ரூபாய் கொடுத்து நமது மித்திரனுக்குச் சந்தாதாரராகச் சேருவதற்கே நமக்கு இஷ்டமில்லையானால், நாம் எவ்வாறு ஒன்று கூடி இதர சமூகத்தவர்களைப் போல, மகத்தான காரியங்களை எளிதில் சாதிக்க முடியும்? இதுகாறும் நமது மித்திரன் பத்திரிகையை நடத்தி வந்ததில் ரூபா 8000-க்கு மேல் சந்தா பாக்கி குவிந்து கிடப்பதாக நமது இரண்டாவது மகாநாட்டுப் பந்தலில் தலைவர்கள் கூக்குர லிட்டமையை அப்போது விஜயஞ் செய்திருந்த கனவான்கள் நன்கறிவர். பலர் அப்போதே பாக்கிச் சந்தாத் தொகையைச் செலுத்திவிட்டனர். அப்படிக் குவிந்துள்ள பாக்கிச் சந்தாத்தொகையை வசூலிக்க நமது தலைச்சங்கப் பிரதிநிதிகளாகிய, திருவாளர்கள் பி. செ. மாணிக்கவாசக முதலியார் அவர்களும், தி. அ. சண்முக முதலியார் அவர்களும், கல்லாலம்பூண்டி தமிழ்ப்புலவர் ச. நா. குமரகுரு முதலியார் அவர்களும், காளி. சண்முக முதலியார் அவர்களும் பல பல ஜில்லாக்களில் சுற்றுப் பிரயாணம் செய்துகொண் டிருக்கின்றனர். நமது மித்திரன் வளர்ச்சி தற்போது நமது நேயர்களின் ஆதரவைப் பொறுத்திருக்கின்றது. "தன் கையே தனக்குதவி" என்ற முதுமொழிக் கிணங்கத் தனது சந்தா வருமானத்திலிருந்தே மித்திரன் தன்னைப் போஷித்துக்கொள்ள வேண்டியவனா யிருக்கிறான். ஆதலின் நமது சந்தா நேயர்கள் மேற்கண்ட நமது சங்கப் பிரசாரகர்களுக்குத் துணையாக விருந்து தங்கள் தங்களூரிலுள்ள சந்தாப் பாக்கி பூராவையும் வசூலித்துக் கொடுப்பது முக்கிய கடமையாகும். இவ்விதஞ் செய்யின் நமது பிரசாரகர்களின் ஊக்கமும் மனவெழுச்சியும் தளராது மேன்மேலும் வளர்ச்சி யடையுமென்பதில் சற்றுமையமில்லை.

சமூகத் தொண்டே சாலச் சிறந்தது என்பது சான்றோர்களின் கொள்கை. நமது பிரசாரகர்கள் சந்தா வசூலிப்பதில் மனச்சோர்வடையாமல் மேலும் மேலும் ஊக்கத்தோ டுழைப்பார்களென்பது மூக்காலுந் திண்ணம். சமூக சேவை



செய்வதி லிணையற்ற முற்கூறிய விரண்டு வாலிபச் சிங்கங்களோடு ஒத்துழைக்கக் கல்லாலம்பூண்டி ச. நா. குமரகுரு வென்னுந் தமிழ்ப்புலமை நிரம்பியதோர் புதிய சிங்கம் சேர்ந்திருப்பதாய் நமது மித்திரன் வாயிலா யறிய மிகவு மகிழ்வெய்துகின்றோம். இவர் தமிழில் மிக்க பாண்டித்யம் வாய்ந்தவர். சந்தக் கவிபாடுவதில் மிகவும் தேர்ச்சி யுடையவர். சிவ பக்தியிற் சிறந்து, குகனடிக் கன்பு பூண்டவர். அடக்கமே யுருக்கொண்டிருந்த வவனியிற்றோன்றி மேலாம் நடக்கையிற் சிறந்தவர். இன்னோர் தமது தொழில்களையும் இல்லறத்தையும் பொருட்படுத்தாது சமூகசேவை யாற்ற முன் வந்தது மிகவும் பாராட்டற் குரியது. பணம் நெருக்கடியான இந்தச் சந்தர்ப்பத்தில், அதிலும் ஏழைச் செங்குந்தர்கள் வதியும் கிராமங்களைக் கொண்ட இந்தத் தென்னாற்காடு ஜில்லாவில், இவர் இவ்வளவு தூரம் சந்தாப் பணம் வசூலித்திருப்பதானது, இவரது நற்றிறமையை ருசுப்பிக்கின்றது. இவர் தம்மாயுள் பரியந்தம் யாதொரு பயனையும் எதிர்நோக்காது, நங்குல முன்னேற்றத்துக் குழைப்பதாக வாக்குறுதி செய்திருக்கின்றனர். இதைப் போலப் பல வாலிபச் சிங்கங்கள் வீரமுடன் துணிந்து சமூக சேவை செய்ய முற்பட்டுவிடின், நமது குலம் சீக்கிரத்தில் முன்னேற்ற மடையுமென்பதி லெட்டுணையு மையமின்று.

ஆகையால் செங்குந்த வாலிபர்களே! உறக்கத்தினின்றும் எழுவீர்களாக! சமூக சேவை செய்யத் தீரமுடன் முன் வருவீர்களாக!! மித்திரன் சந்தா நேயர்களே! நீங்கள் சந்தா பாக்கி வைத்திருப்பின் அதை அவ்விடம் வரும் நமது தலைச்சங்கப் பிரசாரகர்களிடம் செலுத்தி ரசீது பெற்றுக் கொள்ளுங்கள்; அல்லது நேரே நமது மித்திரன் காரியாலயத்திற்கு மணியார்டர் மூலமா யனுப்பிவிடுங்கள். இதுவே நீங்கள் நமது தலைச் சங்கத்திற்கும், மித்திரனுக்கும், செய்யக்கூடிய பேருதவியாகும். செங்குந்த குலச் சகோதரர்களே! சகோதரிகளே!! சீமான்களே! சீமாட்டிகளே!! உறங்காதீர்கள்! அறியாமைத் துயினின்றெழுங்கள்! கண் விழித்துப் பாருங்கள்!! நமது பண்டைய வொளி மழுங்கிக் கிடக்கும் சிறப்புப் பொருந்திய குலமானது மாசு நீங்கி முன்னேற்றமடைய, உறங்கிக் கிடக்கும் நம்மவர் பலர்க்கு விழிப்பூட்டப் புத்துணர் வளிக்கும் நமது ஆருயிர் மித்திரனாகிய "செங்குந்த மித்திர"னுக்கு நீங்கள் ஒவ்வொருவரும் சந்தாதாரராகச் சேருங்கள். உங்கள் உறவினர்களையும் நண்பர்களையும் கூடச் சந்தாதாரராக்க முயற்சியுங்கள் நமது மித்திரன் வளர்ச்சியையும் கல்வி நிதியின் போஷிப்பையுங் கருதி நன்கொடை யளித்துப் பொருளுதவி செய்ய முன் வாருங்கள். குலாபிமானத்தைக் கோருங்கள். சமூக சேவையி லீடுபடப் பாருங்கள். செங்குந்த மித்திரனே நம்மைச் சீராக்குந் துணைவனென்பதைத் தேருங்கள். இது விஷயத்தி லீடுபட எல்லாம் வல்ல இறைவனாகிய முருகப் பெருமான் உங்களுக் கின்னருள் சுரப்பாராக.

சுபம்! சுபம்!! சுபம்!!!

# வராலாமா?

குலாபிமானிகளே! செல்வச் சீமான்களே!

நான் உங்கள் அழகிய இல்லங்களுக்கு வரலாமா? வந்தால் உங்களிடம் உலகப் போக்கைப்பற்றிப் பேசுவேன்; குல விஷயங்களைப்பற்றிக் கூறுவேன். அறிஞர் உபதேசங்களைச் சுமந்து வந்து உங்களுக்கு ஊட்டுவேன். உங்களைப் பல வழிகளிலும் உற்சாகப்படுத்துவேன்.

எனது ஜீவனத்துக்கும் சிறிது பணம் வேண்டாமா? அதற்காக நான் உங்களைக் கேட்பது மாதம் 2 அணாதான்; வருடம் ஒன்றரை ரூபாய்தான். அதையும் நானே எடுத்துக் கொள்ளவில்லை ஐயா! எனக்கு இனமாகப் பலபேர் உண்டியும் உடையும் தருகின்றனர். ஆகையால் உங்கள் தொகையில் நான் எடுத்துக்கொள்வது மிகச் சொற்பமே. அதிற் பெரும் பகுதி உங்களுக்கே திரும்பி வருகிறது. ஏழை மாணவர்கள் சம்பளம் உண்டி முதலியவை பெறுகிறார்களே, அவையெல்லாம் இதிலிருந்துதான் கிடைக்கின்றன.

என் பெயரை நீங்கள் முன்பே கேட்டிருப்பீர்கள். நான்தான் "செங்குந்த மித்திரன்." எவ்வளவோ செலவு செய்கின்றீர்கள். உங்களை உற்சாகப் படுத்தவும் உங்கள் பக்களை நல்வழிப் படுத்தவும் உழைக்கும் எனக்கு வருடம் ஒன்றரை ரூபாய் தரக்கூடாதா?.

அடுத்த மாதமே ஓடி வரலாமா?




## மாணவரது முதற்கடமை

(மகாத்மா காந்தி யடிகளாரது உபதேசம்)

மாணவர்களுக்கும் எனக்கும் நெருங்கிய சம்பந்த மேற்பட்டிருப்பது நான் செய்த பாக்கியமே யாகும். எனக்குக் கிடைக்கும் கடிதங்களில் பெரும்பாலானவை மாணவரிடமிருந்தே வருகின்றன. உலகிலுள்ள மூலை முடுக்குகளிலிருந்தும் மாணவர்கள் எனக்குக் கடிதமெழுதுகிறார்கள். தங்கள் சந்தேகங்களை விளக்கித் தங்களுக்கு வழி காட்டுமாறு என்னைக் கேட்டுக்கொள்ளுகிறார்கள். மாணவர்களின் வாழ்க்கையைச் சீர்திருத்த என்னாலியன்ற வரையில் நான் உழைத்து வருகின்றேன். ஆண்டவன் இன்னும் சில வருஷங்களுக்கு என்னை உயிருடன் வைத்துக்கொண்டிருக்க விரும்புவானானால், இந்தத் தொண்டில் யான் வெற்றியைக் காண முடியுமென எண்ணுகிறேன்.

பொதுவாக உலகிலுள்ள மாணவர்களும், சிறப்பாக இந்தியாவிலுள்ள லக்ஷக் கணக்கான மாணவர்களும் தங்கள் உள்ளத்திலே எனக்கோர் உறைவிட மளித்திருப்பது கண்டு நான் மிக்க சந்தோஷப்படுகிறேன். ஆயினும் நான் உண்மையாகச் சந்தோஷப்படக்கூடிய காலம் இன்னும் வரவில்லை. தங்கள் பள்ளிக்கூடங்கள் அல்லது கல்லூரிகளில் படிப்பதுதான் படிப்பு என்றும், அவற்றை விட்டு விட்ட உடனேயே படிப்பு முடிந்து விடுகிறதென்றும் தற்கால மாணவர்கள் எண்ணிக்கொண்டிருக்கிறார்கள். மாணவனின் படிப்பு பள்ளிக்கூடத்தையோ கல்லூரியையோ விட்டதும் முடிந்துவிடவில்லை. இந்த இடத்தில் எனது சொந்த அனுபவத்தை நான் சொல்லுகிறேன், கேளுங்கள். நான் பள்ளிக்கூடத்தை விட்டு வெளியே வந்ததற்குப் பிறகு கற்றுக்கொண்ட விஷயங்களில் பத்திலொரு பங்கு கூட நான் பள்ளியில் கற்றுக்கொள்ளவே யில்லை. மாணவப் பருவம் என்றால் விஷயங்களை யறிந்துகொள்ளும் பருவம் எனப் பொருள். உண்மையான இந்த மாணவப் பருவம் ஒவ்வொருவருக்கும் அவரவர் பள்ளிக்கூட வாழ்க்கையை முடித்துக்கொண்ட பின்பு தான் தொடங்குகின்றதென்பது எனது அபிப்பிராயம். வாழ்க்கையில் அதிகமாக அடிபட்டிருக்கும் நான் சொல்லுவதை மனதில் கொள்ளுங்கள். வெறும் புத்தகப் படிப்பு உங்களது பிற்கால வாழ்க்கைக்குக் கொஞ்சம் கூடப் பயன்படவே படாது. ஒரு வண்டி புத்தகங்களை வைத்துக்கொண்டு அவற்றிலுள்ள விஷயங்களை நெட்டுருப் போட்டுப்போட்டு மூளையில் திணித்துக் கொண்டதால் பல்லாயிரக் கணக்கான மாணவர்கள் ஒன்றுக்கும் உதவாதவர்களாக ஆய்விட்டார்கள் என்பதை நானறிவேன். சிலருக்கு மூளையே கெட்டுப்போய் விட்டது; இன்னும் சிலருக்குப் பைத்தியம் பிடித்துவிட்டது; வேறு சிலர் திக்கற்ற நிலைமையி லிருந்துகொண்டு அசுத்த வாழ்க்கையை நடத்துகின்றனர். பிசாசு பிடித்துவிட்டால் அதை லேசில் விரட்ட முடியுமா?

ஆகவே "என்ன முயன்றாலும் நாங்கள் முன்னுக்கு வர முடியவில்லையே" எனக் கதறும் மாணவர்களைக் கண்டால் என் மனம் உடைந்து போகின்றது. "எங்களைப் பிடித்துள்ள பிசாசை நாங்கள் எப்படி ஓட்ட முடியும்? எங்களைப் பிடித்துள்ள அசுத்தத்தை நாங்கள் எப்படிப் போக்க முடியும், கொஞ்சம் வழி சொல்லுங்களேன்" என்று மாணவர்கள் என்னைக் கேட்கின்றனர். 'ராம நாமத்தைப் பற்றுங்கள்; ஆண்டவன் முன்னர் முழந்தாளிட்டுப் பணியுங்கள்; அவனது துணையை நாடுங்கள்' என நான் சொன்னால் அவர்கள் என்ன சொல்லுகிறார்கள் தெரியுமா? 'கடவுள் எங்கிருக்கிறா ரென்பதே எங்களுக்குத் தெரியவில்லை; என்ன விதமாக அவரை வணங்குவதென்றும் தெரியவில்லையே' என்கிறார்கள். இந்தத் தற்காலப் படிப்பு அவர்களை இந்நிலைக்குக் கொண்டு வந்து வைத்து விட்டது. பேய்ப் படிப்பு படித்தால் பேய்ப் புத்தி தானே வரும்?

ஆதலால் தான் தாங்கள் படிக்கும் புத்தகங்கள் சரியானவை தானா என்று மாணவர்கள் பார்த்துக் கொள்ள வேண்டுமென நான் சொல்லுகிறேன். அச்சு ரூபத்தில், அட்டை போட்டுத் தைக்கப்பட்டுள்ள எதையும் புத்தகமென்று கொள்ளக்கூடாது. மனிதனின் பரிசுத்த வாழ்க்கைக்கு எவை துணை செய்யுமோ அவைதான் புத்தகங்கள். ஏனையவை புத்தகங்களாகா.

(அடுத்த பக்கம்)



# சீர்திருத்தப் பகுதி

## சமூக சீர்திருத்தம்

(பி. எம். கோவிந்தசாமி, சோளங்கிபுரம்.)

இச் சமயம் நமது தேசத்தில் எங்குப் பார்த்தாலும் சீர்திருத்த மகாநாடுகளும் முன்னேற்றத்திற்கு வேண்டிய ஏற்பாடுகளும் நடந்துகொண்டிருக்கின்றன. ஆனால் நம்மவர்கள் மாத்திரம் அஞ்ஞானத்தில் ஆழ்ந்து காலச்சக்கரத்திற்குத் தகுந்தாற்போல் தங்களுடைய பழக்க வழக்கங்களை மாற்றிக்கொண்டு மேன்மையை அடையாமல சீர்கெட்டு இருக்கிறார்கள் என்பதை அறியாத செங்குந்தனே கிடையாது. இத்தகைய நிலைமையைக் கண்ணுற்ற காலத்தில் என்போன்ற இளஞ் சிறார்களால் தெரிந்த சிலவற்றை எடுத்துரைக்காமல் இருப்பதற்கு முடியவில்லை. ஆனதுபற்றியே இப்போது சீர்திருத்தம் என்கிற விஷயத்தைப் பற்றி யெழுத ஆவலுறுகிறேன்.

தற்போது நம்மவர்கள் மற்றவர்களைப்போல் கல்வி கற்காக் குறையினால் அடையும் அவமானத்திற்கு அளவில்லை. நம்மவர்கள் எவ்வேலையிலாவது பிரவேசித்தால் மற்ற இனத்தாருக்குத் தெரிந்தால் "கக்களையனா?" என்று சொல்லுகிறார்கள். ஏன் அவர்கள் நம்மை அப்படிச் சொல்ல வேண்டும்? நமது கல்வியில்லாக் கொடுமையினால் அல்லவா? நாம் நம்முடைய மக்களை ஏன் நமக்குள்ள சக்திக்குத் தகுந்தாற்போல் படிக்க வைக்கக் கூடாது? நம் இனத்தினர்களில் சிலரைக் கையெழுத்துப் போடும்படிச் சொன்னால் கைநாட்டு என்று சொல்லிப் பேனாவை கையால் தொடுவது எவ்வளவு அவமானமான காரியம்? இது தெரிந்திருந்தும் பெரியவர்கள் 'நாம் இப்படி இருக்கிறோமே; நமக்குப்பிறக்கும் குழந்தைகளையாவது படிக்க வைக்க வேண்டும்' என்று எண்ணாவிட்டால் நாம் எப்படிச் சீர்திருத்தம் அடைவோம்? ஒரு பையன் இரண்டாம் வகுப்பு அல்லது மூன்றாம் வகுப்பு படித்துக்கொண்டும் கையெழுத்துப் போடத் தெரியாமல் இருக்கும்போது படிப்பு வரவில்லை யென்று நிறுத்திவிட்டுத் தறிவேலை பார்க்கும்படி சொல்லுவது எவ்வளவு கேவலம்! நம்மவர்களில் சிலர் படித்தால் அதைப் பார்த்துக்கொண்டிருக்கும் அக்கம் பக்கத்தார் 'நம்மவர்கள் படித்து உத்தியோகத்திற்கு வரப்போகிறார்களா?' என்று அப்பையனுடைய தாய் தந்தைமார்களுக்குச் சொல்லிப் படிக்காமல்படி தடங்கல் செய்வது நல்லதா? 'அவர்கள் பிள்ளைகள் படிக்கிறார்களே; நம் பிள்ளைகள் படிக்கவில்லையே' என்று பொறாமை கொண்டு படிப்பை நிறுத்தும்படி செய்வது எவ்வளவு யோக்கியதையான காரியம்! அப்படிப் படிக்க வேண்டாம் என்று சொல்லும் அறிவுடையோரும் நம் மக்கள் படிக்காவிட்டால் நாம் எப்படிச் சீர்திருத்தம் அடைவது என்று சொல்லட்டும்.

இன்னுமொரு வேடிக்கை! நம்மவர்களில் சிலர் கிராப்பு வைத்துக் கொண்டால் அதைப் பற்றிக் கேலி செய்து 'நம் ஜாதிக்கு இது அடுக்காது' என்று சொல்லி அவனை எடுத்துவிடும்படி சொல்லுகிறார்கள். கிராப்பு வைத்துக் கொள்ளுவதால் ஜாதி கெட்டுப் போகாது என்பதை ஞாபகத்தில் வைத்துக்கொள்ளுங்கள். மற்ற இனத்தினர்களைப்போல்

[202-வது பக்கத் தொடர்ச்சி]

கைக்குக் கிடைக்கும் புத்தகங்களை யெல்லாம் மாணவர்கள் படிக்கக் கூடாது. மாணவரின் ஹிருதயங்களை நல்வழிப்படுத்துமாறு நான் ஆசிரியர்களைக் கேட்டுக்கொள்ளுகிறேன். ஆசிரியரது ஹிருதயங்களுக்கும், மாணவரது ஹிருதயங்களுக்கும் தொடர்பிருத்தல் வேண்டும். மாணவர்களை நல்வழிப்படுத்தும் வேலையைப் பள்ளிக்கூட அறைக்கு வெளியே தான் ஆசிரியர்கள் செய்ய முடியும். ஆனால் இந்தக் காலத்தில் கூலிக்காகவே ஆசிரியர்கள் வேலை செய்கிறார்கள்; குமாஸ்தா வேலைக்கே மாணவர்கள் படிக்கிறார்கள். இந்நிலையில் உண்மையான கல்வி இந்நாட்டில் பரவுவதெங்ஙனம்? மாணவர் வாழ்க்கை தூய்மையாவது எப்படி?

ஹிருதயங்களைப் பரிசுத்தப் படுத்திக்கொள்வதே மாணவரது முதல் கடமை. ஏக்கம், ஏமாற்றம், அதைரியம், அச்சம், கர்வம், கோபம் என்பவை மாணவர் அகராதியி லிருக்கவே கூடாது. நீங்கள் மனத் தூய்மையுடன் விளங்கினால் தான் ஆண்டவன் உங்கள் உள்ளத்திலே வாசம் செய்வார். கர்வங் கொண்டவனின் பிரார்த்தனைக்கு ஆண்டவன் இணங்கமாட்டார். எவன் உண்மை பக்தனோ, எவனிடம் சத்தியமும் தர்மமும் துலங்குகின்றனவோ, அவனது பிரார்த்தனைக்கே ஈசன் இணங்குவார். 'கடவுள் நமக்குத் துணை புரிவார்' என்ற நம்பிக்கை உங்களிலே வேரூன்றி யிருந்தால் தான் அவரது உதவியை நீங்கள் அடைய முடியும். அகத்தூய்மையே ஆண்டவன் விரும்புவது. ஆகவே மாணவனின் முதல் வேலை தன்னைத் தூய்மைப் படுத்திக்கொள்வதுதான்.

(க. சங்கு.)

நாமும் ஓர் இனத்தினர் அல்லவோ. அவர்களைப் போல் நாம் மனிதர்கள் அல்லவா? இப்படி இருந்தால் மேன்மேலும் எப்படிச் சீர்திருத்தம் அடைவது? நம்மவர்களின் பெண்மணிகளுக்குச் சேலை கட்டவும் தெரியவில்லை. நாம் பேசும் பாஷையைப் பார்த்து மற்றவர்கள் பரிகாசம் செய்கிறார்களே. இது எவ்வளவு கேவலயமான நிலை! இவைகளை யெல்லாம் நீங்களே தெரிந்துகொள்ள வேண்டும்.. யாராவது ஒருவர் வந்து பிரசிங்கிப்பாரே யாகில் அவரைப்பற்றிக் கேலி செய்வதும், சிறிப்பதுமாக இருந்தால் நாம் எப்படிச் சீர்திருத்தம் அடைவது? மேலும் நமது பெரியோர்களுக்குப் பெண் கல்வி விஷயத்தில் உள்ள அசிரத்தையோ சொல்லி முடியாதது. பெண்களுக்குக் கல்வி அநாவசியமாம். இந்த ஆண் பூச்சாண்டிகளுக்கு அவசியமாம். என்னே அறியாமை. ஒரு மனிதனுக்கு உள்ள இரண்டு கண்களில் ஒன்று குருடானல் எவ்வளவு அசௌகரவத்தையும் கஷ்டத்தையும் தருமோ அதே மாதிரிதான் ஒரு குடும்பத்தில் உள்ள ஆண் படிக்காமல் பெண் படித்தோ, பெண் படிக்காமல் ஆண் படித்தோ இருப்பது. ஆகையால் கடைசியாக யான் சொல்லுவது யாதெனில் நம்மிடத்தில் உள்ள தற்காலத்திற்கு வேண்டிய நடையுடை பாவனைகளில் பழகி, வீண் விவகாரங்களை விட்டு, உயர்ந்தவன் தாழ்ந்தவன் என்ற பித்தத்தை ஒழித்து, எல்லோரும் சமம் என்ற முறையில் நடந்துகொள்ள வேண்டும் என்பதே. வீண் விவகாரம் நடத்தும் செங்குந்தர்களை யான் அடிபணிந்து வேண்டிக்கொள்ளுவதும் இதுவே.

---

குறிப்பு:—ஐந்தாவது பாரத்தில் வாசிக்கும் ஒரு மாணவனிடமிருந்து இத்தகைய அபிப்பிராயங்கள் வெளிவருவது எமக்குப் பெரிதும் மகிழ்ச்சி யளிக்கின்றது. தன்னுடைய கிராமத்தில் நடக்கும் கேவலமான வழக்கங்கள் சீர் திருத்தத்தை நாடும் இவ்விளைஞன் கண்களில் உறுத்தியுள்ளன. நங் குலத்திலுள்ள வயது முதிர்ந்தவர்களும் இத்தகைய நோக்கம் உடையவர்களா யிருப்பின் நமது குலம் விரைவில் முன்னேறுமென்பதில் ஐயமில்லை. தீய, அநாகரீகமான வழக்கங்களை ஒழித்து, நன்மை கடைப்பிடித்து, முன்னேற்ற வழியில் முயலவேண்டுமென்னும் எண்ணத்தின் வித்தை வீணைக் தூங்கிக் கிடக்கும் வயது முதிர்ந்தவர்களது உள்ளங்களில் இச்சிறுவனது கட்டுரை நடுமென நம்புகிறோம்.

(ப - ர்.)

---

## நன்கொடைகள்

### அசனம்மாபேட்டை திரு. மே. தி. பொற்பாதமுதலியார் வசூலித்தனுப்பியவை

அசனம்மாபேட்டை திரு. பார்த்தசாரதி முதலியார் தமது குமாரர் திரு. பா. பரசுராம முதலியார் திருமணத்தின்போது அளித்தது ரூ. 2—0—0

அசனம்மாபேட்டை திரு. மே. கனகசபை முதலியார் தமது புதல்வர் திரு. மே. க. சிதம்பர முதலியார் திருமண காலத்து வழங்கியது ரூ. 2—0—0

அசனம்மாபேட்டை திரு. தேவராய முதலியார் தமது குமாரர் திரு. லோகநாத முதலியார் திருமணத்தின்போது அளித்தது. ரூ. 0—8—0

புதுப்பேட்டை திரு. திருவேங்கட முதலியார் தமது மகனார் திரு. நடராஜ முதலியார் திருமண வைபவத்தில் வழங்கியது ரூ. 2—0—0

வடமணபாக்கம் K. S. விஜயராகவ முதலியார் தமது குமாரர்களாகிய திரு. எல்லப்ப முதலியார், திரு. சின்னப்பைய முதலியார் ஆகியோர் திருமண காலத்து அளித்தது ரூ. 1—0—0

அசனம்மாபேட்டை திரு. பொன்னம்பல முதலியார் தமது குமாரர் திரு. மாணிக்கமுதலியார் திருமண காலத்து அளித்தது ரூ. 2—0—0

அசனம்மாபேட்டை திரு. கோவிந்த முதலியார் தமது குமாரர்கள் திரு. கோவிந்த முதலியார், திரு. பெரியசாமி முதலியார், திரு. அண்ணாமலை முதலியார் ஆகிய மூவரது திருமண காலத்து அளித்தது ரூ. 1—8—0

இத்திருமணங்களுக்குச் சென்று ஏழை மாணவர்கள் சார்பாக ஒவ்வொருவரும் திருமணம் முதலிய வைபவ காலங்களில் கல்வி நிதிக்கு நன்கொடை வழங்கவேண்டிய அவசியத்தை எடுத்துக் கூறிய திரு. V. ஆரிமுத்து முதலியாருக்கும், மணமக்களுக்கும், நன்கொடைகள் வழங்கிய பெரியார்களுக்கும் அவற்றை வசூலித்தனுப்பிய பெரியாருக்கும் தலைச்சங்கத்தின் நன்றியும் நல் வாழ்த்தும் உரியவை யாகுக


---

திருக்கோவிலூர் தாலுக்கா கண்டாச்சிபுரம் சின்னது முதலியார் குமாரன் ஏகாம்பர முதலியார் பாரியாள் குப்புரத்தின அம்மையின் புஷ்பவதி மங்கள முகூர்த்தத்தில் தலைச்சங்கத்துக்கு நன்கொடையாக அளிக்கப்பட்டது ரூ. 0—8—0

புத்தகரம் திரு. வ. ஆறுமுக முதலியார் குமாரர் திரு. நடராஜ முதலியார் பாரியாள் சீதையம்மாளுக்கு ஆடிமீ 9உ நடந்த வளையற்காப்பு முகூர்த்தத்தில் அளிக்கப்பட்ட நன்கொடை ரூ. 0—8—0

---






கி. மு. 1000 வருடத்திலிருந்தே இந்தியாவில் தங்க நாணயங்களும் வெள்ளி நாணயங்களும் அச்சிடப்பட்டு உபயோகிக்கப்பட்டனவாம்.

*

பிரிடோரியா வைத்தியசாலை யொன்றில் பிறந்து 24 தினங்களாகியும் 6 பவுன் எடையேயுள்ள குழந்தை யொன்றுளதாம். அதுதான் உலகத்திலேயே மிகச் சிறியதாம். போஷிப்புக்காக அதன் மீது ஆலிவ் எண்ணெயைத் தடவி வருகிறார்களாம்.

*

ஆங்கில பாவனையி லொழுகும் சீர்த்திருத்தக்காரர்கள் குளிர்ப்பிரதேசங்களிலும் செருப்பணிவதே சுகாதாரத்துக் கேற்றதெனக் கருதிச் செருப்பே அணிகிறார்களாம்.

*

கடிகாரங்களுக்குக் காலை வேளையில் சாவி கொடுப்பதால் அவை அதிக காலம் உழைக்குமாம்.

*

பேதிகை கொடுப்பதில் மனிதனுக்குக் கொடுப்பதைப்போன்று சிங்கத்துக்கு 4 பங்கும், நீர் யானைக்கு 6 பங்கும் கொடுக்க வேண்டுமாம். சாதாரணமாக யானைக்கு ஒரு தடவை பேதியாக 4 பவுண்டு "எப்ஸம் ஸால்ட்" வேண்டுமாம்.

*

மூளைகளை வைப்பதற்கென்று ஒரு காட்சிச்சாலை ஏற்பட்டுள்ளது. அங்கு நடந்த ஆராய்ச்சியால் அறிஞர் மூளைகளே கனம் மிகுந்தவை எனத் தெரிகிறது. சாதாரண மூளை 45 அவுன்ஸ் எடையுள்ளதாம். பைரன் என்னும் ஆங்கிலக் கவியின் மூளை 60 அவுன்சும், காண்ட் என்னும் ஜெர்மன் தத்துவ சாஸ்திரியின் மூளை 55 அவுன்சும், டர்ஜெனிவ் என்னும் ருஷ்ய ஆசிரியர் மூளை 67 அவுன்சும் உள்ளனவாம். ஆனால் மிகவும் கனமான 75 அவுன்சு எடையுள்ள ஒரு மூளை ஒரு மூடனுடையதாம்.

*

ரோட்ஸ் தீவில் ஒரு கோழி இட்ட முட்டை பாதி பாகம் பழுப்பாயும் பாதி பாகம் வெளுப்பாயும் உள்ளது.

*

செம்மறி ஆடுகள் இறந்த பிறகும் அவற்றின் தோலிலிருந்து கம்பள மயிர் வளர்க்கும் முறை கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. அத்தகைய மயிர் உயிருடனுள்ள ஆட்டிலிருந்து கிடைப்பதைவிடச் சிறந்ததா யுள்ளதாம்.

*

தலைமயிரைப் பளபளப்பாக்க முதன்முதலில் ஸோப்பே உபயோகப் படுத்தப்பட்டதாம்.

*

நிபராஸ்கா என்னும் கிராமத்தில் வியாபாரிகள் எவருக்குமே கடன் கொடுப்பதில்லை. கொடுக்கும் வியாபாரிகள் 20 பவுன் அபராதம் விதிக்கப்படுகின்றனர்.

*

பாரிஸிலுள்ள மிருகக் காட்சிச் சாலையில் இரபாஷ் என்னும் மாது சுமார் 1000 முதலைகளிடையே வெகு சகஜமாய்ப் பயமின்றிப் பழகிவருகிறாம். அவை அவருக் கொரு தீங்கும் செய்வதில்லையாம்.

*

கை குலுக்கும் பழக்கம் மிகப் பழையதாகத் தோன்றுகிறது. புராதன காலத்தில் மனிதர்கள் எப்பொழுதும் ஆயுதபாணிகளாகவே வெளியே புறப்படுவார்கள். நண்பர் சந்திக்கும்போது ஒருவரது ஆயுதம் ஏந்தியுள்ள கையை மற்றொருவர் பிடித்துக்கொள்வாராம். இதிலிருந்தே இப்பழக்கம் பிறந்தது.

*

இங்கிலாந்தில் ஆரம்பப் பாடசாலைகளில் சரித்திரம், பூகோளம் முதலிய பாடங்கள் சினிமா படங்களைக்கொண்டே போதிக்கப்படுகின்றனவாம்.

*

நெருப்புக்கோழி குஞ்சு பொரிக்கும் சமயத்தில் ஒரு முட்டையைக் குத்திவிடுமாம். அம்முட்டையின் நாற்றத்தால் அதைத் தின்னவரும் பூச்சிபுழுக்களே மற்ற குஞ்சுகளுக்கு ஆகாரமாகுமாம்.

*

தூக்கமின்மை, வியாகூலம் முதலிய நரம்பு வியாதிகளுடையோர் நீலநிற வெளிச்சமுள்ள அறையில் நீலத்திரைகள் கட்டித் தூங்குவது நலமாம். பொதுவாகவே படுக்கை யறையில் நீலநிற மிருப்பது பெருநன்மை பயக்குமாம்.

*

# சிறு கதைப் பகுதி

## பாரிசவாய்வும் பறந்தோடியதே,

[திரு. ஜெ. தங்கவேல்]

குலப்பணியே சிறப்பணியாக்
கொண்டாரை யண்டுதுயர்
வலுப்புடைய தானாலும்
வற்றுவதில் வியப்பென்னே ?

உடற் பிணி யொருபால் உற்றிழுக்கவும் மனப் பிணி மறுபால் மன்றாடி நிற்கவும் குந்தப் பெருமாள் முதலியார் உயிர் ஊசலாடியது. பிற்போக்கிற்கும் அஞ்ஞானத்திற்கும் உறைவிடமாகக் கிடந்த மேட்டுப்பட்டி என்னும் கிராமத்தில் அறிவுத் தாகமும், ஆசார வேட்கையும், குலாபிமானமும் ஒருங்கு திரண்டன்ன உருக்கொண்ட அவர் சேற்றி லலர்ந்த செங்கழுநீர் மலர் எனத் தோன்றினர். சேறென்று தான் பிறந்த இடத்தைக் கழுமலர் அசட்டை செய்யுமோ? அவ்விடத்தை அலங்கரிக்கவே முயலுகிறது. தம்மைச் சுற்றித் தமதூரில் வாழ்ந்த தங்குலத்தினராகிய செங்குந்தர்கள் முன்னேற்றம், நாகரிகம் முதலியவற்றின் நறுமணத்தையும் முகராது பின்னணியிற் றயங்கிக் கிடந்தது கண்டு அவருள்ளம் பெரிதும் கலக்கமுற்றது. ஆகவே, அறிவென்னும் ஓடத்தி லவர்களை ஏற்றி அநாகரிகக் கடலினின்றும் கொண்டு சென்று நாகரிகக் கரை சேர்ப்பதற்காகப் பிறப்பிக்கப்பட்ட மாலுமி யென்றே அவர் தம்மைக் கருதினர். பொதுவாகத் தங்குல முன்னேற்றத்தையும் சிறப்பாகத் தமது கிராமத்தாரது முன்னேற்றத்தையும் முக்கிய நோக்கமாகக் கொண்டுழைப்பதே கடனென எண்ணினர். ஆதலால் அத்துறையில் இளமை முதற்கொண்டே முற்பட்டார். உழைத்தார்—ஓயாது, சலியாது உழைத்தார். ஆனால் அந்தோ! மேட்டுப்பட்டி செங்குந்தரை முன்னேற்றுவதினும் கல்லில் நாருரிப்பதே சுலபம் என அவர் சீக்கிரம் முடிவு கட்டினர். ஆயினும் தாம் கொண்ட பெரும் பணியினின்றும் சற்றேனும் தளர்ந்தாரில்லை. இவ்வாறு பல நாட்களாக, பல வருஷங்களாகத் தன்னலங் கருதா துழைத்தும் பயனொன்றும் காணாததால் அவர் மன முடைந்தது. இயற்கையிலேயே சிறிது பலவீனரா யிருந்த அவரது தேகமும் உழைப்பினால் தளர்ந் தொடங்கியது. கடைசியாக அவர் பாரிசவாய் வென்னும் கொடிய நோயின் வாய்ப்பட்டு எழுந்துலவவும் சக்தியற்றுப் படுக்கையாய்க் கிடக்க நேர்ந்தது.

படுக்கையில் சில சமயங்களில் தமது எண்ணங்கள் உருக்கொண் டுலவுவதைக் கண்டு உள்ளம் பூரிப்பார்; சில சமயங்களில் எல்லாம் பகற்கனவே என்றெண்ணி மனங் கறுகுவார். செங்குந்தர் முதலாவது மகாநாடு நடந்த பொழுது அதுவே தம் கிராமத்தவரைச் சீர்திருத்துதற்குத் தக்க சமயமெனக் கருதி, அவர்கள் அதிற் பெரிதும் தலையிட்டு நற்பயன் பெற வேண்டுமென்று அவர் வெகுவாக முயன்றார். ஆனால் பாபம்! அவர் உழைப்பெல்லாம் விழலுக்கிறைத்த நீராயிற்று. மேட்டுப்பட்டி செங்குந்த ரனைவரும் கிணற்றுத் தவளைகளைப் போலத் தம் கிராமத்திலேயே அழுந்திக் கிடந்தார்களேயன்றி, மகாநாட்டிற் கலந்தவரோ அதன் பயனை நுகர்ந்தவரோ ஒருவருமில்லை. அதனால், முதலியாரது உள்ளத்தி லெரிந்த கவலை யெனும்

[205-வது பக்கத் தொடர்ச்சி]

அமெரிக்காவில் வாஷிங்டன் நகரில் ஒரு விவசாயி வளர்க்கும் ஒரு சேவல் இயற்கைக்கு விரோதமாக நீந்துவதில் மிகவும் பிரியமுள்ளதாய் இருக்கிறது. உற்சாகம் வந்தவுடன் அது அருகிலுள்ள ஏரிக்கு ஓடும்.

*

நியூயார்க் நகரிலுள்ள திரு. ஆல்பிரட் கௌதியர் சுமார் 9 கோடியே 10 லக்ஷம் மெழுகுவர்த்தி பிரகாசமுள்ள விளக்கொன்று கண்டு பிடித்துள்ளார். அதன் ஒளியாலான எழுத்துக்களைச் சுமார் 50 மைல் தூரத்திலிருந்தும் பாரக்க முடியுமாம்.

*

ஒரு எறும்பு தன்னைப்போல் 300 பங்கு பருமனுள்ள பொருளை வாயில் தாங்கக்கூடும்.

*

அளவுக்கு மிஞ்சி நீண்ட கைவிரல்களையுடையோர் போதுமான புத்தியின்றிக் குதர்க்கவாதிகளாயிருப்பார்கள். கெட்டியான விரல் அன்பின் மிகுதியையும், மிருதுவான உள்ளங்கை சுக வாழ்வையும் குறிக்கும். பின்புறம் வளைந்த பெருவிரலும் துவண்டு வணங்கும் மற்ற விரல்களும் புத்தி தீட்சண்யத்தையும் சுதந்திர ஜீவனத்தில் ஆசையையும் காட்டும்.

*

ஜெகாஸ் லோவாகியாவிலுள்ள ரசாயன சாலையில் 300 தொழிலாளர்கள் 8 வருஷத்தில் 1 அவுன்ஸ் ரேடியமே உற்பத்தி செய்தார்கள். ஆனால் அதன் விலை 40,00,000 பொன்னும்.



கனல் முன்னினும் மிகுந்த சுடரோடு எழுந்ததேயொழிய தணிந்தபாடில்லை. இத்தகைய மனக் கலக்கத்துடனேயே அவர் நாட்களைக் கழித்து வந்தார். இரண்டாவது மகாநாட்டிலாயினும் தமது கோரிக்கையை நிறைவேற்ற இயலும் என்னும் நம்பிக்கை அவருக்குச் சிறிது தைரியத்தைக் கொடுத்தது. ஆனால் அதுதான் நிறைவேறுவ தெங்ஙனம்? அவரோ படுக்கையே கதியாய்க் கிடந்தார். முன்னர் அவரது ஒப்பற்ற தூண்டுதலாலும் விழித்தெழாத மக்களிடைத் தானாகவா ஊக்கங் கிளைக்கப் போகிறது? ஒரு நாளுமில்லை. முதலியார் இதனை எண்ணுவார்; கலக்க முறுவார்; பிரக்ஞையற்றுக் கிடப்பார்.

சில நாட்கள் சென்றன. இரண்டாவது மகாநாடும் நெருங்கிவிட்டது. குந்தப்பெருமாள் முதலியார் மகாநாட்டையும், தம் கிராமத்தினரையும், தமது உடல் நிலையையும் எண்ணி எண்ணி ஏங்கிக் கிடந்தார். அத்தகைய ஏக்கத்தினிடையே ஒரு நாள் மகாநாட்டைப்பற்றி யோசித்த வண்ணமே கண்களை மூடினர்; அயர்ந்து தூங்கினர். கவலையும் யோசனையும் சற்று நின்றன. ஆயினும் அவரது மூளை வேலை செய்துகொண்டே இருந்தது. முதலியார் பெருவாரியான செங்குந்தர்கள் திரண்டிருந்த ஒரு கூட்டத்திற்குச் சென்றிருந்தார். அதுவே செங்குந்தர்களது முதலாவது மகாநாடு. ஆயிரக் கணக்கான செங்குந்தர்களது உருவங்கள் அக் குலாபிமானியினது கண்களுக்கு விருந்தூட்டின. அறிஞர்களது ஒப்பற்ற உபதேசங்கள் அவரது காதுகளில் ஒலித்து மகிழ்ச்சியை எழுப்பின. இத்தகைய உணர்ச்சியி னிடையே "ஐயோ! நம் கிராமத்தினர் மட்டும் இப்பெரும் வைபவத்தைக் கண்டு களிக்கும் பாக்கியம் பெற்றார்க ளில்லையே. கண்பெற்றிருந்தும் அவர்கள் குருடர்களாகவன்றோ இருக்கின்றார்கள்?" என்பன போன்ற யோசனைகள் அவரிருதயத்தில் ஈட்டிகள் போலப் பாய்ந்தன. மகிழ்ச்சியும் வருத்தமும் குழம்பிய உணர்ச்சியுடன் அவர் தம் கிராமத்தவரை எங்ஙனம் சீராக்குவதென யோசித்தார். சிறிது நேரம் யோசித்த பின் திடசித்தம் கொண்டார். அவர் மனத்தில் ஒரு விதமான தைரியமும் நம்பிக்கையும் தோன்றின. "சரி, முயற்சி யுடையார் இகழ்ச்சி யடையார். எப்படியாவது எடுத்த காரியத்தை முடிப்பேன்; என்னெண்ணங்களை நிறைவேற்றுவேன். அடுத்த மகாநாட்டில்—இரண்டாவது மகாநாட்டில்—எங்கள் கிராமத்தார் பேருக்க மெடுத்துக் கொண்டு முன்னின்றுழைத்துச் சிறப்புறுமாறு செய்யாவிடில் யான் செங்குந்தகுலத் துதித்தவனல்ல. எங்களூரார் வந்து காணாத ஒப்பற்ற காட்சியை யானும் காணாது விடுவேன். அடுத்த மகாநாட்டிற்கு மேட்டுப்பட்டி செங்குந்தர் பலரைத் திரட்டிக் கொண்டு வந்து அவர்களோடு யானும் சரியாக இன்பமடைவேன். இதோ! இப்பொழுதே இங்குநின்றும் விலகுகிறேன். அறிஞர்களே! தலைவர்களே! நவவீரர்களே! எங்குல நாயகனே!— உங்களனைவரது அருளும் என் காரியத்துக் குதவியாகுக" என்ற சபதத்துடன் கூட்டமிருந்த பந்தலை விட்டுப் புறப்பட்டார். 'சோ' வென்ற சப்தம் அவரது காதை யடைத்தது.


இவ்வளவும் கனவே. கனவு கலையும் சமயம். சிறிது உணர்ச்சி வந்தது. ஆனால் நன்றாகத் தெளியவில்லை. அந்த நிலையில் தாம் கனவிற் கேட்ட ஒலிக்கும் பன்மடங்கதிகமான கோஷம் இடியோசை போல் அவர் காதுகளிற் புகுந்தது. தாம் மகாநாட்டிலிருந்து சபதம் செய்துகொண்டு விரைவாகத் திரும்புவதாகவே அவருக்கு எண்ணம். இந்த அதிர்ச்சியில் தன்வச மிழந்தவராய் திடீரெனப் படுக்கையை விட்டுக் குதித்தெழுந்து "இதோ! இதோ!!" என்று கத்திக்கொண்டே தெருப் பக்கம் ஓடிவந்தார். தமது வீட்டு முற்றத்தை யடைந்தார்.

முற்றத்தில் அவர் கண்ட காட்சி அவரைத் திடுக்கிடச் செய்தது; அவரைச் சுய உணர்வுக்குக் கொண்டு வந்தது. நூற்றுக்கணக்கான ஜனங்கள் குந்தக் கொடி பிடித்துக்கொண்டு "செங்குந்தத் தலைவர்கட்கு ஜே! குந்தப்பெருமாள் முதலியாருக்கு ஜே! செங்குந்தர் இரண்டாவது மகாநாட்டுக்கு ஜே!" என்று பலவாறு ஆரவாரித்தனர். முதலியாருக்கு ஒன்றும் விளங்கவில்லை. "என்ன! இரண்டாவது மகாநாடா! எங்கே நடக்கிறது! என்ன விந்தை! இப்பொழுது நான் மகாநாட்டுப் பந்தலிலா யிருக்கிறேன்?" என்று பலபடியாக யோசித்தார்.

சில நிமிஷங்களில் அவர் தெளிவடைந்தார். அவரது சந்தேகங்களெல்லாம் நிவர்த்தியாயின. அங்குக் கூடியிருந்தவரிற் சிலர் "என்ன இது வேடிக்கை! பாரிச வாய்வின் வாய்ப்பட்டு எழுந்திருக்கவும் சக்தியற் றிருந்தாரெனக் கேள்விப் பட்டோமே!" என்றனர். மற்றும் சிலர் "ஆமாம், நாங்கள் நேரிற் பார்த்தோமே" என்றனர். பின்னும் சிலர் "நமக்கெல்லாம் தலைமை பூண்டு நம்மை வழி நடத்தத் திடீரெனத் தெய்வம் தான் இவரது உடலை சொஸ்தப் படுத்திற்றோ?" என்றனர். இவ்வாறு இவர்கள் பேசுகையில் சிலர் அவரது பாதங்களில் வீழ்ந்து பணிந்தனர். ஒரு பெரியார் அவரெதிரே கைகூப்பி நின்றார். முதலியார் "என்ன சமாசாரம்" என்று அவரைக் கேட்டார். அவர் நடந்தவற்றை யெல்லாம் விளக்கினர்.

"ஐயா, இன்னும் 2 நாட்களில் நங்குல மக்கட்குத் தாயகமாகிய காஞ்சிமாநகரில் நமது இரண்டாவது மகாநாடு நடக்கப் போகிறது. அதற்காகப் பணமும் பிரதிநிதிகளும் சேகரிக்கும் பொருட்டு நானும் இன்னும் சில பிரசாரகர்களும் புறப்பட்டு வேலை செய்து வருகிறோம். இவ்வூருக்குச் சுமார் 15 மைல் தூரத்திலுள்ள "அல்லி வனம்" என்னுமூரிற் பிரசாரம் செய்தேன். அங்கே உமது ஊரைப் பற்றியும், தங்களுடைய ஊக்கத்தையும் உழைப்பையும் பற்றியும் தெரியவந்தது. ஆகவே இவ்வூருக்குக் கடுகி யோடி வந்தேன். கூட்டமொன்று கூடிற்று. இவ்வூர்ச் செங்குந்தரது தாழ்ந்த நிலைமையையும்

இதன் தொடர்ச்சியை 209-வது பக்கம் பார்க்க.




வேலையாள்:—ஐயா, என்ன அப்படி யோசிக்கிறீர்?

எஜமானன்:—உன்னிடம் சொல்லி என்ன பிரயோசனம்? எனது நண்பரொருவருக்கு அவசரமாகத் தந்தி யடிக்க வேண்டும். விலாசம் தெரியவில்லை.

வே:—இவ்வளவு தானே. ஒரு கடிதம் எழுதிப் போட்டால் மறு தபாலிலேயே எழுதி யனுப்புகிருர்.

*

கணவன்:—இதோ, இந்த இரண்டு புடவைகளில் எது நன்ருயிருக்கிறதோ அதைப் பொறுக்கி எடுத்துக்கொள்.

மனைவி:—நீங்கள் காட்டுபவைகூட நன்ருயில்லாதிருக்குமா? இரண்டுமே நன்ரு யிருக்கின்றன.

*

செவிடர்:—க்ஷேமந்தானு?

நண்பர்:—க்ஷேமமா! வீட்டில் மனைவிக்குக் காய்ச்சல்.

செ:—அப்படியா? பரவாயில்லை.

ந:—குழந்தையும் காலொடிந்து கிடக்கிறது.

செ:—சந்தோஷம்.

ந:—அடா அப்பா! உனக்கென்ன சந்தோஷம்! நானும் கேடு வந்து கிடந்தால் பொங்கி வழிவாய் போலிருக்கிறது.

செ:—ஆமாம், அப்படித்தா னிருக்கவேண்டும் குடும்ப மென்ருல்.

*

ஒருவர்:—ஏது, செட்டியார்வாள்! சில நாட்களாக எங்குச் சென்ருலும் இந்தக் கொழுத்த தடியை விடமாட்டே னென்கிறீரே!

செட்டியார்:—சில நாட்களுக்கு முன் தான் தெரிந்துகொண்டேன். என்னமோ செல்வர்க்கழகு செழுங்கிளை தாங்குதலாமே.

*

சுப்பி:—அம்மா, உங்களூரில் யாரோ சாமியார் வந்திருக்கிருராமே. ரொம்ப நல்லவராம். ரொம்பவும் தள்ளாதவராமே.

சேஷி:—ஆமாம் எதைக் கொடுத்தாலும் தள்ளமாட்டார்.

*

பிரசாரகர்:—ஐயா உமக்குப் பத்திரிகையின் பெருமை தெரிகிறதா?

சந்தாதாரர்:—நன்ருகச் சொன்னீர். போய்ப் பாரும் பரணைமேல். எவ்வளவு ஜாக்கிரதையாக உயர்ந்த இடத்தில் வைத்திருக்கிறேன் தெரிமா?

*

பட்டிக்காட்டான்:--இதுதான் கலசமானு?

சென்னைவாசி:—ஆமாம்.

பட்டி:—ஏனையா இதற்கு அப்படிப் பெயர்?

செ. வா:—முன் காலத்தில் இக்கட்டடத்தின் உச்சியில் மான் போன்ற ஒரு உருவம் கலசமாக வைக்கப்பட் டிருந்ததாம்.

*

கோவிந்தன்:—பாலு, நேற்று எங்கே போயிருந்தாய்? வீட்டில் காணுமே.

பாலு:—வேட்டைக்குப் போயிருந்தேன்.

கோ:—என்ன கிடைத்தது?

பாலு:—கிடைப்பதா! ஒரு கிளார்க் வேலையை 200 பேர் வேடடையாடினுல் யாருக்குத்தான் கிடைக்கும்?

*

### எண்ணெய்

சீல மிகுந்த தமிழ்ப் பண்டிதர்தான். இருந்தாலும் கோமள விலாஸ் என்ருல் சீலத்தை யெல்லாம் மூட்டை கட்டி வைக்காதிருக்க முடிகிறதா? கோமள விலாஸுக்குப் போய் உட்கார்ந்தேன். வடை கேட்டேன்; கொண்டு வந்து வைத்தான். "இது நெய்யிற் சுட்டதா?" என்று கேட்டேன். "பின்னை எதில் சுட்டது?" என்று தைரியமாகப் பதில் வந்தது. ஆனுல் தின்ருல் சிறிது சந்தேகமாகவே இருந்தது. அதனுல் "என்னப்பா, நெய்யல்லபோ லிருக்கிறதே" என்று இழுத்தேன். "வேறென்னவென்று தோன்றுகிறது?" என்று கேட்டான். "எண்ணைபோ லிருக்கிறது" என்றேன். "நான் சொன்னதுமட்டு மென்ன? என் நெய் அல்லவோ?" — திடுக்கிட்டுப் போனேன். வடையைப் புட்டுக்கொண்டிருந்த கை அப்படியே நின்றுவிட்டது. பள்ளிக்கூடத்தில் எத்தனை தடவை பிள்ளைகள் 'எண்ணெய்' என்று போட்டிருப்பதை அடித்து 'எண்ணை' என்று திருத்தியிருப்பேன்? கடைசியில் கோமள விலாஸ் 'ஸெர்வ'ரா எனக்குத் தமிழ் கற்றுக்கொடுப்பது? நன்னூல் சூத்திரத்தை மூளையிலெல்லாம் தேடுவேனு? அந்தப் பயலின் கர்வத்தைப்பற்றிச் சிந்திப்பேனு?

---



## கக்ஷி பேதங்களும், அவற்ருல் விளையும் தீமைகளும், அவற்றை யொழிக்கும் விதங்களும்.

(பரிசு பெற்ற வியாசம்)

S. S. பொன்னுசாமி முதலியார், வேலநத்தம்.

"ஒன்றுபட்டாலுண்டு வாழ்வே—நம்மில்
ஒற்றுமை நீங்கிடில் அனைவர்க்கும் தாழ்வே"

### கக்ஷிகள்

மூன்று குடும்பங்களையுடைய நம்மவர் வதியும் ஒவ்வொரு சிறு கிராமத்திலும் கக்ஷிகள் உண்டு. கக்ஷியில்லா ஊர்கள் கிடைப்பதரிது. அதாவது நமது செங்குந்தர்கள் வசிக்கும் கக்ஷியில்லாக் கிராமங்களைக் கணக்கிடில் அத்தொகை நமது சமூகப் பட்டதாரிகளின் எண்ணிக்கையையே போட்டியிடுவதாய் அமையும். அன்றியும் கக்ஷிபேதமெனும் கொடிய பெரும்பிணியானது நம்மவர் கிராமங்களிலேயே அதிகம் படர்ந்து வேரூன்றிவிட்டது. என்னே நம் துரதிஷ்டம்! கக்ஷிச் சண்டையால் 'அடிதடி' பட்டுக் கோர்ட்டைத் தேடிப் பணத்தை வாரியிறைத்து மிடியுற்று வயிற்றுப் பிழைப்புக்கே திண்டாடு மநேக குடும்பங்கள் நம் செங்குந்த உலகில் தயங்கித் தவிக்கின்றன. கக்ஷியின் பெயரால் பஞ்சமா பாதங்களுள் அஞ்சத்தக்கதாகிய கொலையெனுங் கொடுஞ்செயல் நடந்த கிராமங்கள் பல. ஆயுட்கால முழுவதும் கக்ஷிகளுக்கே தலைமைபூண்டு தேடற்கரிய பெருநிதிகளை விரையஞ்செய்தும் கக்ஷியின் ஆவல் தீராக் கனவான்கள் பலர். அநேக ஊர்களில் ஒரு கக்ஷியார் எதிர் கக்ஷியாரை அன்னியர் பலங்கொண்டு ஊறுசெய்து ஆனந்திக்கிருர்கள். என்னே நம் சகோதரத்வம்! கக்ஷியின் போராட்டத்தால் சில கோயில்களில் நம்மவருக் கிருக்கின்ற உரிமைகளை இழந்தனர்; இழக்கின்றனர். சில கோயில்களில் சிறப்போடு பூசனை செல்லாது சீர் கெடுத்துக் கதவடைத்து "144"-ஐக் காவல் செய்யவும் அனுமதிக்கின்றனர். அன்றியும் வியாச்சியத்திற்காக ஆண்டுகள்தோறும் ஆயிரக்கணக்கான பொருளை ஏழை எளியவர்களிடத்திலும் கஷ்டம் நோக்காது வரி விகிதம் வசூல் செய்து உபயோகமற்ற வழியில் செலவழிக்கும் பல கிராமங்க ளில்லாமலில்லை. அற்ப விஷயங்களி லெல்லாம் ஆயுளளவும் கக்ஷிகள்தான்.

சில இடங்களில் கக்ஷியால் நினைக்கவும் எழுதவும் அறுவறுக்கத்தக்க எண்ணற்ற தீச்செயல்கள் நிகழ்கின்றன. நாம் கக்ஷிப் பிரதிகக்ஷியால் எல்லா நலனுமற்று ஒளி மழுங்கிப் புகழ் குன்றி உலக முன்னேற்றத்தில் பின்னணியில் நிற்கிறேரும் என்பதை நேயர்கள் நன்கறிவர். நம் கக்ஷிகளை நன்காராய்ந்தாலோசிக்கின், பிறர் நகையாடும் அவ்வளவு அற்ப (சிறுசிறு) விஷயங்களே விசேஷமாக அவற்றிற்கு அடிப்படையாக இருக்கும். கக்ஷி பேதங்களால் விளையும் எண்ணற்ற இன்னல்க ளிருப்பினும் 'கொற்றவ னெவ்வழி குடிகள் அவ்வழி' என்னும் முதுமொழிக் கிணங்க நம்மவர் தலைநகராகிய ஆன்ருேர் உறையும் காஞ்சியம்பதியிலும் பிரிவினைப்பேதம் படர்ந்த தென்ருல் கக்ஷியின் போராற்றலை (தீமை

---

(207-வது பக்கத் தொடர்ச்சி)

மற்றவூர்ச் செங்குந்தரது கிளர்ச்சியையும் பற்றிக் கூறினேன். உம்மைப்பற்றி யான் அறிந்த விஷயங்களை யெல்லாம் நன்ருக எடுத்துக் கூறி, உமது உழைப்பால் விழித்தெழுந்து பயன்பெருது உமது ஊக்கத்துக்கும் தடையாயிருந்த இவர்களது செய்கைகள் எவ்வளவு பாபகரமானவை யென்றும், அப்பாபத்தை நிவர்த்திக்க உம்மிடம் மன்னிப்புப் பெற்று நீர் முயன்ற வழியில் ஈடுபடுதல்தான் சரியான வழியென்றும் காட்டினேன். அதன்மேல் இவர்களிடை ஊக்கம் கிளைத்தது. உள்ளூரார் பல நாட்களாக உழைத்ததெல்லாம் வீணுயிற்று. சென்னையிலுள்ள தலைச் சங்கத்திலிருந்து அனுப்பப்பட்டவ ளுகையால் எனக்கு மதிப்பு ஏற்பட்டது போலும். எப்படியோ கடவுளருளால் பயனேற்பட்டது. இவர்களெல்லாம் மகாநாட்டுக்குச் செல்லப் புறப்பட்டனர். உம்மைக் கண்டு எப்படியாவது உம்மையும் அழைத்துச் செல்வதே எங்கள் கடமை யென்றே உங்களிடம் வந்தோம். தெய்வத் திருவருளால் தாங்களும் திடீரெனச் சுகம் பெற்றீர். தயவுசெய்து புறப்படுங்கள். உங்களுக்குத் தலைச் சங்கம் மிகவும் கடமைப்பட்டுள்ளது."

இவ்வாறு பிரசாரகர் பேசி முடித்தார். அப்பொழுது தான் குந்தப் பெருமாள் முதலியார் முகமலர்ச்சியும் பூரண சுகமும் பெற்ருர். எமன் போன்ற பாரிச வாய்வும் திடீரென அதிர்ச்சியாற் பறந்தோடியதற்காக ஆக்சரியமடைந்ததோடு அவ்வண்ணம் அருள்சுரந்த அடியார்க் கெளியனையும் மனமாரப் போற்றினுர். சிறிது நேரத்துக்குள் அனைவரும் 'ஜே' கோஷத்துடனும் மங்கள வாத்தியங்களுடனும் வலம் செய்துகொண்டு மகாநாடு கூடிய காஞ்சிக்குப் புறப்பட்டனர். முதலியாரவர்களும் பிரசாரகரும் அருகிலிருந்த ரயில்வே ஸ்டேஷன் வரை அழகிய பல்லக்கிற் றூக்கிச் செல்லப்பட்டனர். இந்தக் கூட்டத்தார் மகாநாட்டு வைபவத்தைக் கண்டு அடைந்த ஆனந்தத்தை அளவிட முடியுமா? கண்ணிலார் கண் பெற்ருல் உண்டாகும் உற்சாகத்துக்கும் சந்தோஷத்துக்கும் அளவுதானுண்டா?

யை) என்னென்றுரைப்பது! அன்றியும் பெரியோர்களின் உயரிய உண்மைக் கொள்கைகளை ஓராது அவர்களது பெருமையை நமதென வகித்துச் சூழ்ந்திறுமாந் தின்புற்றிருக்கும் நமக்கு அது ஒரு வித வெறுப்பை விளைப்பதாய் அமையும்.

ஆதலால் கக்ஷியால் வரும் கேடுகளைப் பற்றிய ஆராய்ச்சியை விடுத்து கக்ஷிகளின் காரணங்களையும் அவற்றை ஒழிக்கும் வழிகளையும் பற்றி ஒருவாறாராய்வாம். கக்ஷிகளுக்கு அநேக காரணங்களிருப்பினும், அவற்றுள் கல்வியின்மை, புராதனப் பழக்க வழக்கங்கள், சமூக வுட்பிரிவு, பிடிவாதம், சுயநல வேட்கை, ஒழுக்கமின்மை, ஆகிய இவைகளே முக்கிய காரணங்களாகும். இவற்றைத் தனித்தனியே சுருக்கமாக ஆராய்வாம்.

ஒழுக்கமின்மை

அறிவு, அன்பு, அடக்கம், பொறை, வாய்மை முதலிய அருங்குணங்களை விடுத்து, கள் உண்ணல், புலால் உண்ணல், புறங்கூறல், சூதாடல், நடுநிலை தவறல், முதலிய தீநெறிகளின் வாய்ப்பட்டுத் தீவினையாளராய் ஒற்றுமையை இழக்கின்றோம். உதாரணமாகக் கள்குடியை எடுத்துக்கொண்டால், ஆ! அதனால் விளைந்த கக்ஷிகள் அநேகம். கள்குடியே கக்ஷியின் வளர்ச்சிக்கு மூல காரணமாகும். ஆதலின், தீநெறியகற்றித் தூநெறி பூண்டு,

"ஒழுக்கத்தி னெய்துவர் மேன்மை; யிழுக்கத்தின்
எய்துவ ரெய்தாப் பழி."

என்னும் பொய்யா மொழியைக் கடைப்பிடித்தொழுகலே நாம் வேற்றுமையை ஒழித்து, ஒற்றுமை யுற்றுயரும் சிறந்த வழியென அறிதல் அவசியமாகும்.

சுயநல வேட்கை

அதாவது ஒல்வொரு காரியத்திலும் பிறர் நலம் யாதாயினும் தன்னலமே பெரிதும் கவனித்தல். இச் சுயநலம் கோயில்களிலும், உற்சவ காலங்களிலும், பொதுக் காரியங்களிலும் பெரிதும் பாராட்டப்பட்டுப் பெருத்த கக்ஷிகளுக்கு அடிப்படையாய் நிற்கின்றது. ஆதலால், கக்ஷிகளை ஒழிக்க விரும்பும் நாம் பொதுநல உணர்ச்சி பெற்றுச் சுயநல அவாவை ஒழித்தல் அவசியம்.

பிடிவாதம்.

நியாய அநியாயங்களையும் நன்மை தீமைகளையும் நோக்காது பிடித்ததையே சாதிக்க முயலுதல் நம்மவரிற் சுயநலப் புலிகள் பலரது வழக்கமாயுள்ளது. இதனால் அளவற்ற வேற்றுமைகளே விளையும். ஆதலால், நியாயத்தால் அடையும் சொற்ப நஷ்டங்களையும், பிடிவாதத்தால் வரும் கக்ஷி சச்சரவுகள், அபகீர்த்தி, நஷ்டம் இவைகளையும் சீர்தூக்கி நன்காராய்ந்து நியாயங்களில் நடுநிலை வகித்தும், ஒருவாறு விட்டுக்கொடுத்தல் என்னு முபாயத்தை அனுசரித்தும், பரஸ்பர ஒற்றுமை கொண்டு பிடிவாதங்களை யகற்றின் நம் சமூகக் கக்ஷிபேதங்கள் ஒழிதல் சுலபசாத்தியமாகும். பிடிவாதத்தை அகற்றலே கக்ஷியை ஒழிக்கும் வழியென நாம் கவனிக்க வேண்டுவ தவசியம்.

சமூக வுட்பிரிவு.

நம்மவரில் பல உட்பிரிவுக ளிருக்கின்றன. அவற்றுள் ஒரு பிரிவினர் மற்றொரு பிரிவினரிடம் வித்தியாசம் பாராட்டி, இகழ்ந்தும், தாழ்த்தியும் உரைப்ப தியல்பாகி விட்டது. அவ்வித்தியாசமே பல ஊர்களில் பெரும்பான்மையோராகிய பிரிவினரின் ஆலயப்பணி முதலிய பொதுக் காரியங்களில் அவர்களுக்கிருக்கும் உரிமைகளில் தலையிட முற்படுகின்றது. அதனால் அபாரக் கக்ஷிகள் உண்டாகின்றன. நமது உட்பிரிவினர் எல்லோரும் செங்குந்த குலமக்களே; நம் சகோதரரே என்பதை நன்குணர்ந்து வித்தியாசம் பாராட்டாது சமத்துவம் பூண்டு ஒற்றுமை கொள்ளலே வேற்றுமைகளையும் நமக்குச் சிறந்த சால்பாம்.

புராதன பழக்க வழக்கங்கள்

நமது ஆன்றோர்களால் அனுசரிக்கப்பட்ட பழக்க வழக்க மாமூல்களில் நாம் எடுத்துக் கொண்டவை தற்கால தேச வர்த்தமானங்களுக்கு முற்றும் பொருந்தாத (மூரண்பட்ட)வைகளே என்பது கவனிக்கத்தகுந்த விஷயம். இக்காலத்திற்கியையாச் சில பழக்க வழக்கங்களி லீடுபட்டு வேற்றுமை கக்ஷிகளில் உழலும் நாம், போக்கு வரவு, பத்திரிகை முதலிய சாதனங்களற்ற காலத்தும் அக்காலத்திற் கியைந்த பழக்க வழக்கங்களால் நம்மவரை ஒருமுகப்படுத்தி ஒற்றுமையுட னாட்சி புரிந்த ஆண்மையாளரைக் குறை கூறுவது அறியாமையும் தவறுமே ஆகும். எதிர் காலத்தில் இக்குறைகள் நேருமென்றே பெரியோர்கள் "நாடொப்பன செய்" என்பது போன்ற வாக்கியங்களை அருளினர் போலும். அன்றியும், பொய்யா மொழியாரும்.

"எவ்வ துறைவ துலக முலகத்தோ
டவ்வ துறைவ தறிவு"

என்பதாலும்,

"உலகத்தோ டொட்ட வொழுகல் பலகற்றுங்
கல்லா ரறிவிலாதார்"

என்பதாலும் பழக்க வழக்க மாமூல்களைக் காலத்திற் கேற்பச் சீர்திருத்தலே அறிவுடைமை என்று அழுத்தமாகப் பொன்னேபோல் அருளிப்போந்தார். பொருந்தாப் பழக்க வழக்கங்களை மாற்றுதல் குற்ற மாகாதென்பது ஆன்றோர்களின் றுணிபே. இவ்வுண்மைகளை இன்னும் விளக்கமாக ஆய்ந்து, தள்ள வேண்டுவன தள்ளியும், கொள்ள வேணடுவன கொண்டும், ஒருவாறு சீர்திருத்துதலே கக்ஷிகளை ஒழிக்கும் நமக்குச் சிறப்புடைத்தாம். (இங்கே பழக்க வழக்கங்களைத் தனித்தனி குறித்தல் அசாத்தியம் என்பதை வாசகர்கள் அறிவர்)

கல்வியின்மை

நம் சமூகத்தின் கல்வியில்லாக்குறையே மேற்கண்ட குற்றங்களுக்கெல்லாம் பெரும்பாலும் ஆதரவளிக்கின்றது. கல்வியைப்பற்றி அதிகம் இங்கே வரைய வேண்டிய தவசியமின்று. நம்



மித்திரனில் மாதந்தோறும் கல்வியைப்பற்றிய அறிஞர்களின் சிறந்த கட்டுரைகள் பல திகழ்கின்றன. நிற்க, பெருந் தொகுதியினராகிய நம்மவர், சென்னை சட்ட சபையில் நியமனம் பெறாமல் வீழ்ச்சியுற்றதற்கு முக்கிய காரணம் நம் சமூகக் கல்விக் குறைவே யென்பது மறுக்கொணா வுண்மை. பாருங்கள்; தென்னிந்தியாவில், ஆங்கில அரசாட்சியில், பிராமணர்களின் உன்னத ஸ்திதிக்கு, முதற்காரணம் அவர்களது கல்வியின் முதிர்ச்சியாமன்றோ? அவர்களல்லவா,

"கற்கை நன்றே கற்கை நன்றே
பிச்சை புகினுங் கற்கை நன்றே"

என்ற வாக்கியத்தை யனுசரித் தொழுகுகின்றவர்கள்? கல்வியின் பெருமையை, ஆன்றோரிற் சிறந்த குறளாசிரியரும்,

"மேற்பிறந்தாராயினுங் கல்லாதார் கீழ்ப்பிறந்துங்
கற்றாரனைத்திலர் பாடு"

என்று வகுத்தார். ஆதலால் நாம் நம் சிறுவர்களுக்குக் கட்டாயமாக அழியாக் கல்விப் பொருளாம் தமிழ் மொழியையும், இயன்ற அளவு ஆங்கில மொழியையும் செவ்வனே பயிற்றுதல் அத்தியாவசியமாகும். 'சிலர் ஆங்கிலக் கல்வி எதற்கு'? எனலாம். ஆங்கிலக் கல்வி யில்லாததால் ஏற்படும் கொடுமையும் அதனவசியமும் பிரிட்டிஷ் ராஜ்ஜியத்தில் நடமாடும், வாலிப இளைஞர்களுக்குத்தான் தெரியும். மக்களது பிற்கால க்ஷேமத்தை விரும்பும் பெற்றோர்கள் அவர்களது கல்வி வளர்ச்சியில் குறுக்கிடாது வேண்டிய வுதவி செய்தலே மக்கட்காற்றும் பேருதவியாகும். இக்கல்வியின் பொருட்டுத் தன்னலம் பாராதுழைத்து, நம்மவருக்கென ஓர் உபகாரநிதி திரட்டிய தலைவர்களுக்கும் கொடையாளருக்கும் நம்மித்திரனுக்கும், என்றும் மறவா நன்றி பாராட்ட நாம் கடமைப்பட்டுள்ளோம். நம்மவரின் கல்வியின் பிற்போக்கே கக்ஷிகளுக்கேதுவாகிய தீயவொழுக்க, பழக்க, சுயநல, பிடிவாதங்களுக்கு இடந்தருகிறது. ஆதலால் கக்ஷிகளை ஒழிக்க அவாவும் நமக்குக் கல்வியை விருத்தி செய்தலே முக்கிய கடமையாகும். கல்வியின் பெருக்கால் நாளடைவில் நம்மவரின் கக்ஷிகள் ஒழிந்துபடுமென்பது திண்ணம்.

நிற்க, குலமுன்னேற்றத்திற்கென இடைவிடாதுழைக்கும் நம்மித்திரன், நம்மவர் கக்ஷிகளால் அடைந்த தீமைகளுக் காற்றாது, கக்ஷிகளால் விளையும் கொடிய இன்னல்களை எடுத்தெடுத்தோதி, "இனியேனும் இன்றுடன் கக்ஷிகளை ஒழியுங்கள்! கக்ஷிகளை ஒழியுங்கள்! கல்வியைப் போற்றுங்கள்! ஒன்றுபடுங்கள்! பிற சமூகங்களைப் பாருங்கள்! குலமுன்னேற்றத்தை நாடுங்கள் ஒற்றுமை யின் பத்தை உய்த்துணருங்கள்!!" என்று அடிக்கடி ஞாபக மூட்டி எச்சரிக்கின்றான். நன்மை நாடும் மித்திரனின் கட்டுரைகளை வீணே வாசிப்பதுடனில்லாது, நாம், அதிலும் பொதுஜன அதிகாரம் பெற்ற காரியஸ்தர்களும், பொதுஜன மதிப்பேற்ற கனவான்களும், எண்ணிய எண்ணி யாங்கெய்தும் வாலிப இளைஞர்களும், கக்ஷிகளில் தாம்தாம் வகித்த பதவிகளை விடுத்து அவ்வவ் விடங்களுக்கேற்ற வழிகளால் கக்ஷிகளை ஒழித்து, உலகோன்னத லட்சியமாகிய ஒற்றுமையைப் பரிபாலிப்பதற்காகச் செய்யும் முயற்சியே நம்மைக் கக்ஷியெனுங் கொடும்பிணியினின்று மீட்டு, வேண்டிய பயனளித்து, நம் மெதிர்கால உன்னத வாழ்க்கையை சீருடைத்தாக்கி, குலமுன்னேற்ற வழியில் எதிர்பாராத நன்மைகள் விளைத்து, நம் தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கத்தின் நோக்கத்தை ஒருவாறு பூர்த்தி செய்யுமென்பது திண்ணம்! திண்ணம்!! கக்ஷிகள் தேயவும்! கல்வி அலரவும் நங்குலத் தோன்றலாம். சூர்மாகிரி முதற் றுளைத்தருள் வெற்றிச் செவ்வேற்குகன் பொற்சேவடி போற்றுவாம்.

"நன்றிது தேர்ந்திட வேண்டும்—இந்த
ஞானம் வந்தால் பின் னமக்கென்ன வேண்டும்?
(பாரதி)

என்றும் ஒற்றுமை குன்றாதோங்குக!


சுபம்! சுபம்! சுபம்!

---

குறிப்பு

பல ஊர்களிலும் தற்போதுள்ள கக்ஷிகளைச் சமாதான வாயிலாக வேரோடு களையவும் புதிய கக்ஷிகள் நங்குலத்திடையே முளைத்து வேரூன்றாதிருக்குமாறு அவற்றின் வித்துக்களான பேதங்களைச் சமரஸமென்னும் மருந்திட்டுப் பாழ்படுத்தவும் வல்லவை ஆங்காங்குள்ள கிளைச்சங்கங்களே. ஆகவே, அவற்றின் அங்கத்தினரும், ஊர்க் காரியஸ்தர்களும், பெரியதனக்காரர்களும் இயற்கனவே யுள்ள கக்ஷிகளை யொழிக்கவும், கக்ஷிகள் ஏற்படுதற்கேதுவான தேர்தல், ஆலயத் திருவிழா முதலிய நடக்குங் காலங்களில் மிகவும் ஜாக்கிரதையோடும் நடுநிலைமையோடும் நடத்துகொண்டு புதிதாகக் கக்ஷிகள் ஏற்படாவண்ணம் தடுக்கவும் முயலுதல் குலச்சீர்திருத்தத்திற்கு இன்றியமையாதது. குலமுன்னேற்றத்திற் கடிப்படையான இப்பெருந் தொண்டிற் றலையிட் டுழைக்குமாறு நங்குலப் பெரியார்களுக்கு இறைவன் ஊக்கமூட்டுவானாக!

(ப-ர்.)



பெருமைக்கும் சக்திக்கும் எவனொருவன் பேயாய் அலைகிறானோ அவன் ஒருநாளும் அவற்றை யடைந்து அனுபவிக்கப் போவதில்லை. ஒருண்மையான பக்தன், அவை தமக்கு வேண்டுமென்று ஒரு பொழுதும் பிரார்த்திக்க மாட்டான்.

ராமகிருஷ்ண பரமஹம்சர்.

மாணவனது முதல் வேலை தன்னைத் தூய்மைப்படுத்திக்கொள்வதுதான். மகாத்மா காந்தி.

நம்மைத் திருத்திக் கொள்வதினும் விரைவாக உலகத்தைத் திருத்திவிட முடியாது.

பிஷப் க்ரெய்ட்டன்.

பிறர் துன்பத்தினும் பிறர் இன்பத்தினும் அனுதாபம் காட்டக்கூடிய அளவே நாம் அறநெறியில் முன்னேறுவதாகக் கூறமுடியும்.—ஜார்ஜ் எலியட்.

பொறுமையற்றவர்களே மிகவும் ஏழைகள்.

ஷேக்ஸ்பியர்.

உலகவாழ்வில் உலகம் வழங்கக்கூடியதற்கு மேலும் எதிர்பாராதே. மில்.

கடவுளை அறிதற்கும் அவரிடம் அன்பு செலுத்துதற்கும் இடையேயுள்ள தூரம் எவராலும் கணக்கிட்டுரைக்கமுடியாதது. பாஸ்கல்.

மாணவர் அறியவேண்டியதெனக் கருதுவதை மட்டுமே அறியும் ஆசானைக் காட்டிலும் பயங்கரமான பொருள் உலகத்திலேயே இல்லை. கதே.

எப்பொருளும் உபயோகமற்றதல்ல; தாழ்ந்ததல்ல. ஒவ்வொன்றும் அதற்கேற்ற இடத்தில் சிறந்ததாகவே யுள்ளது. லாங்பெல்லோ.

விருப்பு கதிரவனது ஒளி; வெறுப்பு இருளே. ஒளியும் இருளும் கலந்ததே வாழ்க்கை. விருப்பாகிய பேரொளியுடன் வாழ்வையேல் இருள் தலைகாட்டாது. லாங்பெல்லோ.

பல வாத்தியங்கள் எப்படி ஒரே கீதத்தைப் பாடுகின்றனவோ, அதுபோல், ஹிருதயம், மனம், உடல் மூன்றும் ஒரே உள் அறிவின் கீதத்தைப் பாடவேண்டும். அப்பொழுதுதான் நம் வாழ்வு பூரண அழகும், மணமும், சுவையும் பெறும்.

கிருஷ்ணமூர்த்தி.

இன்பத்தைக் காண்பது எளிதன்று. நமக்குள்ளேயே காண்பது கடினம். வேறிடத்தில் காண்பதோ பின்னும் துர்லபம். ஷாம்பர்ட்.

உனக்குச் சந்தோஷம் வேண்டுமாயின் உன்னோடு வாழ்வோரது நற்குணங்களைப்பற்றிச் சிந்தித்துப் பார். ஔரேலியஸ்.

எத்தனைப் பெரிய மரத் திம்மைகள் எத்தனை தாங்கினாலும் மனத்தை அமைதியாக்க முடியாது. முகமலர்ச்சியுடனிரு; அமைதி உன்னுடையதே.

டெனிஸன்.

எல்லோர்க்கு மல்லாது தங்கட்கு மட்டும் சுதந்தரம் வேண்டுவோர் மிகவும் கீழான அடிமைகளாவர். லவெல்.

எதுவருனும் சரியே; என்ன நடப்பினும் சரியே. எத்தகைய கடினமான தினத்திலும் காலமும் மணிகளும் கடுகிப் பறந்துகொண்டே இருக்கின்றன.

ஷேகஸ்பியர்.

நமக்குவேண்டிய விளக்கை ஏற்றிக்கொள்ள வேறொருவனது நெருப்பண்டை செல்வது சரிதான். ஆனால், நமக்கென்று ஒரு விளக்கைக் கொளுத்திக் கொள்ளாது பிறர் நெருப்பருகிலேயே தங்கிக் காலங் கடத்தல் நன்றன்று.—ப்ளூட்டார்க்.

அன்பின் வாஸஸ்தலமாகிய இருதயமே எண்ணங்கள் பிறக்குமிடம். வாவனார்கூஸ்.

துக்கமாயிருப்பதற்கு ஒருநாளும் நியாயமில்லை.

ஸ்பைனோஜா.

பெரியதோர் காரியத்தின் பொருட்டு உயிரை அர்ப்பணம் செய்தவர் ஒருநாளும் தோல்வியுற்றவராகார். பைரன்.

கண்டுபிடித்து அனுபவிக்க முடியாதைத் தேடவே நாம் பிறந்துள்ளோம். ஆனால் அத்தகையதைத் தேடுவதிலேயே ஒப்பற்ற, முடிவற்ற இன்பம் இருக்கின்றது. பாஸ்கல்.

நாம் எண்ணுவதுபோல் அவ்வளவு சந்தோஷமாகவோ, அவ்வளவு சந்தோஷமின்றியோ நாம் ஒருக்காலும் இருப்பதில்லை. லாரோஷிவக்கல்டு.



# சிறு குறும்பு

பண்டைக்காலத்தில் நாகரிகத்தில் பேர் பெற்றிருந்த ரோமாபுரியை யாண்ட ஹெல்லிக பாலஸ் என்னும் சக்ரவர்த்தி ஒரு வேளை சாப்பிட ஏழரை லக்ஷம் ரூபாய்தான் பிடித்ததாம். சாராயம் நிரம்பிய படகிற் செல்வதை வழக்கமாகக் கொண்டிருந்த அவர் ஒரு குளத்தை அத்தரால் நிரப்பி வைத்திருந்தாராம்.

தினம் ஒன்றே காலணா சம்பாதித்து ஒன்றே முக்காலணா வரி கட்டும் இந்தியன் இதைக்கேட்டுப் பெருமூச்சு விட்டு உயிர் துறந்துவிடுவானோ என அஞ்சுகிறோம்.

*

மூத்தத்தால் கோடிக்கணக்கான கெட்ட கிருமிகள் பரவுவதால் வியாதிகள் தொத்திப் பரவுகின்றன என்பதைப் பொய்ப்பித்து முத்தத்தால் ஏற்படும் கிருமிகளால் நன்மையே யுண்டாகின்றதென டாக்டர் ஜோஸையா ஓல்ட்பீல்ட் சாதிக்கிறார்.

காதலர்களது நன்றியும் 'ஜே' வாழ்த்தும் டாக்டர் ஜோஸையாவுக்கே உரிமையாகுக.

*

இத்தாலிய பிரதம மந்திரி தமது உத்தியோகத்துக்காகச் சம்பளம் எதுவும் பெறாது அமெரிக்க பத்திரிகைகட்கு வியாஸமெழுதுவதால் கிடைக்கும் வருவாயைக்கொண்டே ஜீவிக்கிறாராம். ருஷ்யாவில் பெரிய அதிகாரிகளின் சம்பளமும் 275 ரூபாய்க்கு மேலில்லையாம்.

மேற்படி உத்தியோகஸ்தர்களுக்கு அதிக சம்பளம் பெற்றுத் தடபுடலாக வாழத் தெரியாவிட்டால் அந்தப் பாடத்தை அவர்களுக்குக் கற்றுக்கொடுக்க 4000-மும் 5000-மும் 10000-மும் பெற்றுத் தேசத்துக்காகத் தமது உடல் பொருள் ஆவியை யெல்லாம் அர்ப்பணம் செய்யும் நமது இந்திய மந்திரிகள், நீதிபதிகள் முதலிய 'படே' உத்தியோகஸ்தர்கள் தயாராயிருக்கிறார்கள் எனத் தெரிவிக்கிறோம். பாடம் கற்றுக்கொடுப்பதற்குச் சம்பளம் ஆயிரக் கணக்கில் கொடுத்தாலே போதும்.

*

ஓர் ஆகாய விமானத்தில் பத்திரிகாசிரியர் ஒருவர் பார்ஸலாகக் கருதப்பட்டு லேபிள் ஒட்டி யனுப்பப்பட்டாராம்.

என்ன அவசரம்! தானத்திலெல்லாம் பெரிதான நிதானத்தை அவ்விமானத்திலிருந்த ஆட்கள் நமது தபாலாபீஸ், ரெயில்வே ஆபீஸ் உத்தியோகஸ்தர்களிடம் கற்றுக்கொள்ளட்டும்.

*

டிப்டி கலெக்டர் உத்தியோகத்துக்கு பிராமணர், பிராமணரல்லாத ஹிந்துக்கள், மகம்மதியர், ஆங்கில இந்தியர், கிறிஸ்தவர், ஆசியவாசிகள் ஆகியோரல்லாத தாழ்த்தப்பட்ட வகுப்பினரும் மற்ற வகுப்பினருமே மனுக்கள் போடலாம் என ஸெர்விஸஸ் கமிஷன் விளம்பரம் செய்திருந்தது.

ஒரு பிராமணருக்கும் ஒரு தாழ்த்தப்பட்ட ஜாதிப் பெண்ணுக்கும் கலப்பு விவாகத்தின் பயனாய்ப் பிறந்த ஒருவருக்கு என்ன செய்வதென்று தெரியவில்லையாம்.

*

ஸ்வீடன் இத்தாலி, ரஷியா, ஹங்கேரி, அமெரிக்கா ஆகிய தேசங்களில் அழகில் அரம்பைகளாகக் கருதப்படும் பெண்களது உருவங்களே நாணயங்களில் முத்திரை யடிக்கப்படுகின்றனவாம்.

அழகை "அட்வெர்டைஸ்" செய்வதற்குச் சரியான முறை!

*

பச்சோந்தி பசி முதலிய காரணங்களால் நிறம் மாறுகின்றதாம்.

அரசியற்புலிகளது மன மாற்றத்திற்கும் காரணம் கூடிய சீக்கிரத்தில் கண்டுபிடிக்கப்படுமென நம்புகிறோம்.

*

திர்வாவில் ஒரு சிறுவன் மூட பக்தியால் தன்னைத்தானே கடவுளுக்குப் பலிகொடுத்துக்கொண்டானாம்.

மோக்ஷ உலகில் ஆஸ்பத்திரி யிருக்கிறதோ இல்லையோ தெரியவில்லை. இருந்தால் வெட்டுப்பட்ட தலையை மறுபடி உடலிற் பொருத்த என்ன மருந்து உபயோகிக்கப்படுகிறதெனத் தெரிவிப்பின் நலமாயிருக்கும்.

*

ஆஸ்திரேலியாவிலுள்ள சுதேசிகளின் குழந்தைகள் அங்குள்ள வெள்ளையர் குழந்தைகளைவிடப் புத்திசாலிகளா யிருக்கின்றன.


தமது சிருஷ்டி வேலையில் வெள்ளையருக்கு விரோதமாக நடந்துகொண்ட பிரமதேவன் தண்டனைக்கு ஆளாகவேண்டுமோ அல்லது ஒரு வெள்ளையருக்குத் தமது ஸ்தானத்தைக் காலிசெய்து விடவேண்டுமோ என நடுங்குகிறோம்.

*

விருதாசலத்தில் திருவனந்தபுரம் எக்ஸ்பிரஸ் லைன் விட்டிறங்கியதால் நாலைந்துபேர் காயமடைந்தனர். இதைச் சில பத்திரிகைகள் கீழ்வருமாறு வெளியிட்டன:

"தென்னிந்திய ரெயில்வே பாழ்பட்டது"—"திருவனந்தபுரம் எக்ஸ்பிரஸ் கவிழ்ந்தது"

இந்த அண்டப்புளுகு ஆசிரியர்களுக்குத் தான் பூதக்கண்ணாடிக ளென்று பெயர்.




## சன்மார்க்கன்

அனுபவ விஷயங்களும், ஆராய்ச்சி நுட்பங்களும், சீர்திருத்தக் கொள்கைகளும் போன்ற அரிய விஷயங்கள் பொதிந்த வியாசங்கள் பல தாங்கி யுலவும் இது கொங்கு மண்டல சமரச சன்மார்க்க சங்கத்தின் மாதப் பத்திரிகையாகும். சீரிய தமிழ் நடையில் அறிஞர்களால் வரையப்படும் இதன் வியாசங்கள் இதன் சந்தாதாரரைச் சன்மார்க்கத்திற் புகுத்தித் தனது நற்பெயருக்கேற்ப நிலவும் என நம்புகிறோம். அரசியல் முதலியவற்றைப் பற்றிய செய்திகளும் இதில் வெளி வருகின்றன.

வருடச் சந்தா:—உள்நாடு ரூ. 1-0-0; வெளிநாடு ரூ. 1-4-0. கிடைக்குமிடம்: "'சன்மார்க்கன்' பத்திரிகாலயம், பழனி."

## "கிழவர் குமரரானார்"

பணவேட்டையில் காலங் கழித்து, அமைதியற்ற வாழ்க்கை நடத்தி, அதனால் சக்தியை இழந்து, கிழத்தனத்துக் கடிமையாகிக் கஷ்டப்பட்டுத் தமது 50 ஆவது வயதுக்குமேல் விழித்தெழுந்து வாழ்க்கையைச் சரிபடுத்திக்கொண்டு மிக எளியவையான தமது அப்பியாச முறைகளால் கடந்து சென்ற இளமையை மீட்டு, உலகத்தார்க்கெல்லாம் ஆச்சரியத்தை யளித்துத் தமது 72-ஆம் வயதில் 35 வயது வாலிபச் சிங்கம்போல் திகழ்வதால் "கலியுக மார்க்கண்டேய"ரெனப் புகழப்படும் அமெரிக்கப் பிரபல செல்வந்தரான திரு. சான்போர்ட் பென்னட் என்பவரது சரித்திரத்தை ஆதாரமாகக் கொண்டு எழுதப்பட்ட இச்சிறு புத்தகம், "போயிற்று காலமெல்லாம். இனி வீடுபோ வென்கிறது, காடுவா வென்கிறது" என்று 30-ஆம் வயதிலேயே எமபாசத்திற் சிக்கியவர் போலத் தளர்ந்து பேசும் இந்தியர்களது மனத்தில் புது தைரியத்தையும், உற்சாகத்தையும், வீரத்தையும் புகுத்தவல்லது. உடல்நலச் சாத்திர ஆராய்ச்சியிற் பெரிதும் பாடுபட்டுத் தாம் அறியும் உண்மைகளை அவ்வப்போது சிறு புத்தகங்கள் வாயிலாக வெளியிட்டு வரும் இதன் ஆசிரியரான திரு. லெ. சோமசுந்தரனார் வெறும் பிரசங்கியல்லர்; தாம் கூறுபவற்றைத் தமது அனுபவத்திற் கண்டறிந்தவர்; அனுபவத்திற் காட்டுபவர். இதுவே அவரது கூற்றில் நமக்குப் பெரு நம்பிக்கையை உண்டாக்குகிறது. தேகாப்பியாச மின்மையால் இரத்தக் குழாய்கள் மாசடைந்து நோய்க்கும் மூப்புக்கும் வரவேற்பு கூறுகின்றன வென்பதையும், அத்தகைய அழுக்கை அடிக்கடி துடைத்து அவற்றைப் பலப்படுத்திச் சுருசுருப்புடன் உழைக்கச் செய்வதற்கு மெதுவாகவேனும் (ஆனால் ஒழுங்காக மன ஒருமையுடனும், நம்பிக்கையுடனும்) அவயவங்களைச் சுருக்கி நீட்டுவதே தக்க உபாயமென்பதையும் ஆதாரங்களுடன் இவர் தெளிவாக விளக்குகிறார். இயற்கைத் தொண்டர்களது புத்தகப் பொக்கிஷத்தில் இந்த அழகிய மணியும் ஓரிடம் பெறுக! இப்புத்தகம் கிடைக்குமிடம்:

லெ. சோமசுந்தரன், கீழ்ச்சீவற்பட்டி.

## திருவாடானைப் புராணம்

திருவாரூர் சிதம்பர தேசிகர் குமாரர் சாமிநாத தேசிகர் அவர்களியற்றிய இத்தலபுராணம் வரப்பெற்றோம். இந்நூல் பாண்டிய நாட்டுப் பதினான்கு தலங்களுள் ஒன்றான திருவாடானை என்னுந் திருப்பதியைப்பற்றிய விவரங்களனைத்தையும் பதினொரு சருக்கங்களாக இனிய தமிழ்ப் பாடல்களில் கூறுகிறது. அவ்விபரங்களும் வசன நடையிலெழுதப்பெற்றுப் பின்னே சேர்க்கப்பட்டுள்ளன. இதன் அழகிய கலிகோ கட்டடம் கண்கவர்வது. தலப்பெருமைகளை நாடுவோர்க்கு இந்நூல் பெரிதும் பயன்படுமென நினைக்கிறோம்.

இந்திய கிராம வாசிகளுக்கு

## ஸாக்ரடீஸ் செய்த உபதேசங்கள்

அசுத்தம், முரட்டுத்தனம் முதலிய அநாகரிக வழக்கங்களும், ஜாதி பேதம் முதலிய வீண் வம்புகளும், ஜுரம், அம்மை முதலிய வியாதிகளும், கல்வி யின்மையும் மலிந்து கிடக்கும் கிராமங்களைத் திருத்துவது உலக மக்களது சீர்திருத்தத்தை நாடும் பெரியோரது முதற்கடமையாகும். ஆனால் குதர்க்க வாதிகளாகிய கிராமத்தாருக்கு அவர்களிடமுள்ள கேவலமான செய்கைகளை எடுத்துக் கூறுவதற்கு அறிவுப் பெருக்கமும், அனுபவ முதிர்ச்சியும், நிறைந்த தைரியமும், தளரா ஊக்க



மும் உடைய ஒரு ஸாக்ரடீஸே சரியானவர். அத்தகைய பெரியாரை இந்திய கிராமங்கள் பல நாட்களாக எதிர்பார்த்து நிற்கின்றன. அப்படிப்பட்டவர் ஒருவர் தோன்றி இவ்வழியில் உழைப்பது மிகவும் அருமையாயினும் திரு. ப்ரெயன் அவர்களது புத்தகம் அக்குறையை ஒருவாறு தீர்க்கவே வெளி வந்துள்ளது. இப்புத்தகம் ஸாக்ரடீஸ் பெரியார் இந்திய கிராமவாசிகளது அநாகரிகமான செயல்களைப் பற்றியும் அவற்றைத் திருத்திக்கொள்ளும் முறைகளைப்பற்றியும் அவர்களுடன் சம்பாஷிப்பது போல் எழுதப்பட்டுள்ளது. இது அவர்களிடமுள்ள குறைகளை நன்கெடுத்துக் காட்டும் நிலைக் கண்ணாடியாய் மட்டுமன்றி அவற்றின் நிவர்த்திக்கான நன்மருந்தாயு முள்ளது. இராஜப் பிரதிநிதி இர்வின் பிரபு இதற்களித்துள்ள நல்லபிப்பிராயமே இதன் சிறப்பை வலிவுறுத்தும். கிராமவாசிகள் இதனை வாசிப்பதால் பெரும் பயனடையக் கூடுமென நம்புகிறோம். ஆயிரக்கணக்கான வருடங்களுக்கு முன் ஆயிரக்கணக்கான மைல்களுக் கப்பாலுள்ள கிரீஸ் தேசத்தில் வாழ்ந்த மெய்ஞ்ஞான வடிவினராய ஸாக்ரடீஸ் பெரியாரை இந்திய குக் கிராமங்களிற் புகுத்தி அங்குள்ளவர்களுக்கு உபதேசம் புரியச்செய்த திரு. ப்ரெயன் அவர்களுக்கும் அப்பெரியாரைத் தமிழ் மொழியிற் சம்பாஷிக்கச் செய்த மொழிபெயர்ப்பாளருக்கும் இந்திய மக்களது நன்றி யுறித்தாகுக!

கிடைக்குமிடம்:

ஆக்ஸ்போர்டு யூனிவர்ஸிடி பிரஸ்,
சென்னை.

## திரு. கி. லக்ஷமண சர்மா அவர்களது இயற்கை வைத்திய புத்தகங்கள்

இயற்கை யன்னையின் இணையிலா ஆற்றலைத் தெள்ளிதி னுணர்ந்து, அவளக்கே தொண்டராகி; இயற்கை வைத்தியத்தில் நிபுணராய்த் திகழும் திரு. கி. லக்ஷமண ஸர்மா அவர்களிடமிருந்து பூரணசக்தி, உபவாசத த்வம், மருந்தில்லா வைத்தியம் என்னும் புத்தகங்கள் வரப்பெற்றோம். இருளை யழித்துத் துரிதமாய்ப் பரவிப் பிரகாசிக்கும் தினகரக் கதிர்கள் போன்று இயற்கை முறைகள், அவற்றிற்கு விரோதமான செயற்கை வைத்தியம முதலியவற்றை ஆழ அமிழ்த்திப் பாரெங்கும் பரவி வரும் இக்காலத்தில் மருந்து முதலிய இயற்கைக்கு விரோதமான முறைகளால் சம்பவிக்கக் கூடிய கணக்கற்ற தீமைகளையும், அவற்றிற்கு மாறாக மண், நீர், தீ, வளி, வான் ஆகிய ஐப்பெரும் பூதங்களின் உதவியைக்கொண்டு நடத்தும் தூய வாழ்க்கையான் அடையக்கூடிய ஒப்பற்ற நன்மைகளையும் தெளிவுற எடுத்துக் கூறும் இந்நூல்கள் உருவத்திற் சிறியவையும் விலையிற் குறைந்தவையும் ஆயினும், இம்மை நலன்களை மட்டுமன்றி, மறுமைப் பேறுகளையும் துய்த்து இன்புறுதற்கு வழிகாட்டிகளாயிலகுகின்றன என்பதில் ஐயமில்லை. இயற்கைத் தொண்டர்கள் இவற்றைப் பெரிதும் பாராட்டுவாராக. வேண்டுவோர் இதனை ஆசிரியரிடமே "'இயற்கை இல்லம்', புதுக்கோட்டை" என்னும் விலாசத்திற் பெறலாம்.

## நன்கொடைகள்

30-8-31-இல் பிள்ளையார் பாளையம் திரு. சின்னகுழந்தை முதலியார் குமாரர் திரு. சி. நடராஜ முதலியார் B. A. அவர்களது திருமண காலத்து அளிக்கப்பட்ட நன்கொடை ரூ. 1—0—0

ஆனிமீ 21உ புத்தகரம் செ. அரு. சட்டையப்ப முதலியார் சகோதரன் முருகைய முதலியார் விவாகமுகூர்த்தத்தில் தலைச்சங்கத்துக்கு நன்கொடை யளித்தது ரூ. 0—8—0

புதுவையைச் சார்ந்த கதிர்காமம், மா. சொக்கலிங்க முதலியார் குமாரன் திரு வடிவேலு முதலியாருக்கும், திருப்பாதிரிப்புலியூர் அடுத்த குமாரநாயக்கன் பேட்டை அருணகிரி முதலியார் குமாரத்தி திருவளர் செல்வி விசாலாக்ஷி யம்மைக்கும் பிரசோற்பத்திஸ்ரீ ஆனிமீ 11உ குருவாரம் (25-6-31) நடந்தேறிய திருமண முகூர்த்த காலத்து நமது தலைச்சங்கத்துக்கு நன்கொடையாக அளித்தது ரூ. 0—8—0

திருவல்லிக்கேணி திரு. கு. மாணிக்க முதலியார் குமாரர் திரு. நாகலிங்க முதலியாருக்கும், தக்கோலம் திரு. ந. கு. ஆறுமுக முதலியார் குமாரத்தி சௌ. சிவகாமி யம்மாளுக்கும் நடந்த திருமணத்தில் இருவரும் சேர்ந்து வழங்கிய நன்கொடை ரூ. 2—0—0

மணமக்கட்கும் அவர்கள் பெற்றோர்க்கும் சங்கத்தின் நன்றியும் நல்லாசியும் உரியவையாகுக.

சைதாப்பேட்டை பெஸ்டு பாளையகாட் கம்பெனி கூட்டாளியாகிய திருவாளர் வீ. அருணாசல முதலியார் தமது தாயார் காமாக்ஷியம்மாளின் மோக்ஷதீப காலத்துத் தலைச்சங்கத்துக்கு மனமுவந்து வழங்கிய நன்கொடை ரூ. 21—0—0

இப்பெரியாரது உயர்குடிப் பிறப்பும், அறிவுப் பெருக்கமும், குலாபிமானமும் மிகவும் பாராட்டற்பாலன. சைதாப்பேட்டையில் மகமை வசூலை அபிமானத்துடன் செய்து ஒவ்வொரு மாதமும் தவறாது கல்வி நிதிக்கு வழங்கி வருபவர் இவரது கம்பெனியாரே. செங்குந்த உலகம் இவரிடத்து நன்றி காட்டுமாக.

அம்மையாரது ஆத்மா சாந்தியுறுமாக.

பிரசோற்பத்திஸ்ரீ ஆடிமீ 23உ கலியாணம் பூண்டி தமிழ்ப்புலவர் குமரகுரு முதலியார் தாயார் குப்பம்மை குருபூஜையின் ஞாபகார்த்தமாகத் தலைச்சங்கத்திற்கு நன்கொடையாக அளித்தது 0—4—0

# காந்தியார் படலம்

## மகாத்மாவின் பிரயாணச் செய்திகள்

சர்க்கார் விசாரணைக்கு ஒப்புக்கொண்டதனால் கடைசியாகக் காந்தியடிகளார் லண்டன் மகாநாட்டுக்குக் காங்கிரஸ் பிரதிநிதியாகச் செல்லத் தீர்மானித்தார். ஆகஸ்டு மாதம் 29உ சனிக்கிழமை $1\frac{1}{2}$-மணிக்கு லக்ஷக்கணக்கான தேசாபிமானிகளது மங்கள வாழ்த்து வானத்தைப் பிளக்க அடிகளார் பம்பாயில் "ராஜபுதனம்" என்னும் கப்பல் ஏறினார். அவருடன் பண்டித மாளவியா, ஸ்ரீமதி சரோஜனி நாயுடு, ஸ்ரீமதி மீராபென், சர் பிரபாசிங்கர் பட்டாணி முதலிய பக்தர்களும் புறப்பட்டனர்.

அவர் இங்ஙனம் மகாநாட்டுக்குச் செல்லத் தீர்மானித்ததால் தமது கோரிக்கைகளை விட்டுக்கொடுத்து முன்னுக்குப்பின் முரணாக நடந்துகொண்டாரென எண்ணியவர்களுக்குத் தாம் அப்படியொன்றும் நடந்துகொள்ளவில்லையென்றும், சர்க்கார் மனம் மாறியதாகத் தோனறவில்லையாயினும் நேரான முறையிலேயே ஒப்பந்தத்தை நிறைவேற்றுவரென எண்ணுவதாகவும், தாம் தமது முக்கியமான கருத்தொன்றையும் விட்டுக்கொடுக்கவில்லையென்றும் பதில் கூறியுள்ளார். நம்பிக்கைக் கறிகுறி ஒன்றும் கண்ணுக் கெட்டிய தூரம் வரை காணப்படவில்லை யாயினும் நம்பிக்கை தமது பிறவிக்குணமாகையால் தமது வழிகாட்டியான கடவுளருளால் வெற்றி கிடைக்குமென்று எதிர்பார்க்கிறாரென்பதும், கோடிக்கணக்கான வாயில்லாப் பூச்சிகளது நன்மையைத் தாம் பாதுகாப்பாரென்பதும், தேசத்தின் பல வகுப்பினரது பூரண ஆதரவும் தமது வெற்றிக்கு உதவி புரியுமென நம்புகிறாரென்பதுமே அவரது வாக்குறுதிகள்.

அடிகளாரது கப்பற் பிரயாணத்தைப் பற்றிய செய்திகள் வெகு ருசிகரமானவை. கப்பலேறியவுடன் அவர் தமது சகாக்களுடன் புகைப்படமெடுக்கப்பட்டார். இதுவே அவர் தம்மைப் படமெடுக்க அனுமதித்ததில் முதல் தடவை. கப்பலில் இதர பிரயாணிகளோடு பேசிக்கொண்டும் குழந்தைகளோடு விளையாடிக்கொண்டும் அவர் முதல் நாளை மிகக் குதூகலமாகக் கழித்தார். கப்பற்றலைவர் காப்டன் ஜாக் அவரை அன்புடன் உபசரிக்கிறார். அடிகளாரும் அவருடன் வேடிக்கையாகப் பேசிக்கொண்டிருக்கிறார். "நான் ஒரு பக்ஷ காலம் உமது சிறையாளியா யிருப்பேன்" என்றாராம். காப்டன் கடலில் சீதோஷண நிலையைப் பொருத்தவரையில் தாம் ஒன்றும் செய்ய வியலாதென்றதற்கு, அவர் "ஓ! நான் கைதிமட்டுமா? பெரிய மாலுமியாயிற்றே" என்றாராம்.

தம்முடன் வந்த போபால் நவாப், ஸ்ரீமதி சரோஜனி தேவி, முதலியோர் கடற்பிணிக் காட்களாக, மகாத்மா மட்டும் சுகமாகத் தளத்தில் திறந்த இடத்தில் உறங்கிக்கொண்டும் காலை 4-மணிக்கெல்லாம் துயிலெழுந்துகொண்டும் உற்சாகத்தோடு உணவருந்திக்கொண்டும் காலங்கழிக்கிறார்.

முதல் வகுப்புக்கு மாறும்படி சர் பட்டாணி எவ்வளவு வேண்டியும் மகாத்மா 2-ஆம் வகுப்பிலேயே பிரயாணம் செய்துகொண்டு படிப்பிலும், வியாசங்களுங் கடிதங்களு மெழுதுவதிலும், நண்பரோடு வார்த்தை யாடுவதிலும் காலங்கழித்து வருகிறார்.

மகாத்மாவின் சுகப் பிரயாணத்தையும் வெற்றியையும் கோரும் தந்திகள் நூற்றுக்கணக்காகக் குவிகின்றன. நூல் நூற்ற பின்பு மகாத்மா தளத்தில் பிரார்த்தனை செய்கிறார். அதில் பலர் கலந்துகொள்கின்றனர்.

அடிகளாரது மூட்டைகள் வேடிக்கையானவை. அவரது கதர் பெட்டிக ளிரண்டில் நூல் நூற்கும் இராட்டினங்கள் நான்கும், தாமே நெய்த கதர்த்துண்டுகள் சிலவும், எரவாடா சிறையி லிருக்கையில் வைத்திருந்த தகரப் பாத்திரங்களும் உள்ளன. மகாத்மா லண்டனிலும் சாதாரண உடையுட னிருப்பார். குளிர் தாங்க முடியாவிடின் கம்பளியும் கதரும் சேர்ந்த துணியால் சட்டை தைத்து அணிந்துகொள்வார். அவசியமாயின் பாதரக்ஷை அணிந்துகொள்ள இறந்துபோன மிருகங்களிடமிருந் தெடுத்த தோலைக் கொண்டுபோ யுள்ளார். பல நாட்கள் கெடாதிருக்கும்படி தயார்செய்யப்பட்ட 10 காலன் ஆட்டுப்பாலை அவர் உணவுக்காக எடுத்துச் சென்றுளார். கப்பலில் ஒரு பூனை அடிக்கடி அவர் பாலையும் படுக்கையையும் பங்கிட்டுக்கொள்கிறதாம்.

மகாத்மா சிறிதுநேரம் வேடிக்கையாகக் கப்பலைச் செலுத்தினார். அச்சமயம் அவர் காப்டனிடம் "நான் கப்பலைக் கவிழ்த்துவிடாதபடி பார்த்துக்கொள்ளுங்கள்" என்றாராம். பிறகு இயந்திர அறைக்குச் சென்று ஒரு கலாசாலை மாணவனைப் போல மிகுந்த ஊக்கத்துடன் யந்திரத்தின் நுணுக்கமான பாகங்களைப்பற்றியும் கேட்டறிந்துகொண்டாராம்.

தமது நினைவிலுள்ள இந்தியா—தாம் விரும்பும் இந்தியா—எப்படிப்பட்டதெனக் காந்தியார் கூறியுள்ளார். "அடிமை வாழ்வு அகன்ற சுய ஆட்சி வேண்டும். அன்னியருதவியை நாடாதிருக்க வேண்டும். பிழை புரிவதற்கும் மக்களுக்கு உரி



# கிளர்ச்சி

## செங்கற்பட்டு ஜில்லா

### காஞ்சீபுரம் அய்யங்கார்பாளையம் செங்குந்தர் சத்தியநெறி இளைஞர் சங்கம்.

**ஒட்டக்கூத்தர் திருநாள்.**

மேற்படி சங்கத்தின் ஆதரவில் 25-8-31 மாலை $7\frac{1}{2}$ மணிக்குத் திரு. C. பக்கிரிசாமி முதலியார் அவர்கள் தலைமையில் கூடிய கூட்டத்தில் ஒட்டக்கூத்தர் சரித்திரத்தைத் திரு. C. கைலாயம் அவர்கள் மிகவும் விரிவாக எடுத்துக்கூறிய பிறகு 'ஒற்றுமை' என்பதைப் பற்றித் திரு. R. வீரபத்திரன் அவர்கள் பிரசிங்கித்தார். தலைவர் முடிவுரையில், இத்திருநாளைக் கொண்டாடவேண்டியதின் அவசியத்தைப் பற்றியும், ஒற்றுமையின் உயர்வைப் பற்றியும் நீண்ட சொற்பொழிவாற்றிய பிறகு தலைவர்கள் மாலைசூட்டப் பெற்றனர். வந்தனோபசாரத்துடன் $9\frac{1}{2}$ மணிக்குக் கூட்டம் இனிது கலைந்தது.

## வட ஆற்காடு ஜில்லா

### கலவை.

### ஸ்ரீ சுந்தரவிநாயகர் செங்குந்தர் சங்கம்

14-8-31-இல் 6 மணிக்குக் கூடிய கூட்டத்தில் திரு. வடிவேல் முதலியார், திரு. தா. பரசுராம முதலியார், ஆகியோர் முறையே 'பகவனைப் பாடுதல்,' 'பக்தியில்லாமலே மோக்ஷமடைந்தோர்'—என்பன பற்றிப் பேசியபின் சங்கத்தின் புது உத்தியோகஸ்தர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர். பிறகு திரு N. M. D. பாலசுந்தர முதலியார் 'விடா முயற்சி' பற்றியும், திரு. N. வடிவேல் முதலியார் 'இச்சங்கத்தின் நோக்கமும் வேலைகளும்' என்பது பற்றியும் பேசினர்.

15-7-31-இல் திரு. அ. சு. சின்னசாமி முதலியார் தலைமையிற் கூடிய கூட்டத்தில் திருவாளர்கள் தா. பரசுராம முதலியார், N. M. D. பாலசுந்தர முதலியார், எ. முனுசாமி முதலியார் ஆகியோர் முறையே 'இல்வாழ்க்கை,' 'பெரியோரியல்பு,' 'கல்வி' என்பவைபற்றி விரிவாகப் பேசினர். 3 பேர் புதிதாகச் சங்கத்தின் அங்கத்தினராயினர்.

இரு கூட்டங்களும் வந்தனோபசாரங்களுடன் இனிது கலைந்தன.

## சேலம் ஜில்லா

### பள்ளிபாளையம் சன்மார்க்க செங்குந்த வாலிபர் சங்கம்

மாட்சிமை தங்கிய இச்சங்கத்தின் பொதுக் கூட்டம் 20-4-31 உ இரவு 8-30-க்கு ஸ்ரீ ஓங்காளியம்மன் சுவாமி சன்னிதியில் பிரசிடெண்டு பூ. அ. பால முதலியார் தலைமையில் கூடிக் கீழ்க்கண்ட விஷயங்கள் தீர்மானிக்கப்பட்டன.

1. காரியதரிசிகள் திரு. வ. கு. வீ. அர்த்தனாரி முதலியார் ப. ராமசாமி முதலியார் அவர்களால் இரண்டாவது ஆண்டு நிறைவு விழாவின் வரவு செலவு கணக்குகள் ஆஜர் செய்விக்கப்பட்டுப் பரிசீலனையின்மேல் சங்கத்தால் ஷை கணக்கு ஒப்புக்கொள்ளப்பட்டன.

2. சங்கத்தின் கட்டட நிதிக்குப் பொருள் உதவி செய்த கனவான்களுக்கு இச்சங்கம் நன்றி பாராட்டுவதோடு மற்றும் பல பிரமுகர்களையும் இயன்ற உதவி புரியுமாறு இச்சங்கம் கேட்டுக்கொள்ளுகிறது.

(216-வது பக்கத் தொடர்ச்சி)

மை யிருக்கவேண்டும். எவ்வளவு ஏழ்மைத்தன முடையோராயினும் 'இது எங்கள் சொந்த நாடு' எனச் சுதந்தரத்துடன் கூறிக் குதூகலிக்க வேண்டும்." இத்தகைய இந்தியாவே—அடிமைப் பேயினின்றும் விடுபட்டுச் சுதந்தரத் தாகமும் தேசபக்தியும் நிறைந்து திகழும் இந்தியாவே—வேண்டும். அதுவே தாம் எதிர் பார்க்கும் இந்தியா என்கிறார்.

அடிகளார் கோரும் இந்தியாவில் சுய ராஜ்யத்துடன் அதன் சகோதரியான சமத்துவமும் செழித்திருக்குமாம். ஜாதி பேதங்கள் மறைந்து ஆண்கள் பெண்கள் அனைவரும் பூரண சுதந்தரத்துடன் வாழ்வர். அத்தகைய நன்னாட்டில் சுத்தமும் சகோதரத்துவமும் தாண்டவமாடுமாம். தீண்டாமை என்னும் மலினம் மறைந் தழியுமாம். கட்குடி யென்னும் கருமையும் கரந் தொழியுமாம். எங்கும் ஒற்றுமையும் சமரசமும் ஒளி வீசுமாம். இந்திய மக்கள் பிறநாட்டினரைக் கொள்ளையடிக்கவாவது தம்நாட்டைக் கொள்ளை யடிக்கவிடவாவது ஒப்பாது, அந்நியருடனும் சகோதரத்துவம் கொண்டாடிச் சமாதானத்துடன் வாழ்வராம். நியாயத்தைப் பாதுகாத்து, நியாய வழியிற் செய்யப்படும் எப்பொருளையும்—சுதேசியோ, விதேசியோ—ஆதரிப்பராம். அத்தகைய இந்தியாவிற்கு சொற்ப தொகையுள்ள இராணுவமே போதும்.

இப்படிப்பட்ட இந்தியாவே நமது புனிதாத்மாவின கனவில் நிலவுவது. அதை யடையவேண்டுமென்றே அவர் புறப்பட்டுள்ளார். "மகாநாட்டில் நான் தோல்வி யடைந்தாலும் அடையலாம். ஆனால் எனது கோரிக்கையைத் துளியேனும் குறைக்க மாட்டேன்; காங்கிரசின் கட்டளையை நிறைவேற்றுவதில் எட்டுணையும் பின்வாங்கமாட்டேன்." என அவர் உறுதிமொழி கூறியுள்ளார். வெற்றிவேற் கரத்தான் அடிகளார்க்கு வெற்றி யருள்வானாக!

3. திருவாளர் பெ. ப. லக்ஷ்மண முதலியாரை இச்சங்கத்திற்கு மெம்பராகச் சேர்த்துக் கொள்ளப்பட்டது. இத்துடன் வந்தனோபசாரம் கூறப்பட்டு 9-30 மணிக்குக் கூட்டம் இனிது கலைந்தது.

இம்மகா சங்கத்தின் பொதுக்கூட்டம் 14-5-81 உ இரவு 8-30 மணிக்கு ஸ்ரீ ஒங்காளியம்மன் சுவாமி சன்னதியில் பூ. அ. பால முதலியார் தலைமையில் கூடிக் கீழ்க்கண்ட விஷயங்கள் தீர்மானிக்கப்பட்டன.

(1) சங்கக் கட்டடத்திற்கு வசதியான இடம் பள்ளிப்பாளையம் புதூரில் நந்தப்புரம் புரம்போக்குக் காலி நிலத்தைத் தர்க்காஸ்து மூலமாய் இச்சங்கத்திற்கு உதவுமாறு காருண்ய கவர்மெண்டாரைக் கேட்டுக்கொள்ளுகிறது.

(2) மேற்கண்ட கட்டடத்திற்குப் பத்தாயிரம் செங்கல் உதவுமாறு காவேரி கேப்டன் எல். எச். நீவு துரையவர்களை இச்சங்கம் மிகவும் கேட்டுக் கொள்ளுகிறது.

இத்துடன் திரு. ர. வீ. செ. சுப்ரமண்ய முதலியாரை இச்சங்கத்திற்கு மெம்பராக சேர்த்துக் கொள்ளப்பட்டது. பின்பு காரியதரிசி அவர்களால் வந்தனோபசாரம் கூறப்பட்டு இரவு 10 மணிக்குக் கூட்டம் இனிது கலைந்தது.

மீண்டும் காலை 9 மணிக்கு ஸ்ரீ ஒங்காளியம்மன் சுவாமி சன்னதியில் பிரசிடெண்டு தலைமையில் கூட்டம் கூடிக் கீழ்க்கண்ட விஷயங்கள் தீர்மானிக்கப்பட்டன.

இம்மாதத்தில் சுபநாளில் சங்கக் கட்டட வேலைகளை ஆரம்பிக்க இச்சங்கம் தீர்மானிக்கிறது.

(2) சங்கக் கட்டட வேலைகளைத் திரு. க. சொக்கலிங்க முதலியார் அவர்களையும் திரு. வெ. பழனியப்ப முதலியார் அவர்களையும் சீர்திருத்தத்துக்குரிய சகல வேலைகளையும் கவனித்துக் கொள்ளுமாறு இச்சங்கம் கேட்டுக் கொள்ளுவதுடன் மற்றும் பிரமுகர்களையும் தங்களால் இயன்ற பணி இயற்றுமாறு கேட்டுக் கொள்ளுகிறது.

இத்துடன் வந்தனோபசாரம் கூறப்பட்டுக் கூட்டம் இனிது கலைந்தது.—காரியதரிசி வ. கு. வீ. அர்த்தனாரி முதலியார்.

ஸ்ரீ ஒங்காளியம்மன் சன்னதியில் இம்மகாசங்கத்தின் பொதுக்கூட்டம் திரு. அ. ப. அங்கமுத்து முதலியார் தலைமையில் கூடிற்று. கொ. நா. கந்தசாமி முதலியார் அவர்கள் தவிர மற்ற மெம்பர்கள் ஆஜரா யிருந்தார்கள். தலைவர் முன்னுரையில் இச்சங்கத்திற்கு இவ்வருஷத்திய புதிய நிர்வாக சபையும் பிரசிடெண்டு காரியதரிசிகள் மற்றுமுள்ள உத்தியோகஸ்தர்களது தேர்தல் நடத்தி இச்சங்கத்தை மேன்மேலும் அபிவிர்த்திக்குக் கொண்டு வர மெம்பர்கள் ஒத்துழைக்குமாறு கேட்டுக் கொள்ளுவதாகக் கூறித் தேர்தல் முறைகளை ஆரம்பித்தார்.

இவ்வருஷத்திற்குத் திரு. ப. கொழந்தையப்ப முதலியார் அவர்களைப் பிரசிடெண்டாக நியமிக்குமாறு சோருவதாகத் திரு. வெ. கன்னியபப முதலியார் பிரரேபிக்க, திரு. ப. நஞ்சப்ப முதலியார் ஆமோதிக்க அவர் ஏகமனதாக தேர்ந்தெடுக்கப்பட்டார்.

திரு. ப. நஞ்சப்ப முதலியார் அவர்களைக் காரியதரிசியாகவும் ஆ சுப்ரமண்ய முதலியார் அவர்களை உதவிக் காரியதரிசியாகவும் ப. கொழந்தையப்ப முதலியார் அவர்கள் பிரரேபிக்க, ப. ராமசாமி முதலியார், பெ. ப. லக்ஷ்மண முதலியார் இவர்கள் ஆமோதிக்க, அவர்களை ஏகமனதாக இச்சங்கம் தேர்ந்தெடுத்தது. திரு. வெ. கன்னியப்ப முதலியார் அவர்களை மீண்டும் இவ்வருஷத்திற்குப் பொக்கிஷதாரராக நியமிக்குமாறு திரு. பெ. ப. லக்ஷ்மண முதலியார் பிரரேபிக்க ஆ. சுப்ரமண்ய முதலியார் ஆமோதிக்க ஏகமனதாக இச் சங்கம் தேர்ந்தெடுத்தது.

அன்று 'கல்வி', 'ஜீவகாரு யம்', 'கதர்' என்பவைப்பற்றி முறையே திரு. ப. நஞ்சப்ப முதலியாரும் திரு. பெ. ப. லக்ஷ்மண முதலியாரும் திரு. ப. குழந்தையப்ப முதலியாரும் நிகழ்த்திய உபந்யாசங்கள் மிகவும் போற்றத்தக்கவை. அவைத் தலைவர் முடிவுரைக்குப்பின் வந்தனோபசாரத்துடன் கூட்டம் இனிது கலைந்தது.

இம்மகா சபையின் பொதுக்கூட்டம் ஸ்ரீ ஒங்காளியம்மன் சுவாமி சந்நிதியில் பிரசிடெண்டு திரு. ப. கொழந்தையப்ப முதலியார் அவர்கள் தலைமையில் மாலை 4-30 மணிக்குக் கூடிற்று.

1. அவ்வமயம் சங்கத்தின் சட்ட திட்டங்கள் இவ்வருஷத்திற்கு இன்னும் ஏற்படாதிருந்தமையாலும் 1929ஞுத்திய விதிகளில் சில மாற்ற வேண்டி யிருந்ததாலும் புதிய சட்ட திட்டங்களைத் தயாரித்து அடுத்த கூட்டத்தில் ஆஜர் செய்விக்குமாறு எல்லா மெம்பர்களுக்கும் இச்சங்கம் உத்தரவிடுகிறது.

2. நமது அங்கத்தினர் ஒவ்வொருவரும் மாதா மாதம் நாலணா சந்தா செலுத்தி வர வேண்டுமென்று ப. அங்கமுத்து முதலியார் பிரரேபிக்க ப. அங்குமுத்து முதலியார் ஆமோதிக்க ஏக மனமனதாய் தீர்மானிக்கப்பட்டது.

3. இச்சங்கக் கட்டடம் கட்டுவதற்கு வாக்களித்துள்ள நன்கொடை ரூபாய்கள் தற்சமயம் நமக்கு உதவாமையால் கட்டடம் பூர்த்தியாகவேண்டியிருப்பதால் கட்டடச் செலவுக்காகக் கடன் வாங்கும் பொருட்டுக் கீழ்க்கண்ட நபர்களைக் கட்டடப் பாதுகாப்பாளர் சபையாக இச்சங்கம் நியமிக்கிறது. வெ. கன்னி முதலியார் 1, ப. ராமசாமி முதலியார் 2, பூ. அ. பால முதலியார் 3, மு. ப. அங்கமுத்து முதலியார் 4, ப. நஞ்சப்ப் முதலியார் 5, ஆ. சுப்ரமண்ய முதலியார் 6, வீ. அர்த்தனாரி முதலியார் 7, உ. ப. ராமசாமி முதலியார் 8, பெ. ப. லக்ஷ்மண முதலியார்.

4. கட்டடச் செலவிற்காக மேற்கண்ட சபையினர் வாங்கும் எல்லாவித கடன்களையும் இச்சங்கம் ஒப்புக்கொள்வதோடு ஷை கடன்களுக்கு இச்சங்கத்தின் சொத்துக்களையும் ஷை கட்டடத்தையும் விநியோகிக்கப் பாதுகாப்பாளர் சபையினருக்கு அதிகாரம் உண்டு.

5. நமது தலைச்சங்கத்திற்கு நாம் கட்ட வேண்டிய கட்டணத்தொகை ரூ. 5-0-0 கட்டி விடுமாறு பொருள் காப்பாளருக்கு இச்சங்கம் உத்தரவிடுகிறது.

6. நமது சங்கக் கட்டடவேலைக்கு நன்கொடை ரூபாய்கள் போதாமையால் நமது தலைச்சங்கத்தையும் கல்விநிதி காப்பாளர் சபையையும் முதலாவது மகாநாட்டு வரவேற்புக் கமிட்டியையும் இன்னும் இதர சங்கங்களையும் குலாபிமானிகளையும் பொருளுதவி செய்யுமாறு இச்சங்கம் கேட்டுக் கொள்ளுகிறது. இத்துடன் கூட்டம் இனிது கலைந்தது.

காரியதரிசி ப. நஞ்சப்ப முதலியார்.

## அம்மாபேட்டை சேலம்

### மஹாத்மா காந்தி தேசீய வாலிபர் சங்கம்.

திரு. ச. கந்தசாமி முதலியார் தலைமையில் 29-8-31-இல் 7 மணிக்குக் கூடிய 6-வது கூட்டத்தில் திரு. காந்திஜி அவர்களது ஒப்பற்ற தொண்டையும் அவர் வழியில் நாம் செய்யவேண்டிய பணிகளையும் பல வாலிபர்கள் விரிவாக எடுத்துக் கூறினர். தலைவர் முடிவுரைக்குப் பின் வந்தனோபசாரத்துடன் கூட்டம் 3-45-க்குக் கலைந்தது.

---

## கோயமுத்தூர் ஜில்லா

### செங்குந்த வாலிபர் கழகம்

ஷை சங்கத்தின் ஐந்தாவது வாரக் கூட்டம் ரங்கேய கவுண்டர் தெருவிலுள்ள சங்கக் கட்டடத்தின் வாசக சாலையில் 28—6—31 ஞாயிற்றுக் கிழமை திருவாளர் T. S. இராமசாமி அய்யர் B. A., B. L., M. L. C. அவர்கள் தலைமையில் மாலை 4½ மணிக்குக் கூடிற்று. தேவாரம் பாடப்பட்டு முன் கூட்டத்தின் குறிப்பு வாசிக்கப்பட்ட பின் தலைவர் தமது முன்னுரையில் சங்கங்களின் அவசியத்தையும் அவை செய்யவேண்டிய பணிகளையும் கூறினர். மாணவர் மயிலுசாமி தேசிய கீதம் பாடினர். பின்னர் திருவாளர்கள் மூலத்துறை E. V. துரைசாமி முதலியார், N. இலக்ஷ்மண முதலியார், சி. சுப்பைய முதலியார், மாவை. இரத்தினவேல் ஆகியோர் முறையே "கடவுள் வழிபாடு" "சமூக சேவை" "நம்நோக்கம்" "விடா முயற்சி" என்னும் விஷயங்களைக் குறித்து விரிவுரைகள் நிகழ்த்தினர்கள்.

பின்பு தலைவர் தமது முடிவுரையில் "அன்பே சிவம்" "சமூக சேவையே கடவுளைச் செம்மையான முறையில் உபாசிப்பதாகும்" என்பதனைத் தெளிவாக எடுத்துக் காட்டினர். மேலும் குல முன்னேற்றத்திற்கும் தேச முன்னேற்றத்திற்கும் கல்வி அபிவிருத்தி வேண்டுமென்பதை வலியுறுத்திக் கூறி அதற்கு ஒத்தாசையாகத் தமது நண்பரும், செங்குந்த குலச் சீமானும் கோவை பிரபல வர்த்தகருமான திருவாளர் வா. செ. செங்கோட்டையா முதலியார் மகிழ்வுடனும் ஊக்கத்துடனும் பொருளுதவி செய்து மாணவர் விடுதி நிருவியிருப்பதைப் பெரிதும் பாராட்டுவதாகவும் அவரைப் பின் பற்றி ஒவ்வொருவரும் தங்களாலான பணியை செய்யவேண்டு மெனவும் கூறினர்.

அவ ரமர்ந்தபின் சங்கத் தலைவர் திருவாளர் V. S. செங்கோட்டையா முதலியார் நம் தேச நிலைமையையும் மாணவர்கள் பிற்கால நிலையையும் உத்தேசித்து மாணவர்கள் விடுதியில் ஓய்வு நேரங்களில் மாணவர்கள் நெசவுத் தொழிலை அபிவிருத்தி முறையில் பழகுவதற்கு வேண்டிய சாதனங்களை அமைப்பதாக வாக்கருளினர்.

ஞாயிறுதோறும் சங்கவாசகக் கூட்டங் கூட வேண்டுமென்றும், மாதமொருமுறை சங்கத்தைச் சாராத அறிவாளிகளைத் தலைமை வகிப்பதற்கும் சொற்பொழிவுகள் நிகழ்த்துவதற்கும் அமைத்தல் வேண்டு மென்றும், ஒவ்வொரு அங்கத்தினரும் 4 அணா கட்டணமாகச் செலுத்துவதென்றும், அதை 3-வது ஞாயிறன்று சங்கக் கூட்டம் கலையும் முன்னர் எடுத்து இருபாகமாக்கி ஒரு பாதியைச் சங்கத்திற்கும், மற்ற பாதியில் மூன்றில் இரண்டு பாகத்தை முதல் பரிசாகவும் மற்ற ஒரு பாகத்தை இரண்டாவது பரிசாகவும் அங்கத்தினருக்குக் கொடுப்பது என்றும் தீர்மானமாயிற்று. பின்னர் கட்டண ரசீது புஸ்தகங்களை கணபதி, கோயமுத்தூர், காட்டூர் தேவாங்கப்பேட்டை முதலிய இடங்களில் வசிப்பவர்களிடம் கொடுக்கப்பட்டது. பின்னர் வந்தனோபசாரத்துடன் கூட்டம் கீதத்துடன் கலைந்தது.

ஷை சங்கத்தின் 9-வது வாரக் கூட்டம் ரங்கே கவுண்டர் வீதியிலுள்ள சங்கக் கட்டிடத்தில் 26-7-31 ஞாயிற்றுக்கிழமை மாலை 5 மணிக்கு உயர் திருவாளர் V. அருணாசலம் செட்டியார் F. M. U. அவர்கள் தலைமையிற் கூடிற்று.

தலைவர் தமது முன்னுரையில் தாமும் நெசவுக்காரர்கள் குலத்தில் பிறந்திருப்பதால் இந்தச் சங்கத்தில் தமக்குப் பாத்தியதை உண்டென்று உரிமை பாராட்டினர். உலக சிரேஷ்டரான மகாத்மா காந்தி அடிகள் நெசவுக்குக் கொடுத்திருக்கும் விசேஷ மதிப்பையும், நெசவினால் நாம் எப்படி நம் தேசத் தொண்டைச் செய்யலாம் என்பதையும் தெளிவாகக் கூறினர்.

பின்பு கோவை லண்டன் மிஷன் உயர்தரக் கலாசாலைத் தமிழ் வித்வான் கிருஷ்ணசாமி நாயுடு அவர்கள் செங்குந்த வீரர்களுடைய பண்டை வெற்றியையும், கவிச்சக்கரவர்த்தி ஒட்டக்கூத்தரின் சிறப்பையும், செங்குந்த வாலிபர்கள் முன்னேற்றமடைய வேண்டிய வழிகளையும், சமநிலையின் மேன்மையையும் உதாரணங்களுடன் விரிவாக எடுத்துக் கூறினர். பின்னர் நகர பரிபாலன சபையின் உயர்தர பாடசாலையின் தமிழ்ப் பண்டிதர் திரு. கு. நடேச

கவுண்டர் அவர்கள் தமிழ் மறையான திருக்குறளின் அருமையான பாகங்களை எடுத்து விளக்கிக் காட்டினார்.

சென்ற 8-வது வாரக் கூட்டத்தில் குலுக்கப்பட்ட சீட்டின் பிரைஸ் விழுந்த கணபதி சுப்பைய முதலியார் கிருஷ்ணசாமி முதலியார் இருவருக்கும் பரிசுகளை அக்கிராசனாதிபதி கொடுத்தார். பின்னர் கீழ்க்காணும் தீர்மானங்கள் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டன. தலைவர் தமது முடிவுரையில் முன்னேற்ற வழிகளைக் குறித்தும், சமூக சேவையின் முக்கியத்தைக் குறித்தும் வலியுறுத்திக் கூறினார். வந்தனோபசாரத்துடன் கூட்டம் இனிது கலைந்தது.

### தீர்மானங்கள்.

**1.** தேச க்ஷேமத்தையும் நமது சமூக விருத்தியும் பொருளாதார நலத்தையும் முக்கியமாக ஒவ்வொருவரின் தேக நலங்களையும் உத்தேசித்து இதுகளெல்லாவற்றிற்கும் இடையூராக இருக்கப்பட்ட மதுபானத்தை ஒவ்வொருவரும் நீக்கவேண்டியது மிகவும் அவசியமாயிருப்பதால் அதை நடைமுறையில் காண்பிப்பதற்காக இன்றுமுதல் நமது சமூகத்தினரனைவரும் குடிப் பழக்கத்தை அறவே ஒழிக்க வேண்டியதற்காகச் சமூகக் கட்டுப்பாடு போன்ற முறைகளை அனுஷ்டிக்கவேண்டுமாய் இச்சங்கம் தீர்மானிக்கிறது.

(1) இதை அமுலுக்குக் கொண்டுவருவதினிமித் தம் சங்கத்தின் அங்கத்தினர்கள் ஒவ்வொருவரும் மதுபானம் முதலான லாகிரி வஸ்துகளை உபயோகிப்பதில்லையென்று மனதார ஒப்புக்கொண்டு கையொப்பம் செய்யவேண்டியது.

(2) ஷை தீர்மானத்திற்கு மீறி லாகிரி வஸ்துக்களை உபயோகிப்பவர்கள் அவ்வப்போது சங்கத்தாரால் ஏற்படுத்தும் நிபந்தனைகளுக்குக் கட்டுப்பட்டு நடக்கவேண்டியது.

(3) குடிப்பவர்களைப் பகிரங்கமாகவோ அல்லது ரகசியமாகவோ சங்கத்திற்குத் தெரியப்படுத்தச் சங்கத்தின் அங்கத்தினர்களெல்லோருக்கும் உரிமையுண்டு.

**2.** நமது செங்குந்த ரனைவரும் தங்கள் குடும்பத்திலுள்ள சிறுவர் சிறுமிகளை, இளம் வயதில் கூலி முதலிய வேலைகளுக்கு அனுப்பாமல் அவசியமாயும் கட்டாயமாயும் படிக்கப் பள்ளிக்கு அனுப்பவேண்டியது. அப்படிப் படிக்க வைப்பதற்குப் பண முதலிய வசதியில்லாதவர்கள் விண்ணப்பம் செய்துகொண்டால் சங்கத்திலிருந்து அத் தகையவர்களுக்கு உதவி செய்ய இச்சங்கம் தீர்மானிக்கிறது.

E. V. சிங்காரவேலு முதலியார்.

---

## திருநெல்வேலி ஜில்லா
### செங்குந்தர் அபிவிருத்தி சங்கம்
### சங்கர நயினார் கோயில்

சித்திரை௴ 24௳ இரவு 8-மணிக்குத் தருமர் கோவில் தெருவில் ஸ்ரீமான் T. சங்கரபாண்டிய முதலியார்கள் தலைமையில் கூட்டம் நடைபெற்றது. ஆர்மோனிய மாஸ்டர் S. சங்கரலிங்க முதலியார் கடவுள் வணக்கம் பாடினார். மாணவர் S. ஆறுமுக முதலியார் சிவாலய தரிசனம் என்பது பற்றிப் பேசியபின் ஸ்ரீமான் M. திருவுடையா முதலியார் அவர்கள் மது, மாமிசவிலக்கு, கட்டாயக் கல்வி என்பவைகள் குறித்துத் தெளிவாக பேசினார்கள். பின்னர் மாணவர் S. நாராயணன் பால்ய விவாகம் என்பது பற்றிப்பேசிய பின் தலைவர் முடிவுரையாக வந்தனோபசாரத்துடன் 1½-மணிக்குக் கூட்டம் இனிது கலைந்தது.

இவ்வூரில் ஆறுவது பாரத்திலிருந்து மேல் வகுப்பு சென்ற S. ஆறுமுகம், P. சுப்பையா இருவருக்கும் 5-வது பாரத்திலிருந்து மேற் சென்ற M. பிச்சாண்டிக்கும் தேர்ச்சி பெற்ற ஏனைய மாணவர்க்கும் ஆசிகூறத் தீர்மானிக்கப் பட்டது.

25-6-31 இரவு 8 மணிக்குப் பாலத்து தெருவில் ஸ்ரீமான் M. திருவுடையா முதலியார் அவர்கள் தலைமையில் கூடிய கூட்டத்தில் கடவுள் வணக்கத்துக்குப் பின் பண்டிட் S. பழனியாண்டி முதலியார் அவர்கள் வல்லான் காவியம் வீரநாராயண விஜயம் என்பன பற்றியும், மாணவர் S. சுப்பையா ஒற்றுமை என்பது பற்றியும் பேச தலைவர் முடிவுரைக்குப் பின் வந்தனோபசாரத்துடன் இரவு பத்து மணிக்குக் கூட்டம் இனிது கலைந்தது.

15-7-31-ல் இரவு 8 மணிக்குப் புது அம்மன் கோவில் தெருவில் கூடிய கூட்டத்தில் கடவுள் வணக்கத்திற்குப் பின் ஸ்ரீமான் M. திருவுடையா முதலியார் அவர்களை தலைமை வகிக்கத் தேர்ந்தெடுக்கப்பட்டனர். தலைவர் முன்னுரையில் நெய்தல் தொழிலின் தற்கால நிலைமையையும் அதை வளர்க்கும் முறைகளையும் குறித்து பேசியபின் பண்டிட் S. பழனியாண்டி முதலியார் அவர்கள் பக்தி, ஒழுக்கம், நெய்தல் தொழில் என்பவைகள் குறித்துப் பேசினார்கள். மாணவர் S. நாராயணன் S. சுப்பையா ஆகியோர் முறையே தந்தையின் கடமை, ஒற்றுமை என்பவைபற்றி படித்தபின் தலைவர் முடிவுரையாக ஒற்றுமையும், கட்டுப்பாடும் அவசியம் என வற்புறுத்தி வரும் தேர்தல்களில் நமது தொகுதிக்கு ஊக்கத்தோடு வேலை செய்யவேண்டும் என்று எச்சரிக்கை செய்ய வந்தனோபசாரத்துடன் கூட்டம் 12-மணிக்குக் கலைந்தது.

19-7-31 இரவு கூடிய கூட்டத்திற்கு ஸ்ரீ திருவுடையா முதலியார் அவர்கள் தலைமை வகித்து நமது தலைச்சங்கம் சமூக, தேசீய முன்னேற்றத்திற்கு ஆற்றி வரும் தொண்டு, பலன் 1-வது மகாநாடு, 2-வது மகாநாடு தலைவர் சொற்பொழிவு, தீர்மானங்கள் குறித்துத் துரிதமாகப் பேசினார்கள். பொக்கிஷதார் S. பிச்சாண்டி முதலியார் இளமை விவாகம் கூடாது எனப்பேசிய பின் 2-வது மகாநாட்டு மலரில் உள்ள தலைச் சங்க வரவு செலவு கணக்குகளைப் படித்தார்கள். பின்னர் மாணவர்கள் S. நாராயணன் S. சுப்பையா முறையே 2-வது சமூக மகாநாட்டுத் தலைவர் கொடைவள்ளல் T. N. சபாபதி முதலியார் அவர்கள் சொற் பெருக்கையும், வாலிப வரவேற்புத் தலைவர் திரு. சா. ரா. தங்கவேல் முதலியார் அவர்கள் சொற் பெருக்கையும் விளக்கமுறப் படித்தார்கள்.



### தீர்மானங்கள்

நமது இரண்டாவது மகாநாடு காஞ்சிபுரத்தில் சிறப்பாக நடந்தமைக்கு பெருமகிழ் வடைகிறோம்.

தலைச்சங்கப் பிரசாரகர்கள் சுற்றுப் பிரயாணம் செய்து வருவது குறித்து ஆனந்திப்பதோடு திருநெல்வேலி ஜில்லாவுக்கு வரும் ஸ்ரீமான் தி. அ. சண்முக முதலியார் அவர்களை எங்கள் நகருக்கு சிறப்பாக வரவேற்கவும், பிரசாரம், சந்தா வசூல் மித்திரன் வளர்ச்சி ஆகியவற்றிற்கு மிகுந்த ஆதரவு அளிக்கவும் தீர்மானிக்கப்பட்டது.

## பிழை திருத்தம்

பிரமோதூத௵ தை, மாசி 5-ம் தொகுதி, 1—2-ல் சங்கர நயினார் கோயில் முதலாம் ஆண்டு நிறைவு விழா என்ற தலைப்பில் ராமநாதபுரம் ஜில்லாவை, திருநெல்வேலி ஜில்லா என்றும், உபதலைவரைத் தலைவர் என்றும் திருத்திக் கொள்க.

ஆ. முத்துசாமி முதலியார். உபகாரியதரிசி.

## திருநெல்வேலி பழனியாண்டவன் திருப்புகழ்ச் சபை.

இற்றைக்கு ஓராண்டிற்கு முன் பல செங்குந்த சீலர்களால் நிறுவப்பெற்ற இச்சபையின் சார்பில் சென்ற 1106-ம் ஆண்டு ஆனித்திங்கள் 15-ம் நாள் (29-6-31) திங்கட்கிழமையன்று அருணகிரிநாத சுவாமிகளது குருபூஜை விழா செவ்வனே நிறைவேற்றப்பெற்றது. அன்று செங்குந்தர் ஒரு பெரிய பஜனை மடாலயத்தில் உயர்திரு. ச. கணபதி முதலியாரவர்கள் B. A., தலைமையின் கீழ்க் கூட்டம் நடைபெற்றது. அவ்வமயம் "அருணகிரியார் திருவுள்ளம்" என்னும் செம்பொருள்பற்றித் தலைவரவர்களும், "அருணகிரிநாத சுவாமிகள் சரித்திரம்" என்னும் ஒண் பொருட்பற்றி 12-வயதுள்ள திரு. செ. ந. ராமசுவாமி என்பாரும், "அருணகிரியாரும் அவ ரருள்மொழியும்" என்னும் நுண் பொருள் பற்றித் திருப்புகழ்ச் சபைத் தலைவர் உயர்திரு. மு. சு. ஆறுமுக முதலியாரவர்களும் சொற்பெருக்காற்றினார்கள்.

மு. சு. ஆறுமுக முதலியார், சபைத் தலைவர்.

## வீரவநல்லூர் செங்குந்தர் சங்கம் 14-ம் ஆண்டு விழா

ஷை விழாவும் செங்குந்தர் இளைஞர் சங்க முதலாவதாண்டு விழாவும் சங்கக் கட்டடத்தில் அம்பை திரு. கணபதி முதலியார் பி. ஏ. அவர்கள் தலைமையின் கீழ் நடைபெற்றன. பல பிரமுகர்களும் பெண்களும் வந்திருந்தனர். மாலை 6-30-க்குக் கூட்டம் ஆரம்பமாயிற்று. வரவேற்புப் பத்திரம் சங்க ஆண்டு அறிக்கை முதலியவை சங்கக் காரியதரிசியால் வாசிக்கப்பெற்ற பின்னர் தலைவர் முன்னுரை நிகழ்த்தியதும் கீழ்க் கண்டவர்கள் கீழ்க் கண்ட விஷயங்களைப் பற்றித் திறமையுடன் பேசினார்கள்: திரு. முத்தையா-பெண் கல்வி, திரு. கணபதி முதலியார் பி. ஏ.-பண்டை மாதரின் கற்பு, திரு. சிவசுப்ரமணியன் செட்டியார்-உதய இந்தியா, திரு. ச. வீரபாகு அர்த்தமற்ற செய்கை, திரு. சு. சங்கர சுப்பிரமணிய முதலியார் பி. ஏ. பி. எல்.-இளைஞர் எழுச்சி.

பிறகு-திரு. நயினார் செட்டியார் அவர்கள் தலைவரின் விசேஷ அனுமதியின் மீது அர்த்தமற்ற செய்கை இளைஞர் எழுச்சி முதலிய பிரசங்கங்களையெதிர்த்துப் பழைய முறைகளையே பின்பற்ற வேண்டுமென்றும் விதவா விவாகம் முதலிய சீர்திருத்த நோக்கங் கூடாதென்றும் அழுத்தமாய் கண்டித்துப் பேசினார்கள். பின்னர் பிரசங்கிகள் தக்க பதிற்கூறிய சமயங்களில் கூட்டத்திலிருந்த உற்சாகமும் ஆத்திரமும் குறிப்பிட தக்கன. தலைவர் முடிவுரை கூறினதும் கீழ்க்கண்ட தீர்மானங்கள் நிறைவேறின. வந்தனங் கூறியதும் மகிழ்ச்சியுடன் கூட்டம் இனிது கலைந்தது.

### தீர்மானங்கள்.

1. நமது தேசத்தின் சுதந்தரப் போராட்டத்தில் தகுந்த தருணத்தில் காந்தி இர்வின் ஒப்பந்தம் ஏற்பட்டதை இச்சங்கம் மிகவும் பாராட்டுவதுடன் ஒப்பந்தத்தின் அம்சங்கள் கடைசி வரையும் இரு கக்ஷியாராலும் நிறைவேற்றப் படவேண்டு மென்று இறைவனைப் பிரார்த்திக்கிறது.

2. சமீபத்தில் லண்டனில் நடக்க விருக்கும் வட்டமேஜை மகாநாடு வெற்றியுடன் முடிவடையுமாறு இக்கூட்டம் பிரார்த்திக்கிறது.

3. நமது நாட்டின் பொருளாதார நன்மையை உத்தேசித்து நம்மரபினர் யாவரும் அன்னிய தேசப் பொருள்களை வாங்காமல் நிறுத்திக்கொண்டு சுதேசப் பொருள்களையே வாங்கவேண்டும் என்று இக்கூட்டம் தீர்மானிக்கிறது.

4. நமது மரபினர்களுள் பல உள் பிரிவுகளிருப்பதை ஒன்று படுத்தும் பொருட்டு நம்மவர்களுள் ஒற்றுமை மணங்களை நடத்துவதற்கு வேண்டிய ஏற்பாடுகள் சீக்கிரம் செய்ய வேண்டுமென்று இக்கூட்டம் தீர்மானிக்கிறது.

5. செங்குந்தர்கள் வதியும் கிராமங்கள் தோறும் சங்கங்கள் ஏற்படுத்தி, ஒவ்வொரு ஜில்லாவிலும் ஒரு ஜில்லா சங்கம் ஏற்படுத்தி அதற்குக் கிராமச்சங்கங்களைக் கிளைகளாகச் சேர்த்து, நமது ஜில்லாவில் நம்மவர்களுக்குள் பரஸ்பர ஒற்றுமையை ஏற்படுத்த வேண்டுமென்று இக்கூட்டம் தீர்மானிக்கிறது.

6. ஆண் மக்களைப் போலவே நமது பெண் மக்களுக்கும் கட்டாயக் கல்வி கற்பிக்க நமது சங்கத்திலிருந்து கூடிய சீக்கிரத்தில் ஏற்பாடு செய்ய வேண்டு மென்று இக்கூட்டம் அபிப்பிராயப் படுகிறது.

7. நமது தேச விடுதலைப் போரில் இப்பொழுது நம் நாட்டுப் பெண்கள் எடுத்துக்கொண்ட பெரு முயற்சியை உத்தேசித்து நமது மரபுப் பெண் மக்களுக்கும் தனியாக ஒவ்வொரு ஊரிலும் சங்கங்

கள் நியமிக்கவேண்டிய வசதிகள் செய்து கொடுக்க வேண்டுமென்று இக்கூட்டம் அபிப்பிராயப் படுகின்றது.

8. நமது நாட்டில் பால்ய விதவைகள் படுங் கஷ்டங்களை நிவர்த்தி செய்தற் பொருட்டு பிரியமிருக்கும் பால்ய விதவைகளுக்கு மறுவிவாகம் செய்து கொள்வதற்கு வேண்டிய சௌகரியங்கள் செய்து கொடுக்க வேண்டுமென்று இக்கூட்டம் அபிப்பிராயப்படுகிறது.

9. நமது கைத்தொழிலாகிய நெசவுத் தொழில் நாளுக்கு நாள் க்ஷீணித்துக் கொண்டு வருகிறபடியால் நமது தொழிலில் புதுமுறைகளைக் கையாளுவதோடு, தையல், தங்கவேலை, முதலிய இதர கைத்தொழில்களையும் நம்மவர்களுக்குக் கற்பிக்கவேண்டுமென்று இக்கூட்டம் அபிப்பிராயப்படுகிறது.

காரியதரிசி சி. ப. ஆறுமுக முதலியார்.

---

## இராமநாதபுரம் ஜில்லா

### செங்குந்தர் அபிவிருத்தி சங்கம்

மண்டலமாணிக்கம் 31-5-31உ இரவு 9 மணிக்கு இவ்வூர்ச் செங்குந்தர் அபிவிருத்தி சங்கத்தின் அவசரக் கூட்டம் இவ்வூர் போர்டு பெண்பாடசாலை உபாத்தியாயர் உயர் திருவாளர் யோசேப் அவர்கள் தலைமையின் கீழ்க் கூடிற்று. தலைவர் இக் கிளைச்சங்கத்திலிருந்து காஞ்சிச் செங்குந்தர் 2-வது மகாநாட்டிற்குப் பிரதிநிதியாகச் சென்ற திருவாளர் இ. முனியப்ப முதலியாரவர்கள் மகாநாட்டு வைபவங்களை ஆதியோடந்தமாக யாவருக்கும் சமூக முன்னேற்றத்தில் உணர்ச்சி உண்டாகும்படி சொற்பொழிவு நிகழ்த்தினார்கள். பின் மகாநாட்டிலிருந்து கொண்டுவந்த வரவேற்புப் பத்திரங்கள். தலைவர்கள் உபந்யாசப் புத்தகங்கள் யாவருக்கும் வழங்கப்பட்டன. அதன்பின் இச்சங்கத்திலுள்ள செங்குந்தர் இலவச வாசகசாலைக்கு இவ்வூர் நெசவுக்காரர் கோவபாரேட்டிவ் சொசைடியிலிருந்து மீதித்தொகை ரூ. 163-4-5-ஐயும் ஷை உத்தியோகஸ்தர்களான மேன்மைதங்கிய அஸிஸ்டென் ரிஜிஸ்டிராரவர்களும் இன்ஸ்பெக்டரவர்களும் சங்கத்தார் வேண்டுக்கோள்படி இச்சங்கலைப்ரரிக்கு சாங்கிஷன் செய்து போனதற்கு அன்னவர்களுக்கு வந்தனங் கூறியதும், தலைவரவர்கள் எழுந்து ஒரு சமூகமோ ஒரு நாடோ, ஒரு தேசமோ முன்னேற்றமடைய கல்வி யபிவிருத்தியே காரணமென்றும், அதற்கு முக்கியமாக வாலிபர் ஊக்கமே பெரிதும் வேண்டற்பாலதென்றும் இச்சமூக முன்னேற்றத்திற்கும் இங்குள்ள சங்கத்தின் முன்னேற்றத்திற்கும் திருவாளர் இ. முனியப்ப முதலியாரைப்போன்ற இளம் வீரர்களே காரணம் என்றும் ஆகையால், அன்னவர்களும் ஒத்துழைக்க ஏனைய இளம் வீரர்கள் உதவியால் கூடிய சீக்கிரம் இச்சங்கம் முன்னணியில் வருமென்றும் உபந்யவித்தார்கள். வந்தன உபசாரம் கூறப்பட்டபின் இரவு 12 மணிக்கு இனிது கலைவுற்றது.

க. ப. க. ராமசாமி முதலியார், காரியதரிசி.

## ஸ்ரீவில்லிபுத்தூர் ராமகிருஷ்ணபுரம்

### செங்குந்த வாலிபர் சங்கம்.

12-7-31 இரவு 8 மணிக்கு ஷை சங்கத்தின் ஆதரவில் ஷை சங்கத் தலைவர் திரு. சு. மாயாண்டி முதலியார் அவர்கள் தலைமையில் ஒரு பொதுக் கூட்டம் கூடியது. அவ்வமயம் தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கத்தின் பிரசாரகர் திரு. இ. அ. சண்முக முதலியார் அவர்கள் முறையே கல்வி நாகரிகம், கைத்தொழில், பத்திரிகை வாசிப்பதின் நோக்கம் முதலியவைகளைப் பற்றிச் சுமார் 2 மணி நேரம் மிகவிரிவாகப் பேசினார்.

காரியதரிசி வந்தனோபசாரம் கூறித் தலைவர் அவர்களுக்குப் பிரசாரகர்களுக்கும் புஷ்பஹாரம் சூட்டினார். இரவு 10 மணிக்குக் கூட்டம் இனிது கலைந்தது.

14-8-31-இல் திரு. ரா. சுப்பிரமண்ய முதலியாரவர்கள் தலைமையிற் கூடிய கூட்டத்தில் திரு. நி. கு. சிவசுப்ரமண்ய முதலியார் சங்கத் தலைவராகவும், திரு. ச. சோமசுந்தர முதலியார் காரியதரிசியாகவும் புதிதாக நியமிக்கப் பட்டபின் திரு ரா. சுப்ரமண்ய முதலியாரும், திரு. ச. சோமசுந்தர முதலியாரும் முறையே 'பொதுவிஷயம்' சங்கத்தினவசியம்' என்பவை பற்றிப் பேச, வந்தனோபசாரத்துடன் 11 மணிக்குக் கூட்டம் இனிது கலைந்தது.

S. சோமசுந்தரம், காரியதரிசி.

## தேவகோட்டை செங்குந்த மகாஜன சங்கத்

### திறப்பு விழா

4-7-31 அன்றிரவு 8 மணிக்குத் தேவகோட்டை அழகாபுரி மாரியம்மன் கோயிலில் திரு. S. P. V.P. வாலசுப்பிரமண்ய முதலியார் அவர்கள் தலைமையிற் கூடிய கூட்டத்தில் தலைச்சங்கப்பிரதிநிதி திரு. தி. அ. சண்முக முதலியாரவர்கள் 'செங்குந்தர் கடமை' என்பது பற்றி நிகழ்த்திய பேருபந்யாசத்தின் பயனாய் மகாஜனங்களின் விருப்பத்திற் கிணங்க ஷை சங்கம் ஷை பிரசாரகராலேயே திறந்து வைக்கப்பட்டதுடன் அச்சங்கம் வருடத்துக்கு 5 ரூ. தலைச் சங்கத்துக்குக் கட்டணம் செலுத்த வேண்டுமெனவும் தீர்மானிக்கப்பட்டது. கூட்டம் 12 மணிக்கு இனிது கலைந்தது.

31-8-11-இல் திரு S. P. V. P. வாலசுப்ரமண்ய முதலியார் தலைமையிற் கூடிய கூட்டத்தில் சங்கச் சட்டதிட்டங்கள் வாசிக்கப்பட்டபின் உத்தியோகஸ்தர்கள் தேர்ந்தெடுக்கப் பெற்றனர். ஒவ்வொரு அங்கத்தினரும் மாதம் 2 அணா சங்கத்துக்குச் சந்தாவாகச் செலுத்த வேண்டுமெனத் தீர்மானிக்கப்பட்டபின் வந்தனோபசாரத்துடன் கூட்டம் இனிது கலைந்தது.

S. P. V. P. வாலசுப்பிரமணிய முதலியார்



## செங்குந்தர் கல்விநிதி, சென்னை.

### 1931—32 வருஷத்துக்குக் கீழ்க்காணும் மாணாக்கர்களுக்கு உபகாரச் சம்பளமாக அவரவர் பெயருக்கு எதிரில் குறிப்பிட்டுள்ள தொகை அனுமதிக்கப் பெற்றுள்ளது.

| எண் | மாணவன் பெயர் | படிக்கும் வகுப்பு | படிக்கும் பள்ளிக்கூடம் | சொந்தவூர் | அனுமதித்துள்ள உதவி |
|---|---|---|---|---|---|
| 1 | M. அருணாசலம் | 2-வது பாரம் | ஹைஸ்கூல், ஒத்தபாலம் | பாலப்புரம், மலையாளம் ஜில்லா | 12 0 0 |
| 2 | P. கன்னியப்பன் | 5-வது பாரம் | செந்தோம் ஹைஸ்கூல், மயிலாப்பூர் | மயிலாப்பூர், சென்னை | 24 0 0 |
| 3 | P. சம்பந்தன் | 4-வது பாரம் | P. S. ஹைஸ்கூல், ,, | மயிலாப்பூர், சென்னை | 12 0 0 |
| 4 | C. பாலசுப்பிரமணியன் | 5-வது பாரம் | ,, ,, | ,, | 12 0 0 |
| 5 | K. ஜெயராம் | 2-வது பாரம் | தொண்டமண்டலம்ஹைஸ்கூல், சென்னை | நெம்மேலி, வடஆற்காடு ஜில்லா | 12 0 0 |
| 6 | T. இராமசாமி | 6-வது பாரம் | முத்தியாலுப்பேட்டை ஹைஸ்கூல், ,, | ஐயங்கார்குளம் செங்கற்பட்டு ஜி. | 24 0 0 |
| 7 | N. மாரியப்பன் | 2 வது பாரம் | முனிசிபல் ஹைஸ்கூல், கோயம்புத்தூர். | வடவழி, கோயம்புத்தூர் ஜில்லா | 12 0 0 |
| 8 | A. நாராயணசாமி | ஜூனியர் இண்டர். | சேலம் காலேஜ் | சேலம், சேலம் ஜில்லா | 24 0 0 |
| 9 | S. சொக்கலிங்கம் | 6-வது பாரம் | சேலம் காலேஜ் | அம்மாபேட்டை, சேலம். | 12 0 0 |
| 10 | C. ராமசாமி | 6-வது பாரம் | சேலம் காலேஜ் | சேலம், சேலம் ஜில்லா | 12 0 0 |
| 11 | M. கருப்பன் | 4-வது பாரம் | போர்டு ஹைஸ்கூல், அரியலூர் | பொன்பரப்பி, திருச்சி ஜில்லா | 24 0 0 |
| 12 | A. சுப்பிரமணியன் | 3-வது பாரம் | போர்டு ஸ்கூல், பொன்பரப்பி | ,, ,, | 5 0 0 |
| 13 | M. ரத்தினம் | 5-வது வகுப்பு | அமெரிகன் மிஷன் மிடில் ஸ்கூல், தல்லாகுளம். | தல்லாகுளம், மதுரை ஜில்லா | 6 0 0 |
| 14 | V. சுப்பிரமணியம் | 1-வது பாரம் | ,, | தல்லாகுளம், மதுரை ஜில்லா | 12 0 0 |
| 15 | P. பொன்னுசாமி | சீனியர் B.A. கிளாஸ் | இந்து காலேஜ், திருநெல்வேலி | திருநெல்வேலி | 50 0 0 |
| 16 | P. M. நரசிம்மன் | 3-வது பாரம் | போர்டு ஹைஸ்கூல், சேயாறு | திருவத்திபுரம், வடஆற்காடு | 12 0 0 |
| 17 | K. கணபதி | 4-வது பாரம் | போர்டு ஹைஸ்கூல், சேயாறு | அசனம்மா பேட்டை, N. A. Dt. | 24 0 0 |
| 18 | A. கோவிந்தராஜு | 1 வது பாரம் | போர்டு ஹைஸ்கூல், சேயாறு | கொடுங்காலூர், வடஆற்காடு ஜி. | 12 0 0 |
| 19 | T. பஞ்சாக்ஷரம் | ,, | போர்டு ஹைஸ்கூல், சேயாறு | சொக்கப்பெருவளூர், S. A. Dt | 12 0 0 |
| 20 | M. ரத்தினசபாபதி | ,, | டவுன் ஹைஸ்கூல், சிதம்பரம் | முத்தியாலுபேட்டை, புதுவை | 12 0 0 |
| 21 | S. வேலாயுதம் | பி. ஏ. ஆனர்ஸ் | பச்சையப்பன் காலேஜ், சென்னை | ஒட்டம்பட்டு, தென்னாற்காடு ஜி. | 50 0 0 |
| 22 | A. முத்துசாமி | 3-வது பாரம் | போர்டு ஹைஸ்கூல், உத்திரன்மேரூர் | மானாம்பதி, செங்கற்பட்டு ஜி. | 12 0 0 |
| 23 | மா. சம்பந்தன் | 2-வது பாரம் | போர்டு ஹைஸ்கூல், உத்திரன்மேரூர் | செங்கற்பட்டு ஜில்லா | 12 0 0 |
| 24 | R. நடேசன் | ,, | இந்து ஹைஸ்கூல், திருவல்லிக்கேணி | உத்திரன்மேரூர், செங்கற்பட்டு ஜி. | 12 0 0 |
| 25 | தீ. தீர்த்தகிரி | 4-வது பாரம் | மிஷன் ஸ்கூல், காஞ்சிபுரம் | பிள்ளையார் பாளையம், காஞ்சிபுரம் | 12 0 0 |
| 26 | ஞா. பொன்முகிரி | சபார்டினேட் ஓவர்சீயர் | இஞ்சினீரிங் காலேஜ், கிண்டி | ,, ,, | 20 0 0 |
| 27 | R. சுப்பிரமணியம் | 6-வது பாரம் | மிஷன் ஸ்கூல், காஞ்சிபுரம் | சேர்க்காடு, செ. ஜில்லா | 24 0 0 |
| 28 | T. சிங்காரவேலு | 3-வது பாரம் | போர்டு ஹைஸ்கூல், உத்திரன்மேரூர் | மானாம்பதி, செங்கற்பட்டு ஜில்லா | 12 0 0 |
| 29 | K. அண்ணாமலை | சீனியர் இண்டர். | பிரசிடென்ஸி காலேஜ், சென்னை | ஆவரணி புதுச்சேரி, தஞ்சாவூர் ஜி. | 40 0 0 |
| 30 | சிதம்பரம் யூனிவர்சிடியில் வித்துவான் வகுப்பில் படிக்கும் திறமையும் ஏழ்மையுமுள்ள ஒரு செங்குந்த மாணாக்கருக்கு ஷை யூர் கலாசாலைத் தலைவரின் சிபார்சின்மேல் புத்தகச் செலவுக்காகக் கொடுக்கத் தீர்மானிக்கப்பட்டது. | | | | 15 0 0 |

செங்குந்தர் கல்விநிதி
சென்னை, 12-9-31

மா. பா. கந்தசாமி முதலியார், பி. ஏ., பி. இ.
அமைச்சர்.

### கலியாண நன்கொடை வரவு

25-6-31-இல் மஞ்சட்கொல்லை திரு. ராம. ச. ராமசாமி முதலியார் புதல்வர் திரு. சம்பந்தமூர்த்திக்கும், திருமலைராஜன் பட்டணம் திரு. வீ. குரு. வீ. குருசாமி முதலியார் புதல்வி சௌ. விசாலாக்ஷிக்கும் நடந்த திருமணத்தில் வழங்கப்பட்ட நன்கொடை ரூ. 6-0-0.

### மாயவரம் தாலுக்கா கீழையூர் அ. சோக்கலிங்க முதலியார் வசூலித்தனுப்பிய திருமண வளையற்காப்பு நன்கொடைகள்

பிரமோதூதஃ பங்குனிமீ 16உ நாங்கூரிலிருக்கும் கீழையூர் அ. வைத்தியலிங்க முதலியார் குமாரத்தி ஸ்ரீமதி இராஜாம்மாளின் வளையற்காப்பு முகூர்த்தத்தில் தலைச்சங்கத்திற்கு நன்கொடையளித்தது ரூ. 0-8-0.

ஷை தேதியில் திருச்செம்பொன்பள்ளி திரு. ஆ. வைத்தியலிங்க முதலியார் குமாரத்தி ஸ்ரீமதி மாரிமுத்து அம்மாளின் வளையற்காப்பில் நமது தலைச்சங்கத்திற்கு நன்கொடை யளித்தது ரூ. 0-8-0.

பிரஜோற்பத்திஃ ஆவணிமீ 3உ செம்பனார் கோயில் மேலக்கட்டளை மேலத்தெருவு திரு. சிதம்பர முதலியார் குமாரர் செல்லக்கண்ணு முதலியாருக்கும் திருச்செம்பொன்பள்ளி கதிரேச முதலியார் குமாரத்தி ஸ்ரீமதி அலர்மேலு அம்மாளுக்கும் நடைபெற்ற திருமணத்தில் நன்கொடையாக இரு சார்பிலும் சேர்ந்தளிக்கப் பெற்றது ரூ. 1-0-0.

ஷை தேதியில் மேலக்கட்டளை மேலத்தெருவில், திரு. வைத்தியலிங்க முதலியார் குமாரர் குஞ்சு முதலியாருக்கும் ஷையூர் திரு. அய்யாறு முதலியார் குமாரத்தி ஸ்ரீமதி அலர்மேலு அம்மாளுக்கும் நடந்தேறிய திருமணத்தில் மணமகன், மணமகள் சார்பிலும் சேர்ந்தளிக்கப்பெற்ற நன்கொடை ரூ. 1-0-0

ஷைமீ 7உ மேலப்பெரும்பள்ளம் திரு. கொழுந்தைவேலு முதலியார் குமாரர் அய்யாசாமி முதலியாருக்கும் மேலக்கட்டளை திரு. வே. சுப்பிரமணிய முதலியார் குமாரத்தி ஸ்ரீமதி அங்காளம்மை அம்மாளுக்கும் நடைபெற்ற திருமணத்தில் மணமகன் சார்பில் ரூபாய் ஒன்றும், மணமகள் சார்பில் அணா எட்டுமாக வழங்கிய நன்கொடை ரூ. 1-8-0.

ஷைமீ 7உ மேலப்பாதி திரு. வீ. சொக்கலிங்க முதலியார் குமாரத்தி ஸ்ரீமதி மாரிமுத்தம்மாளின் வளையற்காப்பு முகூர்த்தத்தில் தலைச் சங்கத்திற்கு நன்கொடையாயளிக்கப் பெற்றது. ரூ. 1-0-0.

ஷைமீ 7உயில் கருவாழக்கரை(?) திருமஞ்சனதபுரம் திரு. அ. அமுர்தலிங்க முதலியார் குமாரத்தி சிந்தாமணி அம்மாளின் வளையற்காப்பு முகூர்த்தத்தில் நன்கொடை யளித்தது அணா 0-8-0.

ஷைஃ ஆவணிமீ 10உ திருச்செம்பொன்பள்ளி திரு. தெட்சணாமூர்த்தி முதலியார் குமாரர் வீரப்ப முதலியாருக்கும் மேலப்பாதி ஆ. சி. ரெங்க முதலியார் குமாரத்தி ஸ்ரீமதி முத்தாச்சி அம்மாளுக்கும் நடைபெற்ற திருமணத்தில் இருவர் சார்பாகவும் நன்கொடையாக வழங்கியுள்ளது ரூ. 1-0 0.

ஆவணிமீ 14உ சீர்காழி பிடாரி வடக்குவீதி ச. கோவிந்த முதலியார் குமாரன் வீரப்ப முதலியாருக்கும் கும்பகோணம் தாலுக்கா ரெகுநாதபுரம் ஆ. நாகலிங்க முதலியார் குமாரத்தி மாரியம்மாளுக்கும் நடைபெற்ற திருமணத்தில் நன்கொடை அணா 0-8-0.

### கர்ணபூஷண நன்கொடைகள்

பிரஜோற்பத்திஃ ஆவணிமீ 7உ ஞாயிற்றுக்கிழமை சீர்காழி பிடாரி வடக்குவீதி நா. அ. பூ. இராசு முதலியார் திருவளர் செல்வி மக்களநாயகி அம்மாளுக்கு நடைபெற்ற கர்ணபூஷண முகூர்த்தத்தில் நம்குலத் தலைச்சங்கத்திற்கு நன்கொடையளித்தது ரூ. 1-0-0.

ஷைஃ ஆவணிமீ 19உ சுக்கிரவார சுபதினத்தில் சீர்காழி பிடாரி வடக்கு வீதியிலிருக்கும் கீழையூர் அ. ஆறுமுக முதலியாரின் திருவளர் செல்வன் திருஞான சம்பந்தத்திற்குக் கர்ணபூஷணம் நடைபெற்றதில் நமது குலச்சங்கத்திற்கு நன்கொடை யளித்தது ரூ. 1-0-0.

ஷை வருஷம் ஆவணிமீ 14உ ஆதிவாரம் சீர்காழி பிடாரி வடக்கு வீதி க. சம்பந்த முதலியார் குமாரன் திருவளர் செல்வன் லெக்ஷ்மணனுக்கும் ஷையார் குமாரத்தி திருவளர் செல்வி பட்டம்மாளுக்கும் நடைபெற்ற கர்ணபூஷணங்களில் நமது தலைச்சங்கத்திற்கு நன்கொடை யளித்தது ரூ. 1.

பிரஜோற்பத்தி ஃ ஆனிமீ 17-உ மேலப் பெரும்பள்ளம் ஜவுளிதிரு. ம. பொன்னுசாமி முதலியார் வர்களின் குமாரர் வெங்கிடாசல முதலியாருக்கும், ஆக்கூர், சு. சுப்ப முதலியார் சகோதரர், சு. பாலசுந்தர முதலியார் சேஷ்ட குமாரி, ஸ்ரீமதி அ. ராமாமிர்தத்தம்மாளுக்கும், நடைபெற்ற திருமணத்தில் நமது. தலைக்சங்கத்திற்குச் நன்கொடையாக வழங்கியுள்ளது ரூ. 2-0-0.

ஷை ஃ ஷை மீ 25உ. மேல் நாங்கூர் திரு. பெ. ஆறுமுக முதலியார் குமாரர் பேரம்பல முதலியார்ருக்கும். ஷை யூர், கந்தசாமி முதலியார் குமாரத்தி, ஸ்ரீமதி சேஷம்மாளுக்கும் நடந்தேறிய திருமணத்தில் நன்கொடையளித்து ரூ. 1-0-0.

ஷை ஃ வைகாசிமீ 28உ. மேலப்பாதி. அ. முத்துக்குமர முதலியார், குமாரர், நடேச முதலியாருக்கும் மேழக்கட்டளை சி. கோவிந்சாமி முதலியார், குமாரத்தி பருவதவர்த்தினி அம்மாளுக்கும் நடைப்பெற்ற திருமணத்தில் நமது தலைச்சங்கத்திக்கு நன்கொடையளித்தது ரூ. 1-0-0.

ஷை ஃ ஷை மீ ஷை தேதி. சா. வேலாயுத நாங்கூர் சா. வேலாயுத முதலியாருக்கும் சித்தவரம் பெரியா முதலியார் குமாரத்தி ஸ்ரீமதி அஞ்சலை அம்மாளுக்கும் நடந்தேறிய திருமணத்தில் நமது தலைச் சங்கத்திற்கு நன்கொடை ரூ. 0-8-0.

ஷை ஃ ஆனிமீ 28உ. மேலக்கட்டளை திரு. ச. கோவிந்த முதலியார் குமாரர் முருகைய முதலியாருக்கும் சிதம்பரம் பொ. இரத்தின சபாபதி முதலியார் குமாரத்தி மாரிமுத்தம்மாளுக்கும் நடைபெற்ற திருமணத்தில் தலைச்சங்கத்திற்கு நன்கொடை யளித்த்து அணா 0-8-0




ஐயா, ராசிப்பாளையம் கிராமம்

மின்சார ரசம் வாங்கி 4½-வருஷமாக இருந்த விப்பருதி 10-நாட்களுக்குள் புண் ஆரிப் போனபடியால் தயவு செய்து இன்னும் ஒரு புட்டி அனுப்புங்கள்.

த. அ. அங்கப்ப தேவர், சூலூர் போஸ்டு.

12-9-29 செம்மனுப்பட்டி,

ஐயா, ** மின்சார ரசத்தை எருமை வெண்ணெயில் கலந்து சாப்பிட்டதில் வெள்ளை, வெட்டை சவுகரியமாய் விட்டது. தயவு செய்து 3-புட்டி அனுப்புங்கள்.

தொந்தி செட்டியார், வாடிபட்டி போஸ்டு.

## மின்சார ரசம்

சகல ரோகங்களுக்கும் தேவாமிர்தம் போன்றதென ஜகப்பிரசித்திப் பெற்றது.

ஒவ்வொரு குடும்பத்திற்கும் இன்றியமையாத பொக்கிஷம்.

புட்டி 1-க்கு ரூ. 2. தபால் சார்ஜ் வேறு

விலாசம்:— கேட்லாக் இனும்.

மின்சார ரசம் கம்பெனி (லிட்) சேலம்

ஐயா, ஆணி 21-5-29

** 6-வேளை மின்சார ரசம் மருந்தில் கால் விழுந்து கிடந்த நோய் தீர்ந்தது இன்னும் 2-பாட்டல் அனுப்புங்கள்

M. A. ஆளவந்தார் பாகவதர், பிஞ்சல் தெரு.

ஐயா Champion Reafs. 27-1-30

என் மனைவிக்கு 7 வருஷ காலமாக என்னால் இயன்ற வரை ஏராளமான பணத்தைச் செலவு செய்து தீராமலிருந்த வியாதி தங்கள் மின்சார ரசத்தினால் சௌக்கியமாய் விட்டது இன்னும் ஒரு பாட்டல் அனுப்புங்கள்.

R. V. Kattaari G. Block, 53rd Line



## நமது தலைவர்களது அழகிய போட்டோ படங்கள்

| தபாற் செலவு உள்பட விலை | | ரூ. | அ. |
|---|---|---|---|
| ஒட்டக்கூத்தர் | ... | 1 | 4 |
| தலைச்சங்க நிர்வாக சபை அங்கத்தினர் (22 பேர் கொண்ட படம்) | ... | 2 | 8 |
| ம. சண்முகசுந்தர முதலியார், எம். ஏ., எல். டி., (செங்குந்த மித்திரன் ஆசிரியர்) | ... | 1 | 8 |
| தலைச்சங்கப் பிரசாரகர்கள் | ... | 1 | 8 |

மானேஜர்,

செங்குந்த மித்திரன் ஆபீஸ்,

பவழக்காரத் தெருவு, சென்னை.

Registered No. M. 1514

## நன்கொடைகள்

### அ. சோக்கலிங்க முதலியார் மூலியம் வளையற்காப்பு நன்கொடை

பிரஜோத்பத்தி வருஷம் ஆனிமீ 11-டையிலும் ஆடிமீ 5-டையிலும் நாங்கூர் சி. அனந்த முதலியார் குமாரத்திகள் ஸ்ரீமதி வள்ளிம்மைக்கும், ஸ்ரீமதி இராஜாம்பாளுக்கும் நடைபெற்ற வளையற்காப்பு முகூர்த்தங்களில் நமது தலைசங்கத்திற்கு நன்கொடை வழங்கியது ரூ. 1-0-0

### தமிழ்ப்புலவர் திரு. குமாரகுரு முதலியார் வசூலித்த திருமண நன்கொடைகள்

சிதம்பரம் தாலுக்கா நாட்டார்மங்கலம் செங்குந்தர் வாலிப சங்கக் காரியதரிசி க. அ. பிச்சாண்டி முதலியார் பிரசாரகர். திரு. ச. நா. குமாரகுரு முதலியார் அவ்வூர்க்கு விஜயம் செய்த போது அளித்த வரவேற்பு நன்கொடை ரூ. 0-8-0

சிதம்பரம் தாலுக்கா லால்பேட்டை திரு. கு. முத்துக்குழந்தை முதலியார் குமாரன் வேலு முதலியாருக்கும், ஷை யூர் கொ. வைத்தியலிங்கமுதலியார் குமாரத்தி, சௌ. குப்பாயம்மைக்கும் நடந்த பாணிக்கிரகண முகூர்த்த காலத்து அளித்த நன்கொடை ரூ. 0-8-0.

சிதம்பரம் தாலுக்கா லால்பேட்டை, திரு. சி. வயித்தியலிங்க முதலியார் குமாரன், திரு. இரத்தின முதலியாருக்கும் ஷை யூர் புதுப்பேட்டை பிள்ளையார் கோவில் வீதி, திரு நாராயண முதலியார் குமாரத்தி சௌ. சிவகாமசுந்தரம்மைக்கும் நடந்த கலியாணச் சடங்கில் அளித்த நன்கொடை ரூ. 0-8 0.

ஷை யூர், திரு. மொ. வேதகிரி முதலியார் குமாரன் திரு அப்பாவு முதலியாருக்கும் குருங்குடி மீனாட்சியம்மைக்கும் நடந்த திருமணத்தின் போது அளித்த நன்கொடை ரூ. 0-8-0.

சிதம்பரம் தாலுக்கா லால்பேட்டையில் கொரநாட்டிலிருந்து, வந்திருக்கும் திரு. ஆ. கோவிந்தசாமி முதலியார் அவர்கள் தமது இல்லத்திற்கு வாழ்க்கைத் துணைவியை விரு... ணிய காலத்து அளித்த நன்கொடை ரூ...

சிதம்பரம் திரு. வி. வேலாயுத முதலி... ரன் திரு. பொன்னுசாமி முதலியார் கு... குரிய துணைவியை நயந்த நன்னாளில் அளி... கொடை

சிதம்பரம் தாலுக்கா லால்பேட்டை தி... சிதம்பர முதலியார் குமாரன் திரு. முருகே... யாருக்கும், ஷை யூர் திரு கு. இராமசாமி மு... குமாரத்தி சௌ சிவகாமியம்மைக்கும் நட... மணத்தின்போது நன்கொடையாக அளி...

சிதம்பரம் தாலுக்கா, லால்பேட்டை ... துக்குழந்தை முதலியார் குமாரன் திரு... லிங்க முதலியாருக்கும், ஷை யூர் சின்னதம்... யார் குமாரத்தி சௌ. மீனாட்சியம்மைக்... தேறிய திருமணத்தின் போது அளி... கொடை ரூ. 0 4-0.

---

30 8 31-ல் சிதம்பரம் சம்பந்தங்கரை ... அ. ப. முத்தையா முதலியார் குமாரன் ... யாண்டிக்கு வித்தியாரம்ப முகூர்த்தகால... தலைச்சங்கத்திற்கு அளித்த நன்கொடை ...

சிதம்பரம்தாலுக்கா லால்பேட்டை ... மா. சிவக்கொழுந்து முதலியார் அவர்க... லத்தில் தமது தகப்பனார் மாசிலாமணி ... ருக்கு 3-9-31-ல் நடத்திய குருபூசை கா... த்த நன் கொடை

---

## பஞ்சாயத்து கோர்ட்டு தேர்தல்.

31—8—31 அன்று சந்துவாச்சாரி கிராமப் பஞ்சாயத்து கோர்ட்டு தேர்... ஸ்தானங்களில் செங்குந்த சமூகப் பிரதிநிதிகளாக திருவாளர்கள் T. K. ஆதிமூ... யார், மணியம் P. R. கிருஷ்ணசாமி முதலியார், பஞ்சாயத்து மெம்பர் T. R... மணி முதலியார் ஆகிய மூவரும் மூன்று ஸ்தானங்கள் பெற்றனர் என்பது கே... தும் மகிழ்வெய்துகிறோம்.

---


## ஒன்றரை ரூபாய்க்கு ஒரு பெரும் பொக்கிஷ,

# "செங்குந்த மித்திரன்"

உடனே வாங்குங்கள்! உயர்வடையுங்கள்!

உள்நாடு ரூ. 1—8—0. வெளிநாடு ரூ. 2—0—0.

தனிப் பிரதி 0—2—6.


This Journal is published by T. N. Sabapathi Mudaliar for the South Indian Sengunthar Mahajana Sangam, Madras, at 31, Armenian St., Madras, and is printed by A. Rangaswamy, at The Progressive Printers, 2-17, Coral Merchant St., Madras.